# உதயன்

பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 100 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 22 புதன்கிழமை (06/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


## ஓமந்தையில் நேற்றிரவு கெடுபிடி

வவுனியா, மார்ச் 6

போராட்டத்துக்காக கொழும்பு சென்ற, காணாமற்போனோர் உறவுகள் வவுனியாவில் மறிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட களேபரத்தால் ஓமந்தைச் சோதனைச் சாவடியில் நேற்றிரவு கெடுபிடி திடீரென அதிகரிக்கப்பட்டது.

கொழும்பு நோக்கிச்

பார்க்க பக்கம் 04


# காணாமற்போனோரின் உறவுகள் கொழும்பு செல்ல பொலிஸ் தடை

## இன்று போராட்டத்துக்கு தயாரான நிலையில் வவுனியாவில் களேபரம்

வவுனியா, மார்ச் 6

கொழும்பு நகரசபை மண்டபத்துக்கு முன்பாக இன்று இடம் பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக வன்னியில் இருந்து சென்ற பெண்கள் சிறுவர்கள் உள்ளிட்ட பல நூற்றுக்கணக்கான தம்மைப் பொலிஸார் வவுனியாவில் தடுத்து நிறுத்தியுள்ளனர் என்று அந்த மக்கள் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தனர். இறுதிப் போரின் போது காணாமல் போனவர்களின் உறவினர்களுக்கே பொலிஸார் தடை விதித்துள்ளனர் என்று அவர்களுடன் அங்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

தம்மைத் தடுத்து நிறுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கொழும்பு செல்லத் தம்மை அனுமதிக்கும்படி கேட்டும் பல நூற்றுக் கணக்கான மக்கள் நேற்று இரவு வவுனியா



நகரசபை வாயில் முன்பாக மெழுகுவர்த்தி ஏந்திப் போராட்டம் நடத்தினர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் பொலிஸாருடன் பேச்சு நடத்தியபோதும் மக்கள் கொழும்பு நோக்கிப் பயணிக்க அனுமதிக்கப்படவில்லை.

வவுனியா நகர சபை மைதானத்தில் 8 பஸ்களுடன் குழுமி இருந்த மக்களை சுற்றிவளைத்துப் பெரும் எண்ணிக்கையான பொலிஸாரும் கலகம் அடக்கும் பொலிஸாரும் நிறுத்தப்பட்டிருந்ததால் நள்ளிரவு வரை அங்கு கடும் பதற்றம் நிலவியது.

இலங்கையில் காணாமற் போனவர்கள் எவருமே இல்லையென்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் நிலையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் காணாமல்

பார்க்க பக்கம் 04

## நெல்லுக்கு நிர்ணய விலை

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் ஒரு கிலோ சம்பா நெல் 35 ரூபாவுக்கும் நாட்டரிசி நெல் ஒரு கிலோ 32 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக, யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை

பார்க்க பக்கம் 04

## பருவம் தப்பிய மழையினால் 13,500 ஏக்கரில் பயிர் நாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக பருவம் தப்பிப் பெய்த மழை காரணமாக 13 ஆயிரத்து 500 ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயச் செய்கை அழிவடைந்துள்ளதாக, யாழ். மாவட்ட விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவசாய அபிவிருத்திக்குழுக் கூட்டத்தில் விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் கமநல, விவசாயத் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதில் 2012 ஆம் ஆண்டு ஆரம்பத்தின் பின்னர் விவசாயிகளுக்கு ஒய்வூதியம் வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

பார்க்க பக்கம் 04

## இலங்கைத் தூதரகம் முற்றுகை தமிழகத்தில் 5,000 பேர் கைது

### ஸ்ராலின், திருமாவளவன் உட்பட

சென்னை,மார்ச் 6

தமிழ் ஈழம் ஆதரவாளர் அமைப்பு (டெசோ) சார்பில் நேற்றுச் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்ராலின், கி.வீரமணி, திருமாவளவன் மற்றும் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பிரபாகரனின் மகனை இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றதை கண்டித்தும், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது போர் குற்றங்களுக்கான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் தமிழ் ஈழம்

பார்க்க பக்கம் 04

## மஹிந்தவின் தலைக்கு ரூபா ஒரு கோடி பரிசு

மதுரை,மார்ச் 6

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு ரூபா 1 கோடி பரிசு வழங்கப்படும் என்று மதுரை சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவர உள்ள தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வலியுறுத்தியும்,

பார்க்க பக்கம் 04

## அரசியல் உரிமை கிட்டாவிட்டால் தமிழரின் கடலும் சூறையாடப்படும்

### கலைப்பீடாதிபதி சிவநாதன் கவலை

யாழ்ப்பாணம், மார்ச் 6

தமிழர்களுக்கு அரசியல் உரிமை ஒன்று இல்லாத வரைக்கும் தெற்கின் முதலாளிகளும் இந்தியாவின் முதலாளிகளும் தான் கடல் பிரதேசத்தைக் கையகப்படுத்தி வைத்திருப்பார்கள். இது ஏழை மக்களுக்குரியது. அவர்கள் ஆண்ட நிலமும் சார்ந்த கடலும் அவர்களுக்குரியது. அரசியல் அதிகாரம் கொண்டு அதை யாரும் பறித்து விட முடியாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி. சிவநாதன்.

பார்க்க பக்கம் 04

## கோப்பாய், கைதடி தபாலகங்களில் நள்ளிரவில் திருடர்கள் கைவரிசை

### நல்லூரிலும் நான்கு கடைகள் உடைப்பு

யாழ்ப்பாணம். மார்ச் 6

கைதடி, கோப்பாய் தபாலகங்களிலும் , கைதடிப் பிள்ளையார் கோயிலிலும் நேற்றுமுன்தினம் இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இதன் போது பல லட்சம் ரூபா பெறுமதியான முத்திரைகள், பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரவித்தனர்.

அத்துடன் நல்லூர் செட்டித்தெரு பகுதியிலும் நேற்று முன்தினம் இரவு நான்கு கடைகள் உடைத்து திருட்டு இடம்பெற்றுள்ளது.

கைதடித் தபாலகத்தில் வைக்கப்பட்டிருந்த பாதுகாப்புப் பெட்டகத்திலிருந்து 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுடைய முத்திரைகள் மற்றும் 75 ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக தெரி

பார்க்க பக்கம் 04

## படை அதிகாரிகளும் ஜெனிவாக் களத்தில்

### போர்க் குற்றச்சாட்டுக்களை பலமாக மறுத்துரைக்க

கொழும்பு, மார்ச் 6

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப் போரின் போது பாதுகாப்புப் படைத்தரப்பில் உயர் பதவிகளை வகித்த அதிகாரிகள் அடங்கிய விசேட குழுவொன்று ஜெனிவா விரைந்துள்ளது.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற சம்பவங்களின் உண்மை நிலவரங்களை பன்னாட்டு இராஜதந்திரிகளுக்குத் தெளிவுபடுத்தும் முகமாகவே படை அதிகாரிகள் ஜெனிவாவுக்குப் படையெடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும்

பார்க்க பக்கம் 04


தற்போது பரபரப்பாக சூடுபிடிக்கும் விசா ஆலோசனைகள்

ஆஸ்திரேலியாவில் நிரந்தர குடியுரிமை பெற்று வணிகம் செய்ய விசா

6 மாத காலத்தில், உங்கள் ஆவணங்களுடன் ஆலோசனைக்கு அணுகுங்கள்

நியூசிலாந்தில் படிப்பைத்தொடர A/L மட்டும் போதும்.

நிரந்தர குடியுரிமை பெற, பகுதிநேர தொழில் வாய்ப்பிற்கு சட்ட ஆலோசனை.

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

173, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(34140)(6.7) 021 221 9016, 021 568 9090


## படைகளுக்கு யாழ். மாவட்டத்தில் காணிகள் சுவீகரிப்பு முழு வீச்சில்

யாழ்ப்பாணம், மார்ச் 06

யாழ். மாவட்டதில் படையினருக்கும் பொலிஸாருக்குமான காணிகளைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இதற்காகக் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. இதன் பதவி நிலை உத்தியோகத்தராக முன்னாள் வடமாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி நியமிக்கப்பட்டுள்ளார் என யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

காணி மற்றும் காணி அபி

பார்க்க பக்கம் 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் பார்வதிநாதசிவம் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம்,மார்ச் 06

தமிழ் அறிஞரும், மூத்த பத்திரிகையாளருமான புலவர் ம.பார்வதிநாத சிவம் தமது 78ஆவது வயதில் நேற்றுக் காலமானார்.

ஐந்து தலைமுறைகளாக தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் தொண்டாற்றிய, உரையாசிரியர்கள் மரபில் உதித்தவர் அவர்.

மரபுக் கவிதைகளை இயற்றுவதில் வல்லவரான அவரின் இலக்கியப் பணி மிக உச்சமானது. தமிழ் இலக்கணம், இலக்கியம் தொடர்பில் ஏற்படும் சந்தேகங்களை அறிந்தவர் அறியாதவர் என்று எவர் நாடினாலும் தீர்த்து வைப்பதில் வல்லவராக அவர் விளங்கினார். சிறந்த தமிழ்ப் புலமையாளர்.

தமிழ்ப் பத்திரிகைத் துறையில் நீண்ட காலம் பணியாற்றிய அவர் அத்துறையின் வளர்ச்சிக்குப் பங்காற்றியவர். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ''ஈழநாடு'', ''முரசொலி'' பத்திரிகைகளில் கடமையாற்றியவர். உதயனின் ஆசிரியர் பீடத்தில் பல ஆண்டுகள் பணிபுரிந்த அவர் ''சஞ்சீவி''யின் பொறுப்பாசிரியராகவும் சேவையாற்றினார்.

உதயன் நிறுவனப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் தரமான பல இலக்கிய ஆக்கங்களை அதற்கு நல்கியவர். அவரது கவிதைகள் தனிச் சிறப்புடையவை. (அ)

# இலங்கை இழைத்த தவறுகளால் அமெ.கொள்கையில் மாற்றங்கள்

நியூயோர்க்,மார்ச் 06

மனித உரிமைகளுடன் தொடர்புடைய விவகாரங்களுக்குப் பதிலளிப்பதில் முன்னேற்றத்தைக் காண்பிக்கத் தவறியதன் பின்னர், இலங்கை தொடர்பான அமெரிக்கக் கொள்கை மாற்றமடைந்துள்ளதென அமெரிக்காகூறியுள்ளது.

ஜனநாயகம், மனிதஉரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் மைக்கல் எச் போஸ்னர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமான, சார்பற்ற, அமைப்பான வெளிவிவகாரச் சபையில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் 2009இல் நடந்த சம்பவங்கள் தயக்கத்தை அளித்தன. ஐ.நாவிலும் பிற இடங்களிலும், விசாரணை ஆணைக்குழுவொன்று உருவாக்குவதற்கான நகர்வுகளே இருந்தன. ஆனால் நாம் அதை ஏற்கவில்லை. எவ்வாறாயினும், கடந்த ஆண்டு, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு அழைப்பு விடுக்கும் மிகவும் சிக்கலான தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்காவே கொண்டு வந்தது.

இலங்கை மற்றும் அதன் கூட்டாளி நாடுகளின் எதிர்ப்புகள் இருந்த போதிலும், அந்தத் தீர்மானத்தை அமெரிக்கா நிறைவேற்றியது. நாம் அதற்காக மிகப்பெரிய இராஜதந்திர முயற்சிகளை மேற்கொண்டோம். அது உண்மையிலேயே எமது கொள்கையில் பகுதியளவு மாற்றத்தைப் பிரதிபலித்தது. ஏனென்றால், இலங்கையின் நிலையில் எம்மால் முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை.

அரசுக்கு உள்ளேயும், வெளியேயும் நிறையவே ஆலோசனைகள் வழங்கப்பட்டிருந்தன. இலங்கை அரசுடன் இறுக்கமான கலந்துரையாடல்களை நடத்தினோம். ஒரு தொகுதி மனித உரிமை விவகாரங்கள் குறித்து எமது பிரதிச் செயலர்களில் ஒருவர் அங்கு பிரச்சினை எழுப்பினார். மீண்டும் தற்போதைய கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான தீர்மானத்தைக் கொண்டு வருவோம். சவால்ளை எதிர் கொண்டுள்ள போதிலும், இலங்கையுடனான நெருக்கடிக்குத் தீர்வு காணலாம் என்பதே எனது கருத்து- என்றார். (த)

# ஆசிரியர் இடமாற்றம் தொடர்பில் முறைப்பாட்டு விசாரணை நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் மீது கடந்த 28 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்ட விசாரணைகள் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக இலங்கை மனித உரிமை அணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ந.கனகராஜ் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடமாற்றம் கோரி விண்ணப்பித்த 94 ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவில்லை. இதனை எதிர்த்து அவர்களால் மேன்முறையீடு செய்யப்பட்ட போதும், மேன் முறையீடு ஏற்றுக் கொள்ளப்பட்டதா? அல்லது நிராகரிக்கப்பட்டதா? என்பது தொடர்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இதனையடுத்து குறித்த ஆசிரியர்களினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் கடந்த 26 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டது.

ஏற்கனவே இடமாற்றம் தொடர்பாக பல முறைப்பாடுகள் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கிடைத்திருந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட ஆசிரியர்களின் முறைப்பாட்டையும் ஒன்றாக இணைத்து விசாரணை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய கடந்த மாதம் 28 ஆம் திகதி விசாரணை இடம்பெற்றிருந்த போதும், இடமாற்றச் சபையின் தலைவரும் வடமாகாண கல்விப் பணிப்பாளருமான பி.செல்வராஜா பங்குபற்றாமையால் பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் குறித்து விசாரணைகள் நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் ந.கனகராஜ் தெரிவித்துள்ளார்.(த-5)

# பிரதேச சபையின் ஊழியர் மீது ஈ.பி.டி.பி. உறுப்பினர் தாக்கு

**பதிலுக்கு அவரும் முறைப்பாடு**

யாழ்ப்பாணம், மார்ச் 6

சுன்னாகம் பிரதேச சபை ஊழியர் ஒருவரை ஈ.பி.டி.பியின் வலி.வடக்கு அமைப்பாளர் தாக்கினார் என தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை குறித்த ஊழியர் தன்னைத் தாக்கினார் என ஈ.பி.டி.பியின் அமைப்பாளரும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பிரதேச சபை ஊழியர்கள் கழிவுகளைக் கொட்டுவதற்காக கீரிமலை பகுதிக்குப் பிரதேச சபை வாகனத்தில் சென்றுள்ளனர்.

அப்போது அங்கு வந்த வலி.வடக்கு பிரதேச சபை எதிரணி உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் வலி.வடக்கு அமைப்பாளருமான ஜெயபாலசிங்கம் (சண்டி) பிரதேச ஊழியர்களுடன் முரண்பட்டுள்ளார். உங்களை இங்கே கழிவுகளைக் கொட்ட அனுமதித்தது யார்? என்று தெரிவித்து வாகனச் சாரதியான கணேசவேலைத் தாக்கியுள்ளார் என்கிறது முறைப்பாடு.

இதனையடுத்து மற்றைய ஊழியரான ராஜலிங்கம் ஈ.பி.டி.பி. அமைப்பாளரைத் தாக்கினார் என்கிறது பதில் முறைப்பாடு.

பிரதேச சபை வாகனச் சாரதி ஈ.பி.டி.பியின் அமைப்பாளர் தன்மீது தாக்குதல் நடத்தினார் எனத் தெரிவித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாடு மீது தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-5-86)

# மாடியிலிருந்து விழுந்தது கல் மாணவிகள் மூவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தனியார் கல்வி நிறுவனத்துக்கு அருகிலுள்ள கட்டட மாடியிலிருந்து கற்கள் கூரையைப் பிய்த்துக் கொண்டு வீழ்ந்ததில் மாணவிகள் 3 பேர் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

சம்பவம் யாழ். மின்சார நிலைய வீதியிலுள்ள வெளிநாட்டு மொழிக் கற்கை நிலையம் ஒன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை முற்பகல் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில், குப்பிழானைச் சேர்ந்த மோகன் கான்சிகா (வயது-20), பருத்தித்துறையைச் சேர்ந்த சரவணபவன் பத்மலோஜினி (வயது-22), புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த ப.சரினா (வயது-21) ஆகியோரே காயமடைந்தனர்.

இந்த மூவர் உட்பட சுமார் 15 பேர் சம்பவ நேரம் கற்றலில் ஈடுபட்டிருந்தனர். தனியார் நிறுவனத்துக்கு அருகில் பிறிதொரு கட்டடத்தின் மாடியில் கட்டட வேலை நடைபெற்றுக் கொண்டிருந்துள்ளன. அந்த நேரமே மாடியிலிருந்து கற்கள் கல்வி நிலையக் கூரைமீது விழுந்துள்ளன. அவ்வாறு விழுந்த கற்கள் கூரையையும், உள்ளே அமைக்கப்பட்ட கூரையையும் பிய்த்துக் கொண்டு மாணவிகள் மீது விழுந்துள்ளன. அதனால் மூன்றுபேரும் காயமடைந்தனர்.

கட்டட வேலைகள் இடம்பெற்ற போதும் உரிய பாதுகாப்பு முன்னேற்பாடுகள் இல்லாமல் செயற்பட்டமையாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதெனக் கல்விநிலையத் தரப்பினர் தெரிவித்தனர். இதுதொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# ஜெனிவா பிரேரணையில் அமெ. இறுக்கமாக இருப்பது அவசியம்

**யாழ்.வந்த தூதரக அதிகாரிகளிடம் கூட்டமைப்பு வலியுறுத்து**

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவரும் பிரேரணை எந்தவொரு தரப்பினாலும் பலவீனப்படுத்த முடியாதளவுக்கு இறுக்கமானதாக இருக்க வேண்டும் என்று யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அமெரிக்கப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

> இந்த ஆண்டும் அமெரிக்காவினால் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதை வரவேற்கின்றோம்.

வடக்கிற்கான பயணத்தை மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த அமெரிக்கத் தூதரக அதிகாரி ஜேக்கப் தலைமையிலான குழுவினரை இலங்கைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சீ.வி.கே.சிவஞானம் தலைமையிலான குழுவினர் உதயன் விருந்தினர் விடுதியில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே மேற்படி கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்ப்பாணத்தில் கருத்துச் சுதந்திரம் என்பது இல்லாமலே போய்க் கொண்டிருக்கிறது. மக்கள் தங்களின் அரசியல், வாழ்வாதார உரிமைகளை வெளிப்படுத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு முதலில் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இந்தப் பிரேரணை வலுவானதாக ஆரம்பத்தில் காணப்பட்டபோதும் இந்தியத் தலையீட்டினால் அது பலமிழக்கச் செய்யப்பட்டது.

இந்த ஆண்டும் அமெரிக்காவினால் பிரேரணை கொண்டுவரப்படவுள்ளதை வரவேற்கின்றோம். இந்தப் பிரேரணை எந்தவொரு தரப்பினாலும் பலவீனப்படுத்தப்பட முடியாதளவுக்கு இறுக்கமான நிலைப்பாட்டை அமெரிக்கா எடுக்க வேண்டும்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்தும் மறைமுக நிகழ்ச்சிநிரல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்கான குரலாக உள்ள தேசியக் கூட்டமைப்பை பலவீனப்படுத்துவதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை முடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது - என்று சுட்டிக் காட்டப்பட்டது. (த-5)

# மாநகர சபைக் கட்டடப் பணியை கட்டம் கட்டமாக மேற்கொள்க

**யாழ். வந்த ஜனாதிபதி பணிப்புரை**

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். மாநகர சபையின் புதிய கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 700 மில்லியன் ரூபா தேவை என்று ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு, முற்றுமுழுதான நிதி கிடைக்கும் வரை பார்த்திருக்காமல் கட்டம் கட்டமாக நிதியைப் பெற்று இந்த ஆண்டே வேலைகளை ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி பதிலளித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

> யாழ்.மாநகர சபைக்குத் தீயணைப்பு வாகனம் அவசர தேவையாக உள்ளமை சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் யாழ்.மாவட்ட விசேட அபிவிருத்திக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது இதன் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தில் எதிர் கொள்ளப்படும் சவால்கள் தொடர்பில் யாழ். மாவட்ட செயலகத்தால் அறிக்கையிடப்பட்டிருந்தது.

இதில் யாழ்.மாநகர சபை 1987 ஆம் ஆண்டு முதல் நிரந்தர கட்டடம் இல்லாமல் இயங்கி வருகின்றது. புதிய கட்டடம் அமைப்பதற்கு 700 மில்லியன் ரூபா நிதி தேவைப்படுவதாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என கோரிக்கை ஜனாதிபதியிடம் முன்வைக்கப்பட்டது.

இதற்கு ஜனாதிபதி, 700 மில்லியன் ரூபா நிதி முழுமையாகக் கிடைக்கும் வரையில் பார்த்துக் கொண்டிருக்க வேண்டாம். கட்டம் கட்டமாக நிதியைப் பெற்று வேலையை ஆரம்பியுங்கள். இந்த ஆண்டே வேலையைத் தொடங்குங்கள் எனக் கூறியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் யாழ்.மாநகர சபைக்குத் தீயணைப்பு வாகனம் அவசர தேவையாக உள்ளமை சுட்டிக் காட்டப்பட்டது. அதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளூராட்சி அமைச்சின் செயலருக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இருப்பினும் இதுவரையில் மாநகர சபைக்கு தீயணைப்பு இயந்திரம் வழங்கப்படவில்லை.

அத்துடன் நகரில் 90.46 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் திருத்தப்பட வேண்டியிருப்பதாகவும் அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிலைச் செய்கை மழையினால் நாசம்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

யாழ்.குடாநாட்டில் நேற்று முன்தினம் பெய்த மழை காரணமாக பயிரிடப்பட்டு, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் அறுவடைக்கு தயாராக இருந்த புகையிலை கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வலிகாமம், தென்மராட்சி,வடமராட்சிப் பகுதிகளில் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள பல நூற்றுக்காணக்கான விவசாயிகள் மழையில் புகையிலை நனைந்தமையால் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

புகையிலை அறுவடைக்கு இன்னும் இரண்டு வாரங்களே உள்ள நிலையில் கடந்த திங்கட்கிழமை முதல் மழை பெய்து வருகிறது. இதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட புகையிலைகள் நாசமாகியுள்ளன.

அத்துடன் வெட்டி உலர வைக்கப்பட்டிருந்த புகையிலையும் மழையில் நனைந்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(த-9-17-86)

## புனரமைக்கப்படாத வடிகால்கள்



யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். நகரப் பகுதிகளில் அகலிப்புக்குட்பட்ட வீதிகளின் ஓரங்களில் வெட்டப்பட்டுள்ள அதிகளவான வடிகால்கள் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் மழை நேரத்தில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக கே.கே.எஸ் வீதி, பண்ணை வீதி மற்றும் முற்றவெளியில் பிரதான வீதி ஆகியவற்றில் வெட்டப்பட்ட வடிகால்கள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் இந்தப் பகுதிகளில் மழை வெள்ளம் வழிந்தோட முடியாதவாறு தேங்கிக் காணப்படுவதால் நுளம்புகள் பெருகும் அபாயம் உள்ளதெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் வெட்டப்பட்ட வடிகால் கள் மழை காரணமாக தூர்ந்து போகும் நிலையில் காணப்படுகின்றன. இது குறித்து உரியவர்களை அக்கறை செலுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

## மரக்கறி, சிறுதானியப் பயிர்கள் திடீர் மழையினால் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 6

*காலம் மாறிப் பெய்த மழையினால் காலபோக நெற்செய்கையில் பெருநட்டமடைந்த விவசாயிகள் மேற்கொண்ட சிறுதானிய மற்றும் மரக்கறிப்பயிர்களும் நேற்று முன்தினம் முதல் பெய்துவரும் மழையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.*



கடந்த வருட காலபோக நெற்செய்கை தொடக்கம் நெல் அறுவடை வரையான காலப்பகுதியில் இடையிடையே பெய்த பெரு மழையினால் நெற்செய்கையாளர்கள் சிறந்த அறுவடையைப் பெற முடியாமல் தவித்தனர்.

நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் வெள்ளம் தேங்கி நின்று வற்றியதால் அவற்றில் கௌப்பி, உழுந்து, பயறு, சணல், எள் போன்ற சிறு தானியப் பயிர்களை பயிரிட்டனர்.

20 வருடங்களின் பின்னர் தென்மராட்சி மேற்குப் பிரதேசத்தில் மாடுகள் மூலம் உழவு மேற்கொண்டு சிறுதானியப் பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் பெய்த பெருமழையினால் வயல்களில் வெள்ளம் ஏற்பட்டதால் விதைக்கப்பட்ட சிறுதானியப் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி அழிந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மழை காரணமாக மரக்கறிப் பயிர்களும் அழிவடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளன.

குறிப்பாகத் தோட்டங்களில் பயிரிடப்படும் கரட், வெங்காயம், கோவா, கீரை, பீற்றூட் போன்ற மரக்கறி வகைகள் வெள்ளத்தில் மூழ்கி அழிவடையும் நிலையில் உள்ளன.

அறுவடை நெருங்கிய நேரத்தில் மழைபெய்தமையால் மரக்கறிகள் மூலம் கிடைக்கவிருந்த பலனைப் பெறமுடியாது போயுள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (த-9-17)

## பணியினர் தேவைக்கு இலவசமாக மாநகர சபைகளின் பஸ் சேவைகள்

*யாழ்ப்பாணம்,மார்ச் 6*

*யாழ்.மாநகர சபைப் பணியாளர்களின் பொதுவான தேவைகளுக்கு சபையின் பஸ் சேவையை இலவசமாகப் பயன்படுத்த முடியும். இது தொடர்பான தீர்மானம் ஒன்று மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப் பட்டுள்ளது.*

*யாழ்.மாநகர சபையின் பணியாளர்களின் சுப வைபவங்கள், மரணச்சடங்குகள் என்பவற்றில் சக பணியாளர்கள் கலந்து கொள்வதற்கு மாநகர சபையின் பஸ் சேவையை இலவசமாகப் பயன்படுத்த முடியும் எனச் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.*

*சபையின் இந்த பஸ்கள் தற்போது மாநகர சபைக்கு உட்பட்ட பகுதியில் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக கரையோர பிரதேசங்களில் மக்களின் போக்குவரத்துக்கு இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன. (த-17)*

## மகளிர் தின நிகழ்வுகள் யாழில்

யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள தியாகி அறக்கொடை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவசந்திரன், சிறப்புரையை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா, யாழ்.பல்கலைக்கழக சித்தி வைத்தியத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர், வைத்திய கலாநிதி திருமதி சிறிறஞ்சினி சிவபாலன், யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி திருமதி பவானி, தேசிய கல்வி நிறுவன யாழ்.பிராந்திய இணைப்பாளர் திருமதி தனலஷ்மி வில்வநாதன் ஆகியோர் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவச கல்வி நிலையம் வழங்கும் ''பெண்ணியம்'' எனும் நாடகமும் ''பெண்கள் உரிமைகள்'' எனும் நூல் வெளியீடும் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஸன் கலந்துகொள்வார். (த-14)

## புதிய வேதாள வெங்காயத்தை விவசாயிகளுக்கு வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 6

தொண்டமானாறில் மேற்கொள்ளப்பட்ட வேதாள வெங்காயச் செய்கையை அறுவடை செய்து அதனை விவசாயி களுக்குப் பகிர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படு கிறது.

உண்மை விதையில் எடுத்து உற்பத்தி செய்யப்பட்ட இந்த வேதாள வெங்காயத்தை நடுகை செய்வதற்கு விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டியுள்ளனர். இதனையடுத்து அவர்களுக்கு இதனைப் பகிர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

தொண்டமானாறுப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் இந்த வேதாள வெங்காயச் செய்கை மூலம் அதிகளவு விளைச்சலைப் பெற்றுள்ளார். அறுவடையின் பின்னர் அந்த விவசாயி ஒவ்வொரு விவசாயிக்கும் ஐந்து கிலோப் படி வேதாள வெங்கா யத்தை நடுகைக்கு விநியோகிப்பதற்கு இணங்கியுள் ளார்.

இதனை அடுத்தே விவசாயிகளுக்கு இந்த வேதாள வெங்காயம் பகிர்ந்து விநியோகிக் கப்படவுள்ளது. (த-17)

## வைத்தியசாலை வளாகத்துக்குள் கழிவுகள் வீச்சு

வடமராட்சி,மார்ச்6

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வளவுக்குள் குப்பைகள், வெற்றுப் பியர், மதுபானப் போத்தல்களை வீசுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலையின் வடமேற்குப் பகுதியிலிருந்து இவை வீசப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இது போன்ற விசமத்தனமாக நடவடிக்கைகளில் ஈடுபடாமல் வைத்தியசாலை வளவை சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைப்பு வழங்குமாறு வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.(த-8)

## இந்திய கல்விக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

ஈ.டி.சி.ஐ.எல் நிறுவனமும் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகமும் இணைந்து நடத்தும் இந்தியக் கல்விக்கண்காட்சி யாழ்.மத்திய கல்லூரி றொமெலின்குக் மண்டபத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.




இந்தக் கண்காட்சியை வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் இந்தக் கண்காட்சியில் ஆந்திரா மாநிலம், மஹா ராஷ்டிரா மாநிலம், புதுடில்லி, கர்நாடகா மாநிலம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 7 நிறுவனங்கள் பங்கு கொண்டுள்ளன.

இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கமும் கலந்து கொண்டார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இந்தியா உலகின் இரண்டாவது மிகப்பெரிய உயர் கல்வி வலையமைப்பாக உள்ளது. முன்னர் 20 பல் கலைக் கழகங்கள் மற்றும் 500 கல்லூரிகள் இருந்தன. இன்று 300 இற்கும் மேற்பட்ட மாநிலப் பல்கலைக் கழகங்கள் உட்பட 550 இற்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள் அங்கு உள்ளன.

இந்திய அரசு கடந்த வருடத்திலிருந்து இலங்கை மாணவர்களுக்கான புலமைப் பரிசிலை அண்ணளவாக 3 மடங்காக அதிக ரித்து 290 இடங்களை ஒதுக்குகிறது. இந்தப் புலமைப் பரிசில் திட்டத்தில் பொறியியல், அறிவியல், கலை, நுண்கலை மற்றும் பல் துறைகள் உள்ளடங்குகின்றன. ஆயிரத்து 500 இக்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்விக்காக இந்தியா சென்றுள்ளனர்.

ஈ.டி.சி.ஐ.எல். நிறுவனமானது பல்வகைப்பட்ட சேவைகளை வழங்குகிறது. நிறுவன அபிவிருத்தி, புதிய நிறுவன உருவாக்கம் என்பவற்றை நோக்காகக் கொண்டு சாத்திய ஆய்வு, திட்ட அறிக்கை தயாரித்தல் உள் ளிட்ட சேவைகளை வழங்குவதுடன் சர்வதேச மாணவர்களுக்கு அனுமதிகளையும் வழங்குகிறது- என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.எழில்வேந்தன், வணிகர்கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங் கோவன், புதுடில்லியிலி ருந்து வருகை தந்த கல்வி ஆலோசகர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

(த-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படைகளுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விருத்தி அமைச்சினால் மாவட்டக் காரியாலயம் திறக்கப்பட்டுள்ளதென்றும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தும் நோக்குடனேயே இந்த அலுவலகம் திறக்கப்பட்டதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்த அலுவலகத்தினூடாக படையினருக்குத் தேவையான காணிகளை யாழ். மாவட்டத்தில் சுவீகரிப்பதுடன் உரியவர்களுக்கு நஷ்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுப்பதுமே மேற்கொள்ளப்படவுள்ளதாக காணி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

''பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட தனியார் காணிகள், பாதுகாப்புத் தேவைகளையும் கருத்தில் கொண்டு, மிக விரைவில் விடுவிக்கப்பட வேண்டும். இதனால் காணி இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது திட்டவட்டமான கால கட்டத்திற்குள் நஷ்ட ஈடு வழங்கப்பட வேண்டும்'' என்று நல்லிணக்க ஆணைக்குழு பரிந்துரை செய்திருந்தது.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள தனியார் காணிகள் மக்களுக்கு வழங்கப்படமாட்டாது என்றும் இந்தக் காணிகளுக்குத் தற்போதைய சந்தைப் பெறுமதியில் நட்ட ஈடு வழங்கப்படும் என்றும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

தங்களின் காணிகள் படையினரால் சுவீகரிக்கப்படுவதற்கு மக்கள் வெளிப்படையாகத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். வலி. வடக்கு மக்கள் தமது காணிகளை வழங்குமாறு கோரி கடந்த பெப்ரவரி மாதம் உண்ணாவிரதப் போரட்டத்தையும் நடத்தியிருந்தனர்.

இதனை விட அந்தப் பகுதி மக்கள் தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாகத் தெரிவித்து ஏற்கனவே உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கலும் செய்துள்ளனர்.

மேலும் மக்களின் காணிகள், வாழிடங்கள் படையினரால் சுவீகரிக்கப்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பத்திலிருந்தே தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகிறது.ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, படையினர் வசமுள்ள காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என்று இன்னமும் கூறி வருகின்றார்.

அமைச்சர் இவ்வாறு தெரிவித்து வருகின்ற போதும் அவர் அங்கம் வகிக்கின்ற அரசினாலேயே காணிகளை முப்படையினருக்கும் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (த-5)

## அரசியல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நலன்புரி நிலையங்களில் உள்ள பாடசாலை சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மருதனார்மடம் விவசாயக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பீடாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது :-

ஏழை மக்களின் உரிமைகளையும் சொத்துக்களையும் பறிப்பது ஜனநாயகம் அல்ல.

எல்லாவற்றுக்கும் அரசியல் உரிமை என்பதே முக்கியமானது. அரசியல் உரிமை வழங்கப்பட்டால் தங்களைத்தாங்களே வளர்த்துக் கொள்ளும் தன்மையை மக்கள் பெற்றுக் கொள்வார்கள்.

இலங்கையில் வாழும் அனைவருக்கும் ஊர், கிராமம் உண்டு. ஆனால் இந்தக் குழந்தைகளை கேட்டால் அகதி, நலன்புரி நிலையத்தில் வாழ்கிறோம் என்றே கூறுவார்கள். இவர்களுக்கென கோயில், பாடசாலை, வீடுகள், சூழல் என எதுவுமில்லை. அடையாளம் இல்லாது மாற்றப்பட்டுள்ளனர்.

அரசியல் வாதிகள் சூதாட்டம் ஆடுகின்றனர். அதில் எங்களைப் பகடைக்காய் ஆக்குகின்றனர். சூதாட்டக்காரருக்கு அறம் தெரியாது. வரலாறு தெரியாது. பணம் உழைப்பதே அவர்களின் ஒரே நோக்கம்.

இன்று வடக்கின் வசந்தம் என்று கூறப்படுகிறது. அதை அனுபவிப்பது அரசியல் வாதிகள்தான். பெரும் வீதிகள் போடப்படுகின்றன. கொழும்பிலிருந்து வரும் முதலாளிகள் இங்கே சூதாட்டம் ஆடிவிட்டு பல லட்சங்களை அள்ளிச் சென்று விடுகின்றனர். மக்களின் பொருளாதாரத்தை அழித்துச் செல்கின்றனர்.

பிள்ளைகளின் எதிர்காலம் சுபீட்சமாக அமையவேண்டுமென்றால் ஒன்றாகப் பாடுபடவேண்டும். எங்களின் சுமைகளை பிள்ளை மீது சுமத்துவது நாகரிகம் அல்ல. இந்தச் சிறுவர்கள் பிரச்சினைகளை நேரடியாக அறியாதவர்கள்- என்றார். (த-13)

## மஹிந்தவின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஜனாதிபதி ராஜபக்ஷவைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும் தமிழகம்,புதுச்சேரியில் வழக்கறிஞர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயர் நீதிமன்ற மதுரைக் கிளை முன்பாகவும், வழக்கறிஞர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்திலும், சாலை மறியலிலும் ஈடுபட்டனர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் பீற்றர் ரமேஷ் குமார்,'' போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலையைக் கொண்டு வருவோருக்கு 1 கோடி ரூபா பரிசாக வழங்கப்படும். மேலும் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமியை தமிழகத்தில் யார், எங்கு பார்த்தாலும், அவரை அந்த இடத்திலேயே அடிக்க வேண்டும் என்று கூறினார். (த-சி)

## படை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் நிலவரங்கள் தொடர்பில் இலங்கைப் பிரதிநிதிகள் குழு விளக்கமளித்து வருகின்றது.

இவ்வாறு இலங்கைக் குழு தமது பணியை முன்னெடுக்கையில், அநேகமானோர் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பிலேயே கேள்விக்கணைகளைத் தொடுக்கின்றனர்.

இதனையடுத்தே இறுதிக்கட்ட போரின் போது பாதுகாப்புத்துறையில் உயர் பதவிகளை வகித்த அதிகாரிகளை அழைத்து அவர்களினூடாக போர்க்குற்றச்சாட்டு விவகாரத்துக்கு பதிலளிப்பதற்கு இலங்கைக் குழு முடிவெடுத்துள்ளது.

இதன் பிரகாரம் ஜெனிவா சென்றுள்ள பாதுகாப்புத்துறை அதிகாரிகள், இறுதிக்கட்ட களநிலவரங்கள் தொடர்பில் விரிவான விளக்கங்களை முன்வைப்பார்கள் என அறியமுடிகின்றது.

இலங்கை விவகாரம் ஜெனிவாவில் சூடு பிடித்திருந்த நிலையில், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களைக் காண்பிக்கும் 'மோதல் தவிர்ப்பு வலயம்' என்ற ஆவணப்படம் ஜெனிவாவில் ஒளிபரப்பப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட இராஜதந்திரிகள் இந்த ஆவணப்படத்தைப் பார்வையிட்டனர்.

அதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் எதிர்வரும் 15 ஆம் திகதி இலங்கை விவகாரம் விவாதிக்கப்படவுள்ளது. இதன்போது தமது தரப்பு நியாயங்களை முன்வைக்க இலங்கைத் தரப்புக்கு 20 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (த-சி)

## இலங்கைத்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ஆதரவாளர் அமைப்பு (டெசோ) சார்பில் சென்னையில் நேற்று இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடந்தது.

தி.மு.க பொருளாளர் மு.க.ஸ்ராலின் இதற்குத் தலைமை தாங்கினார். திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி, விடுதலை சிறுத்தைகள் தலைவர் திருமாவளவன், சுப.வீரபாண்டியன், சுப்புலட்சுமி ஜெகதீசன், ரவிக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். காலை 9 மணிக்கு கறுப்புச் சட்டை அணிந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள், வள்ளுவர் கோட்டம் அருகே குவிந்தனர். காலை 10 மணிக்கு மு.க.ஸ்ராலின் வந்தார். அங்கு அமைக்கப்பட்டு இருந்த சிறிய மேடையில் மு.க.ஸ்ராலின், தி.மு.க மாவட்ட செயலாளர்கள் ஜெ.அன்பழகன், ஆர்.டி. சேகர், மாதவரம் சுதர்சனம், தா.மோ.அன்பரசன் ஆகியோர் இருந்தனர்.

முதல் கட்டமாக மாவட்டச் செயலாளர் ஜெ.அன்பழகன் தலைமையில் ஆயிரக்கணக்கான தொண்டர்கள் தூதரகத்தை முற்றுகையிடச் சென்றனர். அவர்களைத் தடுத்து நிறுத்தி பொலிஸார் கைது செய்தனர். அதன் பின், மு.க.ஸ்ராலின், கி.வீரமணி, திருமாவளவன் ஆகியோர் முன்னிலையில் ஆயிரக்கணக்கில் தொண்டர்கள் தூதரகத்தை முற்றுகையிட சென்றனர். அப்போது, ஜனாதிபதி ராஜபக்ஷவைக் கண்டித்துக் கோஷம் எழுப்பினர். மஹிந்தவின் உருவ பொம்மையையும் கொளுத்தினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து, ஸ்ராலின், வீரமணி, திருமாவளவன் மற்றும் 5000க்கும் மேற்பட்ட தொண்டர்களைப் பொலிஸார் கைது செய்து வாகனத்தில் ஏற்றி அனைவரையும் எழும்பூர் ராஜரத்தினம் அரங்குக்குக் கொண்டு சென்றனர். அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இலங்கைத் தூதரகம் முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (த)

## கோப்பாய்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
விக்கப்பட்டது.கோப்பாய் தபாலகத்துக்குள் புகுந்த திருடர்கள் பாதுகாப்புப் பெட்டகத்தை உடைக்க முயற்சி செய்துள்ளனர். அது பயனளிக்காமையால் தூக்கிச் செல்ல முற்பட்டுள்ளனர்.அதுவும் பயனளிக்காத நிலையில் தேடுதல் நடத்தி மேசையில் வைக்கப்பட்டிருந்த ஆயிரம் ரூபா பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர்.

கைதடித் தபாலகத்திலும் கதவை உடைத்து உள் நுழைந்து திருட்டு இடம் பெற்றுள்ளது.அங்கிருந்த பாதுகாப்புப் பெட்டகத்தை உடைக்க முயற்சித்தும் அது முடியாமையால் அவர்கள் பெட்டகத்தையே தூக்கிச் சென்றுவிட்டனர். அதற்குள் இருந்த 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இதேவேளை கைதடி கிழக்கு பிள்ளையார் கோயிலில் வைக்கப்பட்டிருந்த உண்டியலும் பணத்துடன் திருடப்பட்டுள்ளது.

யாழ். நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்கு முன்பாகவும், யாழ். நகரிலுமாக நேற்று முன்தினம் இரவு நான்கு கடைகள் உடைக்கப்பட்டு 2 இலட்சத்து 83 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் 14ஆயிரம் ரூபா பணம் என்பன திருடப்பட்டுள்ளன. இவை தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

நல்லூர்க் கந்த சுவாமி கோயில் முன்பாக உள்ள பலசரக்குக் கடையின் பூட்டுக்களை உடைத்து உள் நுழைந்த திருடர் 'கிற்' காட்டுகள் சிகரெட்டுக்கள் என 15 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பொருள்களையும் 8 ஆயிரம் பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

அதற்கு அருகிலுள்ள கடையின் 6 பூட்டுக்களையும் உடைத்து உள் நுழைந்த திருடர்கள் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான 'கிற்' காட்டுகள், 10ஆயிரம் ரூபா பெறுமதியான சிகரெட் பெட்டிகள், 3 ஆயிரம் ரூபா பெறுமதியான சோடாரின்கள் என்பவற்றையும் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அழகு சாதனப் பொருள்களையும் 8 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடியுள்ளனர். பின்னர் முன்னர் இருந்தமை போன்று கதவை மூடி பூட்டுகளையும் கொழுவிவிட்டுச் சென்றுள்ளனர்.

மற்றோரு உணவு நிலையத்தை உடைத்து

## காணாமல்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
போனோர் தொடர்பான விடயத்தை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டு வரும் வகையில் கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை இன்று நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் கலந்து கொள்வதற்கென யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவுகள் நூற்றுக் கணக்கானவர்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று ஒன்று கூடினர்.

அவர்களை 10 பஸ்களில் அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

பஸ்கள் புறப்பட ஆயத்தமான போது, ''இரவு 8 மணியளவில் வந்த பொலிஸார், எம்மைத் தடுத்து நிறுத்தினர். சிங்களப் பகுதிகளில் இந்த பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது எனவும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு எங்களைத் தொடர்ந்து செல்ல அனுமதிக்க முடியாது எனவும் அவர்கள் மிரட்டினர்'' என்று பெண் ஒருவர் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார். அவரது கணவன் போரின்போது காணாமல் போயிருந்தார்.

''பஸ்களின் இலக்கங்களையும் சாரதி மற்றும் நடத்துநர்களின் அடையாள அட்டை இலக்கங்களையும் பதிந்துவிட்டு நாம் மேற்கொண்டு பயணிக்க அனுமதி அளிக்கலாம் என முதலில் சொன்ன பொலிஸார் பின்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக இரவில் பயணம் செய்ய அனுமதிக்க முடியாது என்று கூறிவிட்டனர்'' என்றார் மற்றொருவர்.

மக்களின் பஸ்களில் அங்கிருந்து நகராதவாறு பெரும் எண்ணிக்கையான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். பொலிஸாரின் இந்தச் செயலை அடுத்து பஸ்களில் இருந்த மக்கள் இறங்கி பொலிஸாருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். தம்மைக் கொழும்புக்கு செல்ல விடுமாறு பொலிஸாரை மக்கள் வற்புறுத்தினர். பொலிஸார் அதற்கு இடமளிக்கவில்லை.

பொலிஸாரின் இந்த எல்லை மீறிய செயற்பாட்டுக்கு உடனடியாகவே தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர் மக்கள். மெழுகுதிரிகளை கைகளில் ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். நள்ளிரவு வரை அவர்களின் போராட்டம் தொடர்ந்தது.

(உ-த-400,402)

திருடர்கள் உழ்நுழைந்த போதும் அங்கு எதுவும் திருடப்படவில்லை.

கோயிலுக்கு முன்பாக செட்டித்தெரு வீதிச் சந்தியில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்தை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு 80 ஆயிரம் ரூபா பெறுமதியான கணினிகள் பெறுமதிமிக்க 8 கைத்தொலைபேசிகள், கைத்தொலைபேசி பற்றரிகள் என்பவற்றை திருடிச் சென்றுள்ளனர்.

இந்தத் தொலைத் தொடர்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடந்த திருட்டு நான்காவது திருட்டுச் சம்பவம் ஆகும். கடந்த ஆண்டு ஒக்டோபர் முதலாம், 10ஆம், 17 ஆம் திகதிகளிலும் இந்த நிலையம் உடைக்கப்பட்டு கைத்தொலைபேசிகள், கணினிகள் என 5 இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இது தவிர நேற்றுமுன்தினம் இரவு யாழ். முனியப்பர் வீதியிலுள்ள நடைபாதைக்கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான புடைவைகள் திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (த-4-17-288)

## ஓமந்தையில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
சென்ற அனைத்து வாகனங்களும் பயணிகள் பஸ்களும் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. ஒவ்வொரு பஸ்ஸும் பயணிகளும் சுமார் ஒன்றரை மணி நேரம் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனால் நேற்று முன்னிரவில் ஓமந்தையைக் கடந்திருக்க வேண்டிய கொழும்பு பஸ்கள் பல நள்ளிரவு தாண்டிய பின்னரும் சோதனை சாவடியை நெருங்கமுடியாது வரிசையில் நின்றுகொண்டிருந்ததாக சாரதிகள் தெரிவித்தனர். (உ-10)

## நெல்லுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இடம்பெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்றுக்காலை விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.இதன்போது நெல் கொள்வனவுக்குரிய நிலையங்கள் மற்றும் விதைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நெல் கொள்வனவுக்கு பிரதானமாக 4 நிலையங்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. சாவகச்சேரியில் கமநல சேவைகள் நிலையத்தின் களஞ்சியம், சங்கானை,கைதடி, பண்டத்தரிப்பில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் களஞ்சியங்கள் ஆகியவற்றிலேயே கொள்வனவு செய்யப்படவுள்ளன.

மேலும் சம்பா நெல் ஒருகிலோ கிராம் 35 ரூபாவுக்கும், நாட்டரிசி நெல் ஒரு கிலோ கிராம் 32 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படும். இந்த விலையிலேயே யாழ் மாவட்டத்தில் நெல் கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-5)

## பருவம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
அதற்கு, யாழ். மாவட்டத்தில் மாத்திரமல்ல இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும் விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. அரசின் கொள்கைக்கு அமைவாகவே வழங்கப்படவில்லையென்று விவசாய ஓய்வூதியத் திணைக்களத்தின் சார்பில் பங்குபற்றியவர் தெரிவித்தார்.

மேலும் யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான விவசாயிகள் நெற்செய்கையின் போது காப்புறுதி செய்யாததால் நெல் அழிவுக்கு நட்டஈடு வழங்கப்படாது என்று தெரிவிக்கப்பட்டது. அத்துடன் விவசாயிகளுக்கான கடன் வழங்கப்படும் போது காப்புறுதியைக் கட்டாயம் செய்ய வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டபோதும், ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்த விவசாயிகளுக்கே இன்னமும் ஓய்வூதியப் பணம் வழங்கப்படாத நிலையில் காப்புறுதியைக் கட்டாயமாக்கக்கூடாது என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். குடா நாட்டில் கடந்த சில மாதங்களாக பருவம் தப்பிப் பெய்த மழை காரணமாக விவசாயிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர். நெற்பயிர்ச் செய்கையில் [illegible] ஆயிரத்து 500 ஏக்கரும், வெங்காயம் 3 ஆயிரத்து 600 ஏக்கரும், மரக்கறிச் செய்கை ஆயிரத்து 100 ஏக்கரும், உருளைக்கிழங்கு 63 ஏக்கரும், பழச்செய்கை 75 ஏக்கரும் அழிவடைந்துள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கான விவசாய நடவடிக்கைக்குப் பெற்றுக்கொண்ட கடன்களை இரண்டு வருடத்தில் திரும்பச் செலுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை மத்திய வங்கியைக் கோருவது என்று தீர்மானிக்கப்பட்டது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிராயச்சித்தம் செய்யும் கடமை இப்போது இந்தியாவின் பக்கம்

மனிதகுலத்தின் மனச்சாட்சியைத் தட்டியெழுப்பவும், நீதி கேட்கவும், குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றவும், சுதந்திரமான சர்வதேச நீதி விசாரணை கோரியும் புலம் பெயர் தமிழர்கள் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அவற்றுக்கு மத்தியில் தமிழ்நாட்டில் இடம்பெற்றுள்ள தீக்குளிப்புச் சம்பவம் அனைத்துலக நாடுகளில் வாழும் தமிழர்களின் இதயங்களை உலுக்கி உள்ளது.

2009இல் முள்ளிவாய்க்காலில் பெருக்கெடுத்தோடிய தமிழனின் குருதி இன்னும் உலராத நிலையில், கடலூரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தீக்குளிப்புச் சம்பவம் எமது இனம் இன்னமும் தன்னை அழித்துத்தான் தளைக்க முற்படுகிறதா என்ற கேள்வியை எழுப்பி நிற்கிறது.

தீக்குளித்த உயிர்க்கொடையாளி மணி, ஈழத் தமிழருக்கு விடிவு வேண்டியும், மஹிந்த ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்கக் கோரியும் கடிதம் எழுதியிருந்தார். "ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்கவேண்டும். அதற்கு எனது உயிரே முதல் வாக்காக இருக்கட்டும்" என்று முழக்கமிட்டவாறே தனது உடலுக்குத் தீ வைத்தார்.

இன விடுதலைப் போராட்டத்தில் தமிழினம் இழந்த உயிர்கள் ஏராளம். இறுதியாகத் தன்னை ஆகுதியாக்கிக்கொண்டவர்தான் இயக்குநர் சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி உறுப்பினர் மணி. உயிர்த்தியாகம் செய்துகொண்ட மணி, ஈழத் தமிழருக்காகக் குரல் கொடுத்து வந்தவர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரனின் மரணம் தொடர்பாக வெளிவந்த படங்கள் மற்றும் செய்திகளால் மிகவும் மனமுடைந்திருந்தார். "நான் இந்திய மண்ணில் தமிழனாகப் பிறந்ததை மிகவும் பெருமையாக நினைக்கிறேன்" என்று அவர் தனது இறுதிக் கடிதத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீக்குளிப்பை அடுத்து இனியும் தாமே தமது உயிர்களை மாய்க்கும் செயலில் ஈடுபட வேண்டாம் என்று தமிழ் உணர்வாளர்களுக்கு தமிழகத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"உயிரைத் தரவேண்டாம் தம்பிகளே! நாம் தமிழர் என்கிற உணர்வினைத் தாருங்கள். அதுவே போதும்" - என்று சீமான் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். "தமிழ் உணர்வாளர்கள் எவரும் தீக்குளித்து உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டாம்" - என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். எனினும், ஈழத் தமிழருக்காகத் தன்னை ஆகுதியாக்கிக்கொண்ட மணியின் தியாகம் வீண்போகப் போவதில்லை. இலங்கைப் பிரச்சினையில் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் தமது உள்வீட்டு அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் தீவிரமாகச் செயற்பட வேண்டிய கட்டாயத்தை அமரர் மணியின் தியாகம் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய அரசின் இரட்டை வேடம் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். தமிழ்நாட்டையும் இலங்கை அரசதரப்பையும் சமாளித்துச் செல்வது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வைத் தரமாட்டாது. இலங்கைப் பிரச்சினையில் தனது நிலைப்பாட்டை இந்தியா தெளிவாக - வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டும்.

இலங்கைக்கு எதிரான அமெரிக்கத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று தம்மைச் சந்தித்த தமிழ்நாடு காங்கிரஸ் காரர்களிடம் மன்மோகன்சிங் தெரிவித்தார். ஆனால் இன்னும் உத்தியோக பூர்வமாக இந்தியாவின் முடிவு அறிவிக்கப்படவில்லை. இந்தியாவின் இந்த உறுதி அற்ற போக்குத் தொடருமானால், தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியினால் ஒருபோதும் அரசு அமைக்க முடியாது போய்விடும்.

இலங்கைத் தமிழர்களுக்கு உள்ள பிரச்சினைகளில் பிரதானமானவை இரண்டு. ஒன்று தமிழ் மக்களின், தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு. அடுத்தது, போரின் இறுதியில் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதற்குக் காரணமானவர்களை நீதியின் முன் நிறுத்தித் தண்டிப்பது. இதனைத்தான் பொறுப்புக்கூறுதல் என்கிறது அனைத்துலக சமூகம்.

கடந்த ஆண்டு ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழுவில் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்திலும் இதுகுறித்து வெகு தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இம்மாதம் மூன்றாம் வாரம் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று எதிர்பார்க்கப்படும் பிரேரணையும் இவற்றை வலியுறுத்துவதோடு இலங்கை அரசு இவற்றை செயற்படுத்தக்கூடிய சில வழிமுறைகளையும் கொண்டிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காக போரிட்ட விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியா வகித்த பங்களிப்பு இலங்கையில் மட்டும் அன்றி அனைத்துலகத்துக்கும் இப்போது பரகசியமாகிவிட்ட ஒன்று. போர் முடிவடைந்து விட்டது. விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர் என்று கருதப்படுகிறது. விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் இந்தியா எப்படிச் செயற்பட்டதோ, அதேபோன்று இன்னும் செயற்படுகிறது. எந்தவிதத்திலும் இந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்தமுடியாது.

2009 இறுதிப் போரின் போது அதனை நிறுத்தக் கோரியும், இன அழிப்பைத் தடுக்கக் கோரியும் பத்துக்கும் மேற்பட்ட தமிழ் உணர்வாளர்கள் தமிழ்நாட்டில் தீக்குளித்தார்கள். இந்த நிலைமை இன்னும் தொடர்கிறது. இந்தியா நீதிமுறைமையின்படி செயற்பட்டிருந்தால் இந்தத் தீக்குளிப்புகளுக்கு இடம் ஏற்பட்டிருக்காது.

சரி, அதனை ஒருவகையில் புறமொதுக்கினாலும், போர் முடிவுற்ற பின்னராவது இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றி இருக்கலாம். ஆனால் அந்த வழி சிந்திக்க கூட அது தயாரில்லை என்பது சர்வ நிச்சயமாகவே தென்படுகிறது. இந்திய மத்திய அரசின் இந்தப் போக்கினை எந்த வகையில் வைத்துக் கணிப்பது என்று புலப்படவில்லை. இந்திய மத்திய அரசு இலங்கை விடயத்தில் தனது பிராந்திய நலனை முன்னிறுத்தியே தனது கொள்கை நிலைப்பாட்டை வகுத்துக் கொள்ளும். அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையானதே, யதார்த்தமானதே. இந்திய அரசு அதனை இன்னும் நிதர்சனமாக்கி, மெய்ப்பித்து வருகிறது.

தமிழகம் வாழ் தமிழ்ச் சகோதரர்களின் உணர்வுகளைப் புறம்தள்ளி புதுடில்லி அரசு செயற்படுவதே அதன் வழக்கம் என்ற நிலையைவிடவும், ஈழத் தமிழ் மக்களில் இலட்சக்கணக்கானோரின் உயிர்களைக் காவு கொண்டதில் இந்திய மத்திய அரசுக்கும் பங்குண்டு என்பது இப்போது துலாம்பரம். அதற்கான பிராயச்சித்தமாக, ஈழத் தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகள் கிடைக்க உதவ வேண்டும்; உந்து சக்தியாக இருக்க வேண்டும். அதனை நாடி மனம் கொள்ளுமா?

# பண்ணையாளரின் உற்பத்திக்கு நியாயமான விலை அவசியமானது

## வலியுறுத்துகிறார் கால்நடை சுகாதாரப் பணிப்பாளர்

அச்சுவேலி,மார்ச் 6

யாழ்.மாவட்ட பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் தமது உற்பத்திப் பொருள்களை விலை வீழ்ச்சி இன்றி நியாயமான விலையில் விற்பனை செய்வதற்கு வசதி செய்து தரப்பட வேண்டும்.

உற்பத்திப் பொருள்களின் விலை வீழ்ச்சி அடைந்தமையால் தமது தொழில் முயற்சியை கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கால்நடை வளர்ப்போர் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகியுள்ளனர்.

இவ்வாறு கூறினார் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ்.பிராந்திய பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம்.

மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு அலுவலகம், கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் ஆர்வமுள்ள பண்ணையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கலந்துகொண்டனர்.

மனிதநேய அமைப்பின் கூட்டமைப்பு தலைவர் த.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டம் வெளிமாவட்ட உற்பத்திப் பொருள்களின் சந்தையாகவும் வெளிமாவட்ட வர்த்தகர்கள், வியாபாரிகளின் தொழில் மையமாகவும் மாறியுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்து எடுத்து வரப்படும் முட்டை, கோழி இறைச்சி என்பன மிகக் குறைந்த விலையில் யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படுவதால் இங்கு உற்பத்தி செய்யப்படும் முட்டை, இறைச்சி என்பனவற்றின் விற்பனை விலை மிக மிகக் குறைந்துள்ளது. முட்டையின் விலை 10 ரூபாவுக்கு கீழ் இறங்கியது. இதனால் கோழி வளர்ப்போர் தமது தொழில் முயற்சியை கைவிட வேண்டி ஏற்பட்டுள்ளது.

'நெஸ்லே' நிறுவனம் யாழ். மாவட்டத்தில் பால் கொள்வனவுக்கு வருகை தந்த வேளையில் எதிர்ப்புக்கள் தோன்றின. கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வரவேற்றது. ஆனால் இன்று 'நெஸ்லே' நிறுவனம் பால் கொள்வனவில் யாழ்.மாவட்டத்தில் இடத்துக்கு இடம் வேறுபாடு காட்டுவதாக முறைப்பாடு செய்யப்படுகின்றது.

மேற்படி முறைப்பாட்டில் உண்மையில்லாமல் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு நிறுவனம் தமது செயற்பாடுகளை மேல்நிலைப்படுத்திக்கொள்ள வேண்டும். கொள்வனவு விலை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

'நெஸ்லே' நிறுவனம் யாழ். மாவட்டத்தில் பால் கொள்வனவு விலையை பகிரங்கப்படுத்த வேண்டும். பண்ணையாளர் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு பாதிப்பு இல்லாத வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார். (த-11)

# மணியந்தோட்டம், உதயபுரம் பகுதிகளுக்கு 100 வீதி விளக்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 6

கொழும்புத்துறை மணியந்தோட்டம், உதயபுரம் பகுதிகளுக்கு இதுவரை 100 வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதி மற்றும் குறுக்கு வீதிகளுக்கு இந்த மின்சார விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

கொழும்புத்துறை துறைமுகச் சந்தியில் இருந்து மணியந்தோட்டம் வரையான பகுதிகளும், உதயபுரம் பிரதேச வீதிகளுக்கும் இந்த வீதி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் இந்தப் பகுதிகளில் இரவில் சிரமமின்றிப் போக்குவரத்துச் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

# 25 நெசவுக் கிராமங்கள் நாடு முழுவதும் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

இந்த ஆண்டில் நாடளாவிய ரீதியில் 25 கைத்தறி நெசவுக் கிராமங்களை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தொழில்துறைகள் மற்றும் வாணிப செயற்பாடுகள் அமைச்சர் ரிஸாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

நெசவுக் கைத்தொழிலைக் கட்டியெழுப்பும் 5 ஆண்டுத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கருத்து வெளியிட்ட போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 2012 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்த 5 ஆண்டுத் திட்டத்துக்கு அமைய 2013 ஆம் ஆண்டு முடிவடையும் வேளை அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் விதமாக கைத்தறி நெசவுத் தொழில் கிராமங்களை நிறுவவுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் நிறுவப்படும் கைத்தறி நெசவுக் கிராமங்களில் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கும் ஒரு மாவட்டத்துக்கு 20 பேர் வீதம் கைத்தறி நெசவாளிகள் 500 பேருக்குப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் கூறினார். (த-22)

# பறைச்சேரிவெளி காணி குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பறைச்சேரிவெளி காணி தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் யாழ். பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பறைச்சேரிவெளி காணி உரிமையாளர்கள் தங்களிடம் உள்ள காணிக்கான ஆவணங்கள் (உறுதிகள்), நில அளவை வரைபடம், தேசிய அடையாள அட்டை போன்ற அத்தாட்சிப்படுத்தக் கூடிய ஆவணங்களுடன் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-7)

# மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு

தென்மராட்சி,மார்ச் 6

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோர், நோய்களினால் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்கான மார்ச் மாத கொடுப்பனவுகள் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள், உப அலுவலகங்கள் ஆகியவற்றில் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த கொடுப்பனவுகளை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

# கால்நடைக்கான நடமாடும் சேவையை வாரத்தில் முழு நாளும் நடத்துக

## பண்ணையாளர்கள் கோரிக்கை

அச்சுவேலி,மார்ச் 6

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தால் மானிப்பாயில் நடத்தப்படும் நடமாடும் சேவையை வாரத்தில் முழுநாளும் நடத்த வேண்டும் என கால்நடை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கத்திடம் மனுவைச் சமர்ப்பித்திருப்பதோடு நேரிலும் சந்தித்து வலியுறுத்தி உள்ளனர்.

வலி.தென்மேற்கு பிரதேச கால்நடை உற்பத்தி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் பணிப்பாளரின் நேரடிக் கண்காணிப்பில் இரண்டு தினங்கள் வாரந்தோறும் மானிப்பாய் பிரதேச சபை வளவில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டு வருகின்றது.

நடமாடும் சேவையில் மானிப்பாய், தாவடி, சுதுமலை உள்ளிட்ட பகுதிப் பண்ணையாளர் மற்றும் கால்நடை வளர்ப்போர் பெருமளவில் நன்மை அடைந்து வருகின்றனர். இவர்கள் தமது தேவைகளை வசதியான முறையில் நிறைவு செய்து வருகின்றனர். இந்த வசதியை வாரத்தில் முழுநாளும் வழங்குமாறு அவர்கள் இப்போது கோரியுள்ளனர்.

தமது கோரிக்கை தொடர்பாக கால்நடைத் திணைக்களப் பணிப்பாளரை நேரில் சந்தித்து வலியுறுத்தியுள்ளதுடன் மனு ஒன்றையும் கையளித்துள்ளனர். (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்ந்து போராடுவோம்

தமிழீழ விடியலுக்காக வாழ்ந்து போராட வேண்டிய இளைஞர்கள் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டாம் என்று வைகோ, பழ. நெடுமாறன், ராமதாஸ் உட்பட தமிழகத் தலைவர்கள் பலரும் மன்றாட்டமாகக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஈழத் தமிழர்களைக் காப்பதற்கான முயற்சியில் முத்துக்குமாரில் ஆரம்பித்து முருகதாஸ், செங்கொடி என எண்ணற்றோரை நாம் இழந்திருக்கிறோம். இதற்கு மேலும் எவரையும் இழக்கத் தயாராக இல்லை. எனவே, தமிழ் உணர்வாளர்கள் எவரும் இத்தகைய செயல்களில் ஈடுபடவேண்டாம் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி கடலூர் மாவட்டம் நல்லவாடு கிராமத்தைச் சேர்ந்த மணி என்பவர் நேற்று முன்தினம் தீக்குளித்து உயிர் கொடை செய்தார்.

இவருக்கு வீரவணக்கம் தெரிவித்து வைகோ விடுத்துள்ள அனுதாப அறிக்கையில், கடலூர் நல்லவாடு பகுதியைச் சேர்ந்த மணி, இளம் வயதில் இருந்தே நாட்டு நலனுக்காகவும் அநீதியை எதிர்த்தும் போராளியாகவே வாழ்ந்து உள்ளார்.

இளந்தளிர் பாலச்சந்திரன் படுகொலை, அவரை முற்றிலும் நிலைகுலையச் செய்ததாக அவரது நண்பர்கள் வருத்தத்தோடு கூறினார்கள். அதனால்தான், கடந்த 4ஆம் திகதியைத் தேர்ந்தெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ள முடிவு செய்து தீக்குளித்தார் -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாடு திரும்பிய துமிந்த உடனடியாகக் கைது

## 14 வரை விளக்கமறியல்



கொழும்பு,மார்ச்.06

ஜனாதிபதியின் தொழிற் சங்க ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உட்பட நால்வர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட கொலன்னா - முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் சந்தேக நபரான, ஆளுங்கட்சி நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை 10.05 மணிக்கு கொழும்பில் கைது செய்யப்பட்டார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் பொலிஸ் தடுப்புக் காவலில் சிகிச்சை பெற்றுவரும் இவரை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் சந்துன் வித்தன உத்தரவிட்டுள்ளார். மேலும், குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரிடம் வாக்குமூலங்களையும் பதிவுசெய்யவுள்ளனர்.

முல்லேரியா துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் காயமடைந்த துமிந்த சில்வா சிங்கப்பூரில் கடந்த இரண்டு வருடங்களாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில், நேற்று நாடுதிரும்பினார். இருப்பினும், அவரது உடல் நிலை தேறவில்லை. இதனால் அவர் உடனடியாக தனியார் வைத்தியசாலை ஒன்றில் சேர்க்கப்பட்டார்.

கடந்த 2011ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8ஆம் திகதி பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர உட்பட நான்குபேர் சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா நேற்றுக்காலை எமிரேட்ஸ் விமானசேவைக்குச் சொந்தமான ஈ.கே. 349 என்ற விமானத்தின் மூலமாக நாடு திரும்பினார்.

அவரை அழைத்துச் செல்வதற்காக பிரோடா வர்க நான்கு வாகனங்கள் கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு சென்றுள்ளன. விமான நிலையத்திலிருந்து சக்கர நாற்காலியில் வந்தே அவர் வாகனத்தில் ஏறியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டு தனியார் வைத்தியசலையில் சேர்க்கப்பட்டுள்ள துமிந்த சில்வாவிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர். அத்துடன், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளையும் நடத்தி வருகின்றனர்.

**ஹிருணிகா வலியுறுத்து**

இதேவேளை, நாடு திரும்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவைக் கைதுசெய்யுமாறு, கொலை செய்யபட்ட பாரத லக்ஷமன் பிரேமசந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமசந்திர வலியுறுத்தியுள்ளார்.

உண்மையாகவே ஏதாவது நோயொன்றினால் துமிந்த சில்வா பாதிக்கப்பட்டிருந்தால் அவரை கைது செய்து சிறையில் போட வேண்டும் எனத் தான் வலியுறுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், அவர் எங்கிருந்தாலும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழிருக்க வேண்டும். இதுதான் எமது நாட்டின் சட்டமாகும். அத்துடன், நாட்டின் சட்டத்தில் தனக்கு நம்பிக்கை உண்டு எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் சட்டத்தின்படி, குற்றவாளி நாட்டை வந்தடைந்தவுடன் கைதுசெய்யப்பட வேண்டும். சட்டமா அதிபரினால் சந்தேகநபர் எனத் தெரிவிக்கப்பட்டவர் விமான நிலையத்தை வந்தடைந்தவுடன் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் எனவும் ஹிருனிகா தெரிவித்துள்ளார்.

## ஆசிரியையின் சங்கிலி அறுப்பு

பொகவந்தலாவ,மார்ச்6

பொகவந்தலாவ, எல்டப்ஸ் தோட்டத்தில் இருந்து லின் போட் தமிழ் வித்தியாலயத் துக்குச் சென்ற ஆசிரியை ஒருவரின் சங்கிலி கொள்ளை யிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை காலை இடம்பெற்றது. இனந்தெரியாத நபர் கத்தியைக் காட்டி குறித்த ஆசிரியையிடமிருந்து சங்கிலியைக் கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளார். கொள்ளைகாரனிடம் இருந்து சங்கிலியை மீட்பதற்கு குறித்த ஆசிரியை முயற்சி செய்த போதும், அந்த நபர் ஆசிரியையை தள்ளி வீழ்த்திவிட்டு தப்பி ஓடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## கொங்கிறீட் வீதியாகிறது மருதமுனை எஸ்.எம்.வீதி

மருதமுனை,மார்ச் 6

அம்பாறை,மருதமுனையின் பிரபல்யமிக்க வீதிகளில் ஒன்றான எஸ்.எம். வீதி கொங்றீட் வீதியாக புனரமைக்கப் படவுள்ளது.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் இஸட்.ஏ. எச்.ரஹ்மானின் வேண்டுகோளுக்கு இணங்க, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.உதுமா லெப்பை அதற்கான அனுமதியை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் அம்பாறை வீதி அபிவிருத்தித் திணைக்கள பிரதம பொறியியலாளர் றிஸ்வி, வீதி அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர் ஆகியோருக்கு அமைச்சர் பணிப்புரைகளை வழங்கியுள்ளார். (ச)

# அரசின் பொறுப்பற்ற செயலால் தமிழகத்தின் கொதிப்பு உக்கிரம்

## எச்சரிக்கிறது ஐ.தே.க.

அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் இலங்கைக்கு எதிரான செயற்பாடுகள், தமிழ்நாட்டில் உக்கிரமடைந்துள்ளன. இது தமிழ்நாட்டுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசலை ஏற்படுத்துவதுடன், இனரீதியான முரண்பாட்டையும் தோற்றுவிக்கும். அப்படியொரு நிலை உருவாகினால் அது நாட்டுக்கு நல்லதல்ல. எனவே, தமது விளையாட்டை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்தது.

இலங்கை விவகாரம் குறித்து தமிழ்நாட்டின் நிலைப்பாட்டைக் கவனத்திற் கொள்ளவேண்டிய தேவை இந்திய மத்திய அரசுக்கு உள்ளது. தமது நடவடிக்கைகளுக்காகத் தமிழ்நாட்டின் ஆதரவைப் பெறவேண்டிய தேவையும் மத்திய அரசுக்கு உள்ளது என்பதை ஐ.தே.க. பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் இறுதிக்கட்ட போரில் அரசு பெரும் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. அதனால் இலங்கைக்கு எதிராக சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்றும் இந்தியாவின் தமிழ்நாட்டில் பெரும் எதிர்ப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், ஐ.தே.க. தொழிற்சங்கப் பணிமனையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கைக்கு எதிராகத் தமிழ்நாட்டில் அதிகரித்து வருகின்ற எதிர்ப்புகள் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசின் பொறுப்பற்ற செயற்பாடுகளால் இலங்கைக்கு எதிராகத் தமிழ்நாட்டில் பெரும் எதிர்ப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. இது மிகவும் ஆபத்தான நிலையாகும். எனவே, அரசு தமது விளையாட்டை உடனடியாக நிறுத்தவேண்டும்.

கடந்த ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையை இந்தியா ஆதரித்தது. ஏனெனில், இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் இந்தியா திருப்தியடையவில்லை. இலங்கை விவகாரம் தொடர்பில் தமிழ்நாட்டின் நிலைப்பாட்டைக் கருத்திற்கொள்ளவேண்டிய தேவை இந்திய மத்திய அரசுக்கு உள்ளது. அதுமட்டுமல்லாது, தமது அனைத்து செயற்பாடுகளிலும் தமிழ்நாட்டின் ஆதரவைப் பெறவேண்டிய தேவையும் மத்திய அரசுக்கு இருக்கிறது.

தற்போதைய நிலையில் இலங்கைக்கு எதிராகத் தமிழ்நாட்டில் பெரும் எதிர்ப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நிலை தொடர்ந்தால் தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படும். அத்துடன், இனரீதியான முரண்பாடு தோன்றக்கூடிய நிலைமையும் ஏற்படும். ஆனால் இவற்றைத் தவிர்க்க அரசு எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. அரசின் இந்த செயற்பாடுகள் நாட்டுக்கு நல்லதல்ல என்றார் திஸ்ஸ அத்தநாயக்க.




இலங்கை மீது சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி ஜெனிவாவில் அலையாகத் திரண்ட மக்கள் படை.

# இலங்கையில்தான் மாநாடு முடிவை மாற்றவே முடியாது

## கமலேஷ் சர்மாவும் உறுதிப்படுத்தினார் என்கிறது அரசு

பொதுநலவாய மாநாட்டை 2013இல் இலங்கையில் நடத்துவதென்று 2011இல் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் எடுத்த தீர்மானத்தை எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது என்று அரசு நேற்று நாடாளுமன்றில் கூறியது.

இலங்கைக்கு கடந்த மாதம் வருகை தந்த பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, இலங்கையில் இந்த மாநாடு நடைபெறுவதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரசு மேலும் கூறியது.

பொதுநலவாய மாநாட்டை இலங்கையில் நடத்துவது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் ஆற்றிய விசேட உரைக்குப் பதிலளித்து உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் இவ்வாறு கூறினார்.

கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் நடந்த பொதுநலவாய நாடுகளின் மாநாட்டின் கூட்டறிக்கையின் 18ஆவது பந்தியின் 10ஆவது உப பந்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதன்படி இலங்கை நிலைமை தொடர்பில் போதியளவு நடவடிக்கை எடுக்கப்படாவிடில், முயற்சிகள் அனைத்தும் தோல்வியடையும் பட்சத்தில் இறுதி முடிவாக வேறு வழியின்றி 2013 இல் பொதுநலவாய மாநாடு இடம்பெறும் இடத்தை மாற்ற முடியும்.

இலங்கைக்கு விஜயம் செய்த பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, மனித உரிமைகள் ஆணைக்குழு, நல்லிணக்கம், நீதித்துறை, தேர்தல் மற்றும் நீதித்துறை போன்ற விடயங்களில் கூடுதலான கவனஞ்செலுத்துமாறு எம்மிடம் கூறிச்சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிராக இந்தியா ஐ.நாவில் 'கடும்பிடி' அவசியம்

## ராகுலிடம் தமிழக காங்கிரஸ் எம்பிக்கள் கோரிக்கை

டில்லி, மார்ச்.6

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் இந்தியா, இலங்கைக்கு எதிராகக் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தமிழகத்தின் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் தலைமைப் பீடத்தைக் கோரியுள்ளனர்.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், காங்கிரஸின் உதவித்தலைவரான ராகுல் காந்தியை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

குறித்த நாடாளுமன்றக் குழுவில் அமைச்சர்களான பி சிதம்பரம், ஜி. கே. வாசன், ஜெயந்தி நடராஜன், தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் ஆகியோரும் உள்ளடங்கியிருந்தனர்.



**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியா, இலங்கைக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என் தமிழகக் கட்சிகள் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.**

இலங்கை தமிழர் பிரச்சினையானது தமிழகத்தில் தமது கட்சியைப் பொறுத்தவரையில் முக்கியமான அம்சம் என்பதை சந்திப்பின் போது காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ராகுல் காந்திக்குச் சுட்டிக் காட்டினர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இந்தியா, இலங்கைக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்ற அழுத்தம் தமிழகக் கட்சிகள் மத்தியில் இருந்து வருவதை அடுத்தே காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராகுல் காந்தியை சந்தித்துள்ளனர். (வ)

## டில்லி மாணவிக்கு அமெரிக்காவால் 'வீரமங்கை' விருது



டில்லியில் பாலியல் வன்கொடுமைக்குள்ளாகி உயிரிழந்த மருத்துவ மாணவிக்கு அமெரிக்கா 'வீரமங்கை' விருது வழங்க உள்ளது.

சர்வதேச பெண்கள் தினமான மார்ச் 8 ஆம் திகதி இந்த விருதை, அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா மற்றும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜான் கெர்ரி ஆகியோர் வழங்க உள்ளனர்.

உயிரிழந்த மாணவி, தனது மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள தைரியமாகப் போராடியதாகவும், பொலிஸ் துறைக்கு அளித்த வாக்கு மூலத்தில் குற்றவாளிகள் ஆறு பேருக்கும் உரிய தண்டனை வழங்க வலியுறுத்தியதையும் அமெரிக்கா பாராட்டியுள்ளது.

## தலை துண்டிப்பு சம்பவம்: பதிலளிக்குமாறு அரசுக்கு உத்தரவு

இந்திய இராணுவ வீரர்கள் இருவரின் தலைகளை பாகிஸ்தான் இராணுவம் துண்டித்த சம்பவத்தை சர்வதேச நீதிமன்றத்தில் முறையிடுவது குறித்து பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தால், இந்திய வீரர்கள் இருவரின் தலைகள் துண்டிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக, சர்வதேச நீதிமன்றத்தில் மத்திய அரசு வழக்குத் தொடர வேண்டுமென வலியுறுத்தி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

சம்பவம் குறித்து சர்வதேச நீதி மன்றத்தில் முறையிடுவது குறித்து மத்திய அரசு 4 வார காலத்துக்குள் பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தர விட்டுள்ளது.

## 20 கோடி மதிப்புள்ள ஹெரோயின் பறிமுதல்

டில்லி, மார்ச்.6

இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் 20 கோடி ரூபா மதிப்புள்ள ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான டவ்கே சர்வதேச எல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை சந்தேகத்துக்கு இடமான வகையில் சிலர் நடமாடியுள்ளனர் என்றும் எல்லைப் பாதுகாப்பு படையினர், அவர்களை மடக்கிப் பிடிப்பதற்காக விரட்டிச் சென்றுள்ளனர் என்றும்-

அதைஅடுத்த மர்ம நபர்கள், தங்கள் கையில் இருந்த பொதிகளைக் கீழே போட்டுவிட்டு இருளில் தப்பித் தலைமறைவாகி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பைகளை சோதனையிட்டபோது உள்ளே 4 கிலோ ஹெரோயின் இருப்பதை பாதுகாப்புப் படையினர் கண்டு பிடித்து அவற்றைக் கைப்பற்றினர். (வ)

## கூடங்குளம் அணுஉலை எதிர்பாளர்கள் இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணி



இடிந்தகரை, மார்ச்.6

கூடங்குளம் அணு உலையை மூட வலியுறுத்தி தொடர் போராட்டம் நடத்தி வரும் அணு உலை எதிர்ப்பாளர்கள் இலங்கை அரசைக் கண்டித்து நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை கறுப்புப் பட்டி அணிந்து ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக இலங்கை மீது போர்க்குற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கைக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும், இலங்கை மீது சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


ஆர்ப்பாட்டத்தில் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்ததாவது:-

தமிழர்களுக்காகத் தமிழர்கள் உண்மையாக ஒளிவு மறைவின்றி குரல் கொடுக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களின் விடயத்தில் தமிழர் கட்சிகள் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும். மத்திய அரசு தமிழர்களை அலட்சியம் செய்து வருகிறது.

அணுமின் நிலைய பிரச்சினையில் ஆரம்பித்து ஒவ்வொரு விடயத்திலும் தமிழர் மீது மத்திய அரசு பாராமுகத்துடனும் பாதகமாகவும்தான் நடந்து வருகிறது. தமிழ் மக்களின் அனைத்து கோரிக்கைகளுக்காகவும் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் உரத்த குரல் எழுப்ப வேண்டும்-

என்றார். (வ)

## இந்தியப் பணக்காரர் பட்டியலில் தொடர்ந்து முதலிடத்தில் அம்பானி



இந்தியப் பணக்காரர் பட்டியலில் தொடர்ந்தும் 6 ஆவது ஆண்டாக முகேஷ் அம்பானி முதலிடத்தில் உள்ளார்.

பணக்காரர்களின் சொத்துக்களின் மதிப்பின்படி பணக்காரர்களைப் பட்டியலிடும் போர்ப்பஸ் பத்திரிகை இந்த ஆண்டின் பணக்காரர் களின் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அதில் இந்தியாவில் 21.5 பில்லியன் அமெரிக்கா டொலர்கள் மதிப்புடைய சொத்துக்களை வைத்திருக்கும் பிரபல தொழிலதிபர் முகேஷ் அம்பானி 6 ஆவது ஆண்டாக தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார். உலகின் பெரும் பணக்காரர்களின் பட்டியலில் 22 ஆவது இடத்தையும் அவர் பிடித்துள்ளார். அவரையடுத்து, 16.5 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள சொத்துகளுடன் லட்சுமி மிட்டல் இரண்டாம் இடத்திலும் உள்ளார்.

## ஈரவிழிகளுடன் ஓராண்டு

அன்னை மடியில்
13★01★1944



கிருஷ்ணன் அடியில்
16★02★2012

## இராமலிங்கம் வீரசிங்கம்


திதி-06.03.2013
(ஓய்வு பெற்ற பொது சுகாதார உத்தியோகத்தர்-மலேரியா தடை இயக்கம்)

உங்கள் நினைவுகள் என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உங்கள் முகம் காண
நித்தம் நித்தம் ஏங்கித் தவிக்கின்றோம்
உங்கள் பேச்சும் சிரிப்பொலியும் இன்னும் எங்கள்
காதுகளில் ஒலித்த வண்ணம் உள்ளதப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

31/1, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(34188)(8.14.16)

## கண்ணீர் அஞ்சலி



எமது 'உதயன்' நிறுவனத்தின் ஆசிரிய பீடத்தில் நீண்டகாலம்
பணிபுரிந்த மூத்த பத்திரிகையாளரான
புலவர் ம.பார்வதிநாதசிவம்
அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

நிர்வாகத்தினரும்
ஆசிரியர் பீடத்தினரும்
உதயன் பத்திரிகை நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

## வியாபாரக்குறியீடு தொடர்பான அவதான அறிவித்தல்

இரத்மலானை (B)பொறுப்பன படகுத்துறை வீதி இலக்கம் 40ல் அமைந்துள்ள எமது கட்சிக்காரர் ஆகிய வரையறுக்கப்பட்ட (THE TRADESMANN SL (PVT) LTD.) த ரேட்ஸ்மன் (தனியார்) நிறுவனமானது இதனகத்துப் பின்னர் காட்டப்பட்ட வியாபாரக் குறியீட்டின் சட்டபூர்வமான இலங்கைக்கான ஏக முகவர் என்றும் குறித்த வியாபாரக்குறியீடானது புலமை ஆக்கச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டதொன்றெனவும் பூட்டு மற்றும் பூட்டு உற்பத்தி செய்யும் உபகரணங்கள் தொடர்பான வியாபாரக் குறியீடு இது எனவும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகிறது.

**GLOBE**

மேற்குறிப்பிட்ட வியாபாரக்குறியீடு பூட்டு .மற்றும் பூட்டு உற்பத்தி செய்யும் இயந்திர உபகரணங்களுக்குப் பொருந்தும் குறியீடு என்பதுடன்; எமது கட்சிக்காரரின் வியாபார நடவடிக்கைகளுக்கு மிகவும் அவசியமானது என்பதாலும் அது போன்ற வியாபாரக்குறியீட்டை அதன் உருமாதிரி அல்லது போலியாகச் செய்வது, இறக்குமதியில் ஈடுபடுவது,விநியோகம் செய்வது மற்றும் குறித்த வியாபாரக் குறியீட்டுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் செயல்படுவது முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளதென்பதாலும் புலமை ஆக்கச் சொத்துரிமைச் சட்டத்தின் கீழ் எமது கட்சிக்காரருக்கு இருக்கும் உரிமைப்பிரகாரம் இதனகத்து முன் கூறியபடி செயற்பாடுகளில் ஈடுபடுபவர்க்கெதிராகச் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் அறிவித்தல் கொடுக்கும்படி எமது கட்சிக்காரர் எமக்கு வழங்கிய அறிவுறுத்துரையின் பிரகாரம் இவ் அறிவித்தலைப் பிரசுரிக்கிறோம்.

AN

பங்குடைமையாளர்
சட்டத்தரணிகள்
26,ஷேடி (G)குரோவ் அவனியூ,
கொழும்பு-08.

## பெண் ஆசிரியர் விரைவில் நியமனம்

வடமாராட்சி, மார்ச்.6

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள கட்டைக்காடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு பெண் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாக வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமாரன் தெரிவித்தார்.

குறித்த பாடசாலையில் தற்போது ஆண் ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர். இந்த நிலையில் பெண் ஆசிரியர் ஒருவரை அந்தப் பாடசாலைக்கு நியமிக்க வேண்டும் என வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகக் கூட்டத்தில் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட வடமராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் இரு வாரத்துக்குள் அந்தப் பாடசாலைக்கு பெண் ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார். (ஐ-8)

## 13ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
21.02.1953

இறைவன் அடியில்
06.03.2000

**இரத்தினம் சிறீகாந்தன்**
(முன்னாள் தொலைத்தொடர்புப் பரிசோதகர் Sri lanka Telecom)

மனித வாழ்வின் மகத்துவம்
மாதவன் சேவை
உணரவைத்தாய்
கோவிந்தா

ச.ம.வி. ஒழுங்கை.
அராலி தெற்கு. வட்டுக்கோட்டை.

அன்பு மனைவி
திருமதி சிவமலர் சிறீகாந்தன்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்ட 28ஆவது பட்டமளிப்பு விழாவின் போது முதுகலைமாணி மற்றும் முதுகல்வி மாணிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்ட எமது கல்லூரி ஆசிரியர்களைப் பாராட்டுவதோடு மேலும் உயர்வுகள் காண வாழ்த்துகிறோம்.



திருமதி வித்தியாதேவி மகேந்திரன் (M.A)



திருமதி மீனலோஜினி பாரதி (M.A)



கு.ஜோதிரட்ணராஜா (M.A)



திருமதி புவிதா சிறீஸ்கந்தராசா (M.A)

Best Wishes



மு.அசோக்குமார் (M.ED)

ஆசிரிய சகோதரத்துவம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்



### இரத்தினசிங்கம் செல்வராஜன் -(ஐடியல்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய இரத்தினசிங்கம் செல்வராஜன் (ஐடியல்) நேற்றுமுன்தினம் (04.03.2013) திங்கட்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற ஈஸ்வரபாதம் மற்றும் சந்திரவிம்பம் தம்பதியரின் அருமை மருமகனும் சோதீஸ்வரியின் அன்புக் கணவரும் சந்திரிக்கா (NDB BANK), அருண், யாதவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் துளசிராம் (LION DISTRIBUTO -RS) அவர்களின் மாமனும் ஆதித்தியாவின் தாத்தாவும் காலஞ்சென்ற மோகன், செல்வலிங்கம் (லண்டன்), ஆனந்தராஜா (FRANCE), கரண் (GERMANY), இந்துமதி (இலங்கை), நிர்மலா (LONDON) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்போது அஞ்சலிக்காக அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் நாளை(07.03.2013) வியாழக்கிழமை மு.ப.10.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல.76, அரசடி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.0777531353, 021 2220086

தகவல்
குடும்பத்தினர்.


உடனடி வேலைவாய்ப்பு

**டுபாய்**

சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள பிரபல நிறுவனத்தில் கீழ்காணும் வெற்றிடத்திற்கு உடனடியாக ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

| | Nos. | BASIC SALARY | Fixed OT | SECURITY ALLOWANCE |
|---|---|---|---|---|
| SECURITY GUARDS | 100 | 1200 AED | 487 AED | 240 AED |

SLBFE Charges : Govt. Approved Charges Only

மாதாந்தம் ரூ. 70,000/- க்கு மேல்

1 AED = Rs. 36/-

**Benefits / Conditions**

தங்குமிடம் மற்றும் உள்ளூர் பிரயாண ஒழுங்கு, மருத்துவம் - கம்பனியால் ஒழுங்கு செய்யப்படும். வேலை நேரம் தினமும் 9 மணித்தியாலங்கள் 1 மணித்தியால விடுகை மற்றும் 02 மணித்தியால OT கம்பனியால் வழங்கப்படும். இன்சூரன்ஸ் - UAE சட்டங்களுக்கு அமைவாக கம்பனியால் வேலை செய்யும் காலங்களில் ஒழுங்குசெய்யப்படும். 02 வருட சேவை ஒப்பந்தம். இரண்டுவருடத்திற்கு ஒருமுறை திரும்பி வர விமானச் சீட்டு. ஏனைய விதிமுறைகள் UAE சட்டத்திற்கு அமைவானதாகும்.

நேர்முகப் பரீட்சைகள் வெளிநாட்டு முகவர்களால்

**09, 10 மார்ச் 2013 சனி ஞாயிறு**

(காலை 10.00 முதல் மாலை 4.00 மணி வரை)

AL/Advt/2491/05/13

நேர்முக பரீட்சைக்கு வரும்போது உங்களின் பாஸ்போட், சுயவிபரக்கோவை, கல்விச் சான்றிதழ்கள், முன்னனுபவச் சான்றிதழ்கள் மற்றும் 12 பாஸ்போட் அளவு புகைப்பட பிரதிகள் (White Background) தவறாமல் கொண்டுவரவும்.

Lic. No. 2491

**AL - AZAB Travels (Pvt) Ltd**
No. 67, 1st Floor, Pradeepa Mawatha, Colombo 10.
(மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்னால்)
Tele : 011 266 9995 / 077 011 8786
E-mail : alazabtravels@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களே குடாநாட்டு பயிரழிவுகளுக்கு காரணம்

## நஷ்டஈடு எதுவும் வழங்கவில்லையென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கவலை

வலி. வடக்கு, மார்ச் 6

யாழ். மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக விவசாயிகளும் மற்றும் தோட்டச் செய்கையாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாய அமைப்புகள் தெரிவித்துள்ளன.

எனினும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எந்த விதமான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை என்றும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழையும் பனியும் மாறி மாறி பெய்வதால் மரக்கறி வகைகள் உட்பட ஏனைய பயிர் வகைகள் பெருமளவில் அழிவடைந்துள்ளன.

**விவசாயத் திணைக்களம் வெறும் புள்ளி விவரங்களைச் சேகரித்ததே தவிர எந்த வகையான உதவிகளும் கிடைக்கவில்லை**

பெரும்பாலான இடங்களில் மழையால் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ். மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தென்னிலங்கையில் வழங்கப்படுவது போன்று பயிரழிவுகள் மற்றும் இயற்கை அழிவுக்கான விவசாயக் கொடுப்பனவுகள் வழங்கப் படுவதில்லை.

கடந்த காலங்களில் கூட இத்தகைய அழிவுகள் பல தடவைகள் இடம் பெற்ற போதிலும் விவசாயத் திணைக்களம் வெறும் புள்ளி விவரங்களைச் சேகரித்ததே அன்றி எந்த வகையான உதவிகளும் கிடைக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய விடயங்களில் இனிவரும் காலங்களிலாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேள்வி எழுப்புகின்றனர். (ம-86)

## வலி.கிழக்கு வீதிகளை திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 6

வலி. கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட நான்கு வீதிகளைப் புனர்நிர்மாணம் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சபையின் நிதி உதவியுடன் இந்த நான்கு வீதிகளும் விரைவில் புனரமைக்கப்பட வுள்ளன.

நீர்வேலி - செம்பாட்டு வீதி, இருபாலை - செம்மணி வீதி, அச்சுவேலி - பூதத்தம்பி வீதி, சிறுப்பிட்டி - கலை ஒளி வீதி ஆகிய நான்கு வீதிகளுமே இவ்வாறு புனரமைக் கப்படவுள்ளன.

தற்போது இந்த வீதிகள் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு பெரும் சேதமடைந்து காணப்படுகின்றன.

குறிப்பாக நீர்வேலி செம்பாட்டு வீதி மழை காலத்தில் வெள்ளம் அதிகம் தேங்கி நிற்பதால் சேறும் சகதியுமாகக் காணப்படுகின்றது.

இந்த சேறு சகதியால் குறித்த வீதியால் பயணிப்பேர் சறுக்கி விழுந்து விபத்துக்கு ஆளாகி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-17)

## ஆலயத்தின் ஊடாக வாழ்வதார உதவி வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 6

பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள ஆலயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அந்த ஆலயத்தின் ஊடாக வசதி குறைந்தோருக்கான வாழ்வதார உதவிகளை வழங்க மத விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைய யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பதினைந்து ஆலயங்கள் ஊடாக கோவில் ஒன்றுக்கு பத்துக் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு நூற்றி ஐம்பது குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப் படவுள்ளன.

இதற்கான படிவங்கள் பூரணமாக நிரப்பப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மா.ஆனந்த லெட்சுமி தெரிவித்தார்.

படிவங்களை நல்லூர் கந்தசுவாமி கோவிலின் சமீபமாவுள்ள நல்லூர் கலாசார மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)



பாஷையூர், செபஸ்தியன் வீதி முதலாம் குறுக்குச் சந்தியில் நீண்ட காலமாக சேதமடைந்திருந்த பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது. (ம-135)

## சூடு மிதிக்க இடம் கொடுத்தவர் பறிகொடுத்தார் வைக்கோலை!

தென்மராட்சி, மார்ச் 6

வயலில் சூடு மிதிக்க இடம்கொடுத்தவர் வைக்கோலை பறி கொடுத்தது மட்டு மன்றி தாக்குதலுக்கும் ஆளாகிக் காயமடைந்தார்.

பாதிப்புற்றவரின் நெல் வயல் சூடு மிதிக்க முடியாத நிலையில் ஈரமாக இருந்ததால், அவரின் வயலில் சூடு மிதிக்க அனுமதி கேட்டு சூடு மிதித்தவர் அங்கு குவிக்கப்பட்டிருந்த வைக்கோலையும் அபகரித்துச் சென்றுள்ளார்.

இது தொடர்பாக சூடு மிதித்தவரிடம் விசாரித்து விட்டுத் திரும்பும் போது உதவி செய்த வயல் காரர் தாக்கப்பட்டார். மறைந்திருந்து தாக்கப்பட்டதில் அவர் தலையில் காயமடைந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை மட்டு விலில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் மட்டு வில் வடக்கைச் சேர்ந்த இராசதுரை மகேஸ்வரன் (வயது 50) என்பவரே தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, காணித் தகராறு தொடர்பாக மைத்துனர் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்தார். மந்துவில் கிழக்கில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சங்கிலி நடராசா (வயது 58) என்பவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். (ம-9)

## குற்றச் செய்திகள்

வடமராட்சி, மார்ச் 6

வாகனங்கள் செலுத்தும் தகுதிக்கான சான்றிதழ் இன்றி லொறியைச் செலுத்திச் சென்ற சாரதிக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் வர்கனச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் சான் றிதழ் இல்லாத லொறிச் சாரதி சிக் குண்டார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இந்தச் சாரதியைப் பொலிஸார் முற்படுத்திய போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனைஅடுத்து 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

பொது இடத்தில் மது போதையில் அசிங்கமாக நடந்து கொண்ட இருவர் பருத்தித்துறை நீதிமன்றில் தலா ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் மதுபோதையில் அட்டகாசம் புரிந்து அசிங்கமாக நடந்து கொண்ட இருவரை ரோந்து நடவடிக்கையின் போது பொலிஸார் கைது செய்தனர்.

கைதான இருவர் மீதும் பருத் தித்துறை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் இருவர் மீதான வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருவ்ரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா ஆயிரம் ரூபா வீதம் அபராதம் செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (ம-8)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

நெல்லியடிப் பொலிஸ் பிரிவில் உரிய ஆவணங்கள் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற இளைஞர் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் என்பன இன்றியும், மது போதையிலும் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர்.

இவர் மீது 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவ்வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது இளைஞர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதன் பேரில் இரு குற்றச் சாட்டுக் களுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதமும் ஏனைய இரு குற்றச்சாட்டுகளுக்கு தலா ஆயிரம் ரூபா வீதமும் ஒரு குற் றச்சாட்டுக்கு 3 ஆயிரம் ரூபாவுமாக மொத்தமாக 20 ஆயிரம் ரூபா அப ராதமாக விதிக்கப்பட்டது. (ம-8)

★ ★ ★

வடமராட்சி, மார்ச் 6

பாதுகாப்புக் கடவையில் எச் சரிக்கையை மீறி மோட்டார் சைக்கி ளைச் செலுத்திச் சென்ற ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லியடிப் பொலிஸார் பாது காப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த போது மோட்டார் சைக்கிள் செலுத்திச் சென்ற ஒருவரை நிற்குமாறு விடுக்கப்பட்ட எச்சரிக்கையை மீறிச் சென்றதாக குற்றம்சாட்டப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரணை செய்த மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன், குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து 3 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (ம-8)

## நன்கொடைப் பணம் வழங்காததால் செயற்பட முடியாதுள்ள சனசமூக நிலையங்கள்

### வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு மனு

வடமராட்சி, மார்ச் 6

கடந்த மூன்று ஆண்டுகளாகச் சனசமூக நிலையங்களுக்கு அரச மானியமான நன்கொடைப் பணம் வழங்கப்படாமையால் பல சனசமூக நிலையங்கள் இயங்க முடியாது போகும் அபாயம் உள்ளது என்று வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மனு ஒன்றை இந்த சமாசத்தின் தலைவர் கொ.குணசிங்கம், செயலாளர் கு.மகாலிங்கம், பொருளாளர் இ.தங்கவேல் ஆகியோர் ஒன்றிணைந்து கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் ஊடாக யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகி யோருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

**2011 ஆம் ஆண்டில் இருந்து சன சமூக நிலையங்களுக்கு உரிய நன்கொடை வழங்கப்படவில்லை.**

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளவை வருமாறு:-

உள்ளூராட்சி திணைக் களத்தால் சனசமூக நிலையங்களுக்கு அரச மானியமாக வழங்கப்படும் நன்கொடை கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்படாமையால் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் முடங்கிப் போயுள்ளன.

ஆரம்பத்தில் சன சமூக நிலையங்களுக்கு 500 ரூபாவில் இருந்து 5000 ரூபாவரை உயர்த்தப்பட்டு நன்கொடையாக வழங்கப் பட்டது. எனினும் 2012 ஆம் ஆண்டில் இருந்து சன சமூக நிலையங்களுக்கு உரிய நன்கொடை வழங்கப்பட வில்லை.

இது தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களமோ, பிரதேச சபைகளோ எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை. இதனால் இந்தப் பிரதேச சபையின் கீழ் உள்ள பல சனசமூக நிலையங்கள் செயற்பட முடியாமல் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

எனவே அரச மானியமான சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகளை வழங்கி அவை இயங்குவதற்கு ஊக்கமளிக்குமாறு வேண்டுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சி வயல்களில் 'பன்றிநெல்'

கிளிநொச்சி வயல் நிலங்களில் பன்றிநெல்களை பரவி வருகிறது. நெற்பயிருடன் இணைந்து வளரும் பன்றி நெல்களையை விவசாயிகள் களை நாசினிகள் மூலமாகக் கட்டுப்படுத்த முடியாது. இவற்றைக் பிடுங்கி அகற்றுவதுடன் உடனடியாக எரிக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா இதனைத் தெரிவித்தார். வயல் நிலங்களில் காணப்படும் பசளைக் குறைபாட்டை நிவர்த்திக்க ஏக்கருக்கு 2கிலோ தேவையான உரங்களைப் பயன்படுத்தவும் அறிவுறுத்தினார்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ்.பல்கலைக்கழகத்தின் 28ஆவது பட்டமளிப்பு விழாவில்
Best wishes


Best wishes
சின்னத்தம்பி டிகுகுமார்
B.A., Dip.in.Edu., M.A.(Tamil)
முதுகலைமாணி (தமிழ்)
திருமதி சுதாஜினி சஞ்சீவ்
B.Com(Acc.Spl), M.A.(Public Administration)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா
பட்டங்கள் பெற்ற இவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
நலன்புரிக்கழகம்,
யா/அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.
(34177)(9.14)


# குடிசை, கொட்டில்களில் வாழும் வவுனியா கிராமவாசிகள் அவலம்

வவுனியாவில் பெய்து வரும் மழையினால் தற்காலிகக் குடிசைகளில் வசித்து வரும் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலப் போரினால் இடம்பெயர்ந்து தமது சொந்தக் கிராமங்களில் தற்காலிகக் குடிசைகளில் மீளக் குடியமர்ந்த வவுனியா நாவற்குளம், நொச்சிக்குளம், ஓமந்தை, பூந்தோட்டம், மாளிகை, ஆறுமுகத்தான், புதுக்குளம், ஆத்திமோட்டை, பெரியபுளியங்குளம், மரையடித்தகுளம், விநாயகபுரம், புளியங்குளம், நொச்சிமோட்டை, வெளிக்குளம், பம்மைமடு, கற்பகபுரம் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தற்காலிக குடிசைகளுக்குள் வெள்ள நீர் உட்புகுந்ததால் பாதிக்கப்பட்டுள்ளனர். நிம்மதியாக உறங்க முடியாத நிலையில் இரவு வேளைகளில் இவர்கள் விழித்திருப்பதைக் காண முடிகின்றது.

நிரந்தரத் தொழில் இன்றி அல்லற்படும் இந்தக் குடும்பத்தினர் விவசாயத்தையே ஜீவனாம்சத் தொழிலாக நம்பியுள்ளனர். ஆனால் இவர்களால் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் நாசமடைந்துள்ளன.

இதனால் அன்றாட உணவுத் தேவைகளுக்கு நிவாரணத்தையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். இவர்களுக்கு வெள்ளநிவாரண உதவிகளும் இதுவரை வழங்கப்படவில்லையெனத் தெரிய வந்துள்ளது.

எனவே தமது அவல நிலையை உணர்ந்து நிரந்தர வீட்டுத்திட்டத்தை வழங்குமாறு இந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)


பஜாஜ்
சிறப்புச் சலுகை
2013 மார்ச் 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை முற்பதிவு செய்து கொள்வனவு செய்யும் அனைத்து
பஜாஜ் முச்சக்கரவண்டியுடனும்
பெறுமதிமிக்க ஒருசோடி பக்கத்திரை
இலவசம்!

விலை ரூ. 460,880/-
மேற்குறிப்பிடப்பட்ட விலை VAT உள்ளடக்கப்பட்டுள்ளதோடு, முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.
tradlanka
DPMC
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம் PB270
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 02. தொ.பே: 011-4700600 பெக்ஸ்: 011-4700677
மின்னஞ்சல்: info@dpmco.com இணையத்தளம்: www.dpmco.com


## சட்டவிரோத கடல்தொழிலில் ஈடுபட்டால் சட்ட நடவடிக்கை

**மன்னார் சமாசத் தலைவர் தெரிவிப்பு**

மன்னார், மார்ச் 6

தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி கடல்தொழிலில் ஈடுபடும் கடல் தொழிலாளர்களுக்கு எதிராக ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மன்னார் மாவட்ட கடல்தொழில் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் நூர்முகமது ஆலம் தெரிவித்துள்ளார்.

வெடிபொருள்களைப் பயன்படுத்தி மீன்களைப் பிடித்தல் மற்றும் தங்கூசி வலை, சுருக்குவலை, மொக்திவலை, நாய் வலை, தள்ளுவலை, இழுவை வலை ஆகியவற்றைப் பயன்படுத்திக் கடற்றொழிலில் ஈடுபடல் என்பன ஏப்ரல் மாதம் தொடக்கம் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதனை மீறி தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களைப் பயன்படுத்தி கடல் தொழிலில் ஈடுபடும் கடல்தொழிலாளர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை மன்னார் கடல் தொழில் உதவிப் பணிப்பாளர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

## புதுமாத்தளன் பகுதியில் புதிய மண் அணைகள்

முல்லைத்தீவு, மார்ச் 6

முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் படையினர் புதிய மண் அணைகளை அமைப்பதுடன், தமது காவல் அரண்களைப் புனரமைத்து வருவதாகவும் தெரிய வருகின்றது.

இறுதிப் போர்க்களமாக விளங்கிய புதுமாத்தளன் பகுதியில் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

தற்போது புதுமாத்தளன் கடற்கரையில் மீன்பிடித் தொழிலும் இடம்பெற்று வருகின்றது.

இந்த நிலையில் புதுமாத்தளனுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடைப்பட்ட பகுதியை அண்மித்த வெளியில் படையினர் புதிய மண் அணைகளை அமைத்து வருவதுடன் தமது காவல் அரண்களைப் புனரமைத்து வருவதாகவும் தெரிய வருகின்றது. (க-எ)

## மெய்வன்மைப் போட்டி

பேராறு இந்து தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த மெய்வன்மைப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றுள்ளன.

பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் பா.காந்தசீலன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்தின் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.ஜெயபாலன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக கற்சிலைமடு பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா, ஒட்டுசுட்டான் பொலிஸ் அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (க-600)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுமி சிகிச்சையின் பின் நலம்

### சாதித்தனர் அமெ. விஞ்ஞானிகள்

நியூயோர்க், மார்ச் 6
எச்.ஐ.வி. தொற்றால் பாதிக்கப்பட்ட சிறுமி, சிகிச்சைகளின் மூலம் உடல் நிலை தேறியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் மிசிசிப்பி மாநிலத்தைச் சேர்ந்த இரண்டரை வயதான பெண் குழந்தை ஒன்றே இவ்வாறு குணமடைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"சிகிச்சைகளின் பின்னர் குறித்த குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று உள்ளமைக்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. எனினும் தற்போதைய சிகிச்சை ஏனைய சிறுவர்களிலும் அதே மாதிரியான மாற்றங்கள் ஏற்படுகின்றதா? என்பதை கண்டறிவதற்கு இன்னும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்" என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எவ்வாறெனினும் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளான குழந்தைகளை குணப்படுத்துவதற்கு இந்த முடிவு சாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என்று விஞ்ஞானிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ற)

## சிரிய இராணுவத்தினர் 40 பேர் சாவு

டமாஸ்கஸ், மார்ச் 6
ஈராக்கில் இருந்து சிரியாவுக்குச் சென்றுகொண்டிருந்த சிரிய இராணுவத்தினரை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதலில் 40 சிரிய இராணுவத்தினர் உயிரிழந்தனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வாகனத் தொடரணியை இடைமறித்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் சிரிய இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது. (ற)

# அணு ஆயுதம் தயாரிப்பதை உடனே நிறுத்த வேண்டும்

## ஈரானை மிரட்டுகிறது இஸ்ரேல்

வோஷிங்டன், மார்ச் 6
அணு ஆயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபடுமானால் கடுமையான எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எஹூத் பராக் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வோஷிங்டனில் நடைபெற்றுவரும் அமெரிக்க - இஸ்ரேல் பொது விவகாரங்களுக்கான செயற்குழுக் கூட்டத்திலேயே இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் எஹூத் பராக் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபடுவதற்கு ஈரானை ஒருபோதும் இஸ்ரேல் அனுமதிக்காது. எமது எச்சரிக்கையையும் மீறி ஈரான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடுமானால் கடும் எதிர் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். இந்தப் பிரச்சினையைச் சுமூகமாகப் பேசித் தீர்ப்பதற்கு இன்னும் காலம் இருக்கிறது. ஈரானுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் நிலை ஏற்படாது என்றே நாம் கருதுகின்றோம்- என்றார்.

ஈரான் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகளில் இறங்கியுள்ளது என்று அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன. எனினும் ஈரான் அந்தக் குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து மறுத்து வருகின்றது.

இதேவேளை, அண்மையில் யுரேனியம் செறிவூட்டல் தொடர்பாக அமெரிக்காவின் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் ஈரானுடன் நடத்திய பேச்சுக்கள் எந்தவிதமான முடிவுகளும் இன்றி முடிந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)


எஹூத் பராக்


பலஸ்தீன ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்படுவதைக் கண்டித்து பலஸ்தீன மேற்குக் கரையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது வீதியின் குறுக்காக படுத்து இஸ்ரேல் இராணுவ வீரர்களை வழிமறிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்.

## அரண்மனை திரும்பினார் ராணி எலிசபெத்



லண்டன், மார்ச் 6
வயிற்றுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பிரிட்டன் மகாராணி எலிசபெத் சிகிச்சைகளின் பின்னர் அரண்மனை திரும்பினார்.

86 வயதுடைய பிரிட்டன் மகாராணி எலிசபெத் வயிற்றில் ஏற்பட்ட தொற்று காரணமாக கடந்த சனிக்கிழமை லண்டனில் உள்ள மன்னர் 7ஆம் எட்வேர்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஓரிரு நாள்கள் சிகிச்சை வழங்கப்படும் என்று கூறப்பட்ட நிலையில் ராணி எலிசபெத் நேற்றுமுன்தினம் மருத்துவமனையில் இருந்து அரண்மனை திரும்பினார்.

மருத்துவமனையில் உள்ள பிற நோயாளர்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதைத் தடுக்கும் முகமாகவே அவர் அங்கிருந்து விரைவாக அரண்மனை திரும்பினார் என்று கூறப்படுகிறது.

பிரிட்டன் மகாராணி எலிசபெத் அடுத்த மாதம் தமது 87ஆவது பிறந்தநாளைக் கொண்டாட இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## கென்யாவில் பொதுத் தேர்தலில் சுறுசுறுப்பான வாக்களிப்பு

### அசம்பாவிதத்தில் 8 பேர் சாவு

நைரோபி, மார்ச் 6
கென்யாவில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொதுத் தேர்தல் நடைபெற்று வருகிறது.

வாக்குப் பதிவுகள் மிகவும் சுறுசுறுப்பாக இடம்பெறும் அதேவேளை, வாக்காளர்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்து வருகின்றனர் என்று கென்ய தேர்தல் திணைக்கள அதிகாரிகள்அறிவித்துள்ளனர்.

2007ஆம் ஆண்டு கென்யாவில் இடம்பெற்ற தேர்தலின் போது பெரும் வன்முறை வெடித்தது. அந்த வன்முறைகளில் 1,000க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், தற்போது நடைபெறும் தேர்தலில் அமைதியைப் பேணும்படி வலியுறுத்தப்பட்ட போதிலும், மொம்பாசா பிரதேசத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் நான்கு காவல்துறை அதிகாரிகளும், பொதுமக்கள் 8 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்திருந்தன. (ற)



## எகிப்து வன்முறைகளில் ஐவர் சாவு


### 400க்கும் மேற்பட்டோர் காயம்

கெய்ரோ, மார்ச் 6
எகிப்தில் இடம்பெற்ற அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களின் போது 5 பேர் உயிரிழந்துள்ளனர். பாதுகாப்புத் தரப்பினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே இடம்பெற்ற மோதல்களின் போதே இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

உயிரிழந்தவர்களில் இருவர் பாதுகாப்பு துறை அதிகாரிகள் என்று எகிப்து பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எகிப்தில் தற்போது, அரசியல் பிரச்சினை மேலோங்கி வருகின்றது. கடந்த 2011ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் எகிப்திய ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் பதவியில் இருந்து விலக்கப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தற்போதைய ஜனாதிபதி முகமது மூர்ஸிக்கு எதிராக எதிர்க்கட்சிகளும் மக்களும் இணைந்து ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் 400க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். (ற)



## பிரேஸில் தீ விபத்து

### உயிரிழந்தோர் எண்ணிக்கை 240 ஆக உயர்ந்தது

பெர்லின், மார்ச் 6
பிரேஸில், சன்டா மரியா இரவு நேர களியாட்ட விடுதியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி குறித்த களியாட்ட விடுதியில் பெரும் தீ விபத்து ஏற்பட்டது.

அதில் சிக்கி 234 பேர் உடல் கருகி உயிரிழந்தனர். 140 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 5 பேர் கடந்த மாதம் உயிரிழந்திருந்தனர். இந்தநிலையில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வந்த ஒருவர் நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார். அதையடுத்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 240 ஆக அதிகரித்துள்ளது. (ற)

## போர்னியா மாகாணத்தில் மோதல் தீவிரம்; விரைகின்றன மலேஷிய போர் விமானங்கள்

கோலாம்பூர், மார்ச்.6
மலேஷியாவின் போர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட துப்பாக்கி மோதலில் 8 பொலிஸார் உட்பட 26 பேர் உயிரிழந்தனர். அதையடுத்து மலேஷிய விமானப்படை நேற்று குண்டுவீச்சுத் தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

போர்னியா மாகாணத்தில் உள்ள சாபா கிராமத்தை கட்டுப்பாட்டில் வைத்துள்ள பிலிபினோ முஸ்லிம் அரச குடும்பத்தின் பாதுகாவலர்களுக்கும், மலேஷியா பொலிஸாருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

போர்னியா மாகாணம் தீவுப் பகுதியாகும். அதன் பெரும் பகுதி பிலிப்பைன்ஸ் நாட்டின் கட்டுப்பாட்டிலும், சிறு பகுதி மலேஷியா அரசுக்கு உட்பட்டதாகவும் காணப்படுகிறது.

தற்போது பிலிபினோ அரச குடும்பத்தினர் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியை பிலிப்பைன்ஸுடன் இணைக்க [illegible] மோதல்கள் வெடித்துள்ளன. (ற)

## அரசின் சிக்கன நடவடிக்கைக்கு போர்த்துக்கல் மக்கள் எதிர்ப்பு

லிஸ்பன், மார்ச் 6
போர்த்துக்கல் அரசின் சிக்கன நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான போர்த்துக்கல், பல்வேறு வரி உயர்வுகள் அடங்கிய வரவு-செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளது. அதற்கு நாடாளுமன்றமும் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போதைய அரசு ஆட்சியில் இருந்து விலகி, புதிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் செய்வோர் கோருகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியில் போத்தல்களை உடைத்து அடாவடியில் ஈடுபடும் கும்பல்

## செம்மணியூடாக பயணிப்போர் அவதி

யாழ்ப்பாணம், மார்ச் 6

நல்லூர், செம்மணி வீதியில் இரவு வேளைகளில் மது அருந்தும் கும்பலின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

மதுப்பிரியர்கள் மது அருந்திவிட்டு மதுப் போத்தல்களை உடைத்து வீதியில் வீசுவதனால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இரவு வேளைகளில் ஒன்று கூடும் இந்தக் கும்பல் மதுவை வாங்கி வீதியின் ஓரத்தில் வைத்து அருந்துகின்றனர். போதை தலைக்கேறியதும் அருந்தி முடிந்த வெற்றுப் போத்தல்களை வீதியின் நடுவே உடைத்து வீசுகின்றனர். வீதியில் பயணிப்போர் இது தொடர்பாகக் கேட்க முற்பட்டால் அவர்களை அச்சுறுத்துகின்றனர்.

இதனால் பல அசௌகரியங்களைத் தாம் எதிர்நோக்கி வருவதாக பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை இந்தக் கும்பல் பகல் நேரங்களில் மோட்டார் சைக்கிளில் தலைக் கவசம் அணியாத நிலையில் பொதுமக்களைப் பயமுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

(3-288)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதரும் மாவை சிவநாதம் பட்டி மன்றக் குழுவின் தலைவருமாகிய

**க.நித்தியதசீதரன்**

அவர்கள் யாழ்.பல்கலைக் கழக 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் சைவ சித்தாந்த முதுகலை மாணிப் பட்டம் பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மேலும் பல பட்டங்கள் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வாழ்த்துகின்றோம்.

Best Wishes

மாவைசிவநாதம் பட்டி மன்றக்குழு சார்பாக
நடுவர், சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்
0776132176

### நன்றி தெரிவித்தல்

எமது மகன் செல்வன் **அமரர் யோ.யூட் நிசாந்தன்** அவர்களின் இறுதி அஞ்சலி நிகழ்வின் போது, தொலைபேசி மூலமும் துண்டுப் பிரசுரம் மூலமும் இரங்கல் செய்தியினை தெரிவித்தவர்களுக்கும், நேரடியாகவும் இறுதி நிகழ்விலும் கலந்து கொண்டு, பல்வேறு உதவிகள் புரிந்தவர்களுக்கும், அத்துடன் இறுதி "ஆன்மா இளைப்பாற்று திருப்பலியினை" நிறைவேற்றிய பங்குத் தந்தையர்களுக்கும்,மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், பாடசாலைச் சமூகம், வங்கி ஊழியர்கள், வைத்திய அதிகாரிகள், திணைக்கள உத்தியோகத்தர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் அனைவருக்கும் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த எல்லோருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
கரைச்சி கிழக்கு,ப.நோ.கூ.சங்கம்.

மு.யோகலிங்கம் (தந்தை)
குடும்பத்தினர்.

(24280) (7.25.11)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 ★ 01 ★ 1958

மறைவு 17 ★ 02 ★ 2012

அமரர்

**தியாகராசா கருணாகரன்**

எங்கள் அருமை அப்பாவே
எங்களை விட்டு எங்கு சென்றீர்
ஏங்கித் தவிக்கும் உங்கள் உறவுகள்
ஓராண்டென்ன, ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டுச் செல்லாது
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கும் உறவுகள்

கூழாவடி மேற்கு,
ஆனைக்கோட்டை.

தாய், மனைவி,
பிள்ளைகள், சகோதரர்கள்.

(34146) (10.7.25)

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
24.01.1946
மறைவு
04.02.2013

கடந்த 04.02.2013 இறைபதமெய்திய எமது குல தெய்வம்

**அமரர் சின்னட்டி முருகையா**

அவர்களது பிரிவுத்துயரதை நேரில் வந்தும், தொலைபேசி மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்ததன் மூலகமாகவும் பகிர்ந்து கொண்டதுடன் இறுதிவரை இணைந்து நின்றவர்கள் இன்றுவரை பக்கத்துணையாகி இருந்தவர்கள் அனைவருக்கும் இருகரம் கூப்பியே எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று 06.03.2013 அன்னாரது இல்லத்தில் நடைபெறும் நினைவஞ்சலிகளிலும், கிரியைகளிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்குமாறும் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

அளவெட்டி மேற்கு.
T.P. 021 3205713

குடும்பத்தினர்.

### உதயன் விளம்பரத் தொடர்புக்கு

advt@uthayan.com
0215671111

### தேவை

கணினி நிறுவனமொன்றிற்கு MS Office, DTP படித்த பெண் பிள்ளைகள் தேவை.
உங்கள் சுயவிவரக்கோவையை 10.03.2013 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் அனுப்பி வைக்கவும்.

**மே/பா. விளம்பர இல.4439**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.** (C/6903)(7.25.11)

### தவறிவிட்டது

மன்னார் நகர சபையில் சாரதியாக கடமையாற்றும் கி.சத்தியசீலன் (மோகன்) என்பவருடைய பணப்பை, ATM காட், சாரதி அனுமதிப்பத்திரம், அலுவலக அடையாள அட்டை உள்ளிட்ட சில ஆவணங்களுடன் மன்னார்-வவுனியா வீதியில் தவறவிடப்பட்டுள்ளது.
இதனைக் கண்டெடுத்தவர்கள் மன்னார் நகர சபையுடன் அல்லது 0777769625 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C/6901)(7.25.11)

### விற்பனைக்கு

- உணவுப் பொருள்களை (E.g:-மிக்சர்,வெந்தயம்) சிறிய பைக் கற்றுகளாக பொதியாக்கும் தானியங்கி இயந்திரம்
- 16 X, 18X, 23X இல் கல் ரயர்கள்
- 12 Sri MITSUBISHI LANCER கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
T.P-0754238448
(பூநாறி மரத்திற்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில்)

(34164)(7.25.11)

### வடக்கின் பெரும்போர் பிற்போடப்பட்டுள்ளது

வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் சென்றல்-சென்.ஜோண்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான 107 ஆவது போட்டி காலநிலை சீரின்மை காரணமாக மார்ச் 14, 15, 16 ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதனையும், 11 ஆவது ஒருநாள் போட்டி மார்ச் 23 ஆம் திகதி (சனிக்கிழமை) நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

அதிபர்,
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

அதிபர்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(C/6902) (7.25.11)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி(சிறப்பு) B.A(Hons) Philosophy பட்டம் பெற்ற

செல்வி

**நீருஷா முத்துக்கிருஷ்ணன்**

(உதவி விரிவுரையாளர்-யாழ்.பல்கலைக்கழகம்)

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவிகள் வகித்து வாழ்க வளமுடன் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

Best wishes

சங்கத்தானை,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,
அண்ணா, தங்கை.

### பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 28.02.2013 அன்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்ற

**இரத்தினராஜா ராஜ்கரன்**

(B.A.Dip.in Edu)

(ஆசிரியர் யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை)

அவர்களை மேன் மேலும் பல பட்டங்கள் பெற உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கொக்குவில்.

வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,சகோதரர்கள்,
தயாகரன்(குடும்பத்தினர்.)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி P.லதீஸ்வரி
B.A.(Hons),PGDE,M.Ed.(merit)

28.02.2013 அன்று யாழ்.பல்கலைக்கழகத்தின் 28ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகல்விமாணி M.Ed. (merit)பட்டத்தைப் பெற்ற எமது வித்தியாலய

ஆசிரியை திருமதி P.லதீஸ்வரி அவர்களை வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்களைப் பெற மனமார வாழ்த்துகின்றோம்.



Best Wishes

வாழ்த்துவோர்:
ஆசிரியர், நலன்புரி சங்கம்
கிளி/கண்டாவளை ம.வி.

(27782)(6.7.25)

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
03.02.1941

விண்ணில்
08.03.2010

**அமரர் ஜெயதேவி வேலாயுதம்**

திதி- நவமி- 06.03.2013 (புதன்கிழமை)

அன்பே உருவான இல்லத்தரசியே
நீங்கள் எம்மைப் பிரிந்து மூன்று
ஆண்டுகள் ஓடி விட்டன அன்பு
உள்ளங்களில் என்றென்றும் நிறைந்திருக்கும் தேவி......
என்றென்றும் பொலி கண்டிக் கந்தவனத்து
முருகப் பெருமானின் திருவடியில்
உங்கள் ஆத்மா இளைப்பாற மனமுருகி
பிரார்த்திக்கின்றோம். மயிலேறும் பெருமான்
மனமிரங்கி ஒரு புத்தம் புது மலராக அணைத்துக் கொள்வாராக
ஓம் சாந்தி

"கணபதி",
வதிரி, கரவெட்டி.
021 2262446

(27779)(7.11)

உங்கள் நினைவுடன்
க.வேலாயுதம் (கணவர்)
மற்றும் உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீசெல்ஸ் தீவுகளில் ஆசிரியர் நியமனம் பெற்றுச் செல்லவுள்ளவர்களுக்கு விமான சீட்டுக்கள் வழங்கும் நிகழ்வு கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் டிலான் பெரேரா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## இணையத்தளத்தின் ஊடாக ரூ.260 மில்லியன் நிதி மோசடி

### அரச சார்பற்ற நிறுவனத் தலைவர் கைது

கொழும்பு,மார்ச்6

இணையத்தளத்தின் ஊடாக இலங்கையின் அரச வங்கி ஒன்றில் சுமார் 260 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்த குற்றச்சாட்டில், அரச சார்பற்ற நிறுவனமொன்றின் தலைவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அரச வங்கியொன்றிலிருந்த 260 மில்லியன் ரூபாவை வங்கி அட்டைகள் மூலம் அரச சார்பற்ற நிறுவனத்தின் இரண்டு கணக்குகளுக்கு மாற்றியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெளிநாடுகளில் வசிப்பவர்களின் வங்கி அட்டைகளைத் திருடி, அவற்றை இணையத்தை பயன் படுத்தி மிகவும் சூட்சுமமான முறையில் அரச சார்பற்ற நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளுக்கு

**வங்கியொன்றிலிருந்த 260 மில்லியன் ரூபாவை வங்கி அட்டைகள் மூலம் அரச சார்பற்ற நிறுவனத்தின் இரண்டு கணக்குகளுக்கு மாற்றியுள்ளார்**

அவர் மாற்றியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிதி மோசடி தொடர்பில் கடந்த மாதம் 14 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பொன்சேகாவுக்கு சுகவீனம் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,மார்ச்6

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

சரத் பொன்சேகா ஏற்பட்ட சுகவீனம் காரணமாக நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. அதன் காரணமாக வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

படையினரை தேர்தல் கடமைகளுக்காக பயன்படுத்தியமைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கு நேற்று புதன்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, சுகவீனம் காரணமாக சரத் பொன்சேகா

**சரத் பொன்சேகா ஏற்பட்ட சுகவீனம் காரணமாக நேற்று செவ்வாய்க் கிழமை நீதிமன்றில் முன்னிலையாகவில்லை.**

நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணைகளுக்கு சமூகமளிக்க முடியாது போயுள்ளதாக அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

அதனையடுத்து வழக்கு விசாரணைகள் எதிர்வரும் மே மாதம் 27ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ச)

## சைபர் பாதுகாப்பு இல்லாததே இணைய தாக்குதலுக்குக் காரணம்

கொழும்பு,மார்ச்6

இலங்கையில் இருந்து செயற்படுகின்ற அரச இணையத்தளங்களுக்கு அடிப்படை சைபர் பாதுகாப்பு முறைமை இல்லாததாலேயே அவை இணையவழி தாக்குதலுக்கு உட்படுத்தப் படுகின்றன.

இவ்வாறு இலங்கை கணினி அவசர மறுமொழி மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசினுடைய பெரும்பாலான கணினிகளுக்கு அடிப்படை பாதுகாப்பு முறைமை வழங்கப்பட்டிருக்கவில்லை என்று கணினி அவசர மறுமொழி மையம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் சகல இணையத் தளங்களுக்கும் சைபர் பாதுகாப்பு வசதிகளை வழங்க வேண்டும் என்று கணினி அவசர மறுமொழி மையம் கூறியுள்ளது. (ச)

## இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளில் உள்நாட்டு அமைப்புக்களே ஈடுபாடு

### அமைச்சர் மஹிந்த சமரசிங்க குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச்6

சர்வதேச சமூகத்தை விட உள்நாட்டு அமைப்புக்களே இலங்கைக்கு எதிராக அதிகம் செயற்படுகின்றன என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்தச் செவ்வியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பல்வேறு அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு அமைய சில உள்நாட்டு அமைப்புக்கள், இலங்கைக்கு எதிராகச் செயற்படுகின்றன.

**நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.**



அரசு என்ற ரீதியில் மனித உரிமைகளை மேம் படுத்த எவ்வளவுதான் முயற்சி எடுத்தாலும், சில தரப்பினர் அரசியல் நோக்கங்களுக்காக மனித உரிமை மீறல் இடம்பெறுவதாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

நாட்டின் அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் சிலர் செயற்பட்டு வருகின்றனர்.

சனல்-4 ஊடகத்தின் ஊடாக இல்லாதவற்றை உருவாக்கி போலிப் பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.என்றார். (ச)

## யானைத் தந்த முத்துக்களுடன் மூவர் மாட்டினர்

கொழும்பு,மார்ச்6

யானைத் தந்த முத்துக்களை விற்பனை செய்த மூவர் பேலியகொட பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.

சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதி வாய்ந்த யானைத் தந்தத்தின் 12 முத்துக்கள் குறித்த சந்தேகநபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள நபர்கள் தெஹியோவிட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

## தொழிற்சாலையில் திடீர் தீ

கொழும்பு,மார்ச்6

கொழும்பு,கெரவலப்பிட்டிய எண்ணெய் தொழிற்சாலையில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. தீயைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தீ பரவல் ஏற்பட்டுள்ள இடத்துக்கு அருகில் கெரவலப்பிட்டிய மின் உற் பத்தி நிலையம் அமைந்துள்ளது.

அதன் காரணமாக அந்த மின் உற்பத்தி நிலையத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீயை விரைவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

## பழங்களைச் சேமித்து வைக்க நிலையம்

கொழும்பு,மார்ச்6

அநுராதபுரம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற பழங்களை நீண்டகாலம் சேமித்து வைக்கக் கூடிய நிலையம் ஒன்று எப்பாவளப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது என்று அநுராதபுரம் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் டபிள்யூ. எம்.ஆர்.பி.வீரசேகர தெரிவித்தார்.

மாம்பழம், வாழைப்பழம், விழாம்பழம், பப்பாசிப்பழம் உள்ளிட்ட பழவகைகளை நீண்டகாலம் சேமித்து வைக்கும் நோக்கிலேயே இந்த நிலையம் அமைக்கப் படவுள்ளது என்று அவர் கூறினார். (ச)

## மனநோய் தொடர்பில் மக்களுக்கு விளக்கம்

### விரைவில் புதிய செயற்றிட்டம்

கொழும்பு,மார்ச்6

மனநோய் தொடர்பில் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கும் செயற்றிட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டம் சுகாதார அமைச்சின் மனநோய் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டம் ஊடாக மனநோய்க்கான அறிகுறிகள், மனநோய்க்காக சிகிச்சை பெறும் இடங்கள் மற்றும் மனநோய் ஏற்படுவதற்கான பிரதான காரணங்கள் குறித்து தெளிவு படுத்தப்படவுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் உலக மக்களில் அதிகமானோர் மனநோயால் பாதிக்கப்படுவர் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி பணியை வருட இறுதிக்குள் பூர்த்திசெய்து 600 மெகாவாற்ஸ் மின்சாரம் தேசிய கட்டமைப்புடன் இணைக்கப்படும்

### சீனத் தூதர் பவித்ராவிடம் உறுதி



கொழும்பு,மார்ச் 6

நுரைச்சோலை அனல் மின் நிலைய இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டப் பணிகளை இந்த வருடத்துக்குள் நிறைவு செய்து 600 மெகா வாற்ஸ் மின்சாரத்தை தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு சீனத் தூதர் வூ ஜியாங்ஹாவ் மின்சக்தி எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சியிடம் உறுதியளித்துள்ளார்.

சீனத் தூதுவருக்கும் மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மின்சக்தி எரிசக்தி அமைச்சில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் மின் உற்பத்தித் துறைக்கு சீனா அளித்து வரும் பங்களிப்பு குறித்து ஆராயப்பட்டது. நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தினூடாக 300 மெகா வாற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. 2ஆம் 3ஆம் கட்டங்களினூடாக 600 மெகா வாற்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அதன் கீழ் மேலும் இரு நிலையங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன. இந்தப் பணிகளை உரிய தரத்துடன் துரிதமாக பூர்த்தி செய்யுமாறு அமைச்சர் கோரியபோது அதற்கு சீனத் தூதர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மின்சாரத்துறையில் தற்பொழுது காணப்படும் நிலைமை குறித்து ஆராயப்பட்டது. மின் உற்பத்தித் துறையின் மேம்பாட்டுக்கு எதிர்காலத்திலும் சீனா ஒத்துழைப்பு வழங்கும் என்று சீனத் தூதர் உறுதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 93 ஆவது பிறந்த தின வாழ்த்து



அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும்
நமசிவாயம்
செல்லமுத்து அம்மையார்
இன்று (06.03.2013) புதன்கிழமை தனது 93 ஆவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் வெகு விமர்சை யாகக் கொண்டாடு கின்றார். இவரை கனடாவில் வசிக்கும் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர்.
5 ஆம் வட்டாரம், அனலைதீவு.

(34167)(2.25.7)

# 11 ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
20.12.1935
உதிர்வு
03.07.2002

## அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

அப்பாஅப்பா என்று மனம் நிறைய அழைத்தோமே!
எந்நேரமும் சிரித்தமுகமாய் சிந்தனையோடு இருப்பீர்களே!
பதினோர் ஆண்டுகள் சென்றதுவோ!
உங்கள் அன்புமுகத்தைக் காணாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

சங்கத்தானை, சாவகச்சேரி. குடும்பத்தினர்.

(C/6907)(2.25.7)

# புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## புலோலி கிழக்கு பருத்தித்துறை
# பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி — களஞ்சிய முகாமையாளர் 208/13
02. சம்பளத்திட்டம் — 9950 85× 10 90×10 -11700.00 இத்துடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பும் படிகளும் வழங்கப்படும்.
03. கல்வித்தகைமை — கூட்டுறவுப்பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்ட த்தில் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப் பட்ட துறையில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (சா.த)/க.பொ.த (சா.த) இல் கணிதம் மொழி உள்ளடங்கலாக 4 திறமைச் சி த்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

01.பதவி — விற்பனையாளர் 308/17
02. சம்பளத்திட்டம் — 8950.00-65×10 70×10- 10300.00 இத்துடன் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்ட சம்பள அதிகரிப்பும் படிகளும் வழங்கப் படும்
03. கல்வித்தகைமை — கூட்டுறவுப் பணியாளர் (கனிஷ்ட) தராதரம் சித்தி

அல்லது

தரம் 08 இல் பெற்றுள்ள சித்தியும் விற் பனைத் தொழிலில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுப வம்.

பொதுவானது
1. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய பிணை செலுத்தப்படல் வேண்டும்
2. பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ்தொழில் தகைமைச் சான்றிதழ் என்பன வற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப் படல் வேண்டும்.
3. வயதெல்லை18-45 வயதிற்குட்பட்டவர்க ளாக இருத்தல் வேண்டும்.
4. சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தினை தாம் கடமை புரியும் சங்கத் தினூடாக அனுப்பி வைக்கப்படல் வேண் டும்.

எமது சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்ட வாறான விவரங்களை பூர்த்தி செய்து சான்றிதழ்களின் நிழற் பிரதி களுடன் 20.03.2013 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் புலோலி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், புலோலிகிழக்கு, பருத்தித்துறை எனும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்
புலோலி ப.நோ.கூ.சங்கம் (6799)(7.25.11)

# மோ.வாகனச்சாரதி அனுமதிப்பத்திரம் குறித்த செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றாதோர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 6

யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக் களத்தில் 01.10.2011 ஆம் திகதி தொடக்கம் 31.10.2012 ஆம் திகதி வரை மோட்டார் வாகனச் சாரதி அனு மதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட் சைக்குத் தோற்றி அதில் சித்தியடைந்தும் இதுவரை செயன் முறைப் பரீட்சைக்குத் தோற்றாதோர் எதிர்வரும் 15 திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட மோட்டார் போக்கு வரத் துத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளனர்.

மேற்படி செயன்முறைப் பரீட்சைக்குரிய திகதியைப் பெற்று குறித்த பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் தங்க ளுக்குரிய மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தைப் தாமதமின்றி பெற்றுக்கொள்ளமுடியும்.

30.09.2011 ஆம் திகதிக்கு முன்னர் மோட்டார் வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி, அந்தப் பரீட்சையில் சித்தியடைந் தும் கடந்த 28 ஆம் திகதிவரை செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றாதோரின் விண்ணப் பங்கள் காலம் கடந்துள்ளன. இதனால் குறித்த விண்ணப்ப தாரிகள் விண்ணப்பக் கட்ட ணத்தை மீளச்செலுத்துவதோடு, எழுத்துப் பரீட் சைக்குத் தோற்றி அந்தப் பரீட்சையில் சித்தியடைந்து 92 தினங்கள் கடந்த பின்னரே செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

எனவே மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத் தால் செயன்முறைப் பரீட்சைக்கு திகதி வழங்கப்பட்ட வர்கள் அந்தத் திகதியில் செயன்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என்று யாழ். மாவட்ட மோட்டார் போக்கு வரத்துத் திணைக்கள மோட்டார் வாகனப் பரிசோதகர் அறிவித்துள்ளார். (வ)

# விளையாட்டு விழாவும் விருது வழங்கும் போட்டிகளும்

யாழ்ப்பாணம், மார்ச் 6

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஏற்பாட்டில் திரிய சவிய ஸ்ரீலங்கா யுத் விளையாட்டு விழாவும், தேசிய விருது வழங்கும் போட்டியும் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் மாற்றுத் திறனாளிகள் உட்பட, இளைஞர் சேவை மன்ற அங்கத்தவர்கள் பங்குபற்ற முடியும். நாடகம், நாவல், சிறுகதை, கட்டுரை, கவிதை, பாடலாக்கம், கதகளி, அறிவிப்பாளர், சாஸ்திரிய இசை, மேலைத்தேய இசை, சிற்பம் ஆகிய போட்டிகள் நடைபெற்று விருதுகள் வழங்கப்படும்.

கரப்பந்து,வலைப்பந்து, கபடி, மரதன் ஆகியன விளையாட்டு விழாவுக்கான போட்டிகளாகவும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டி களில் பங்குபற்ற விரும்புவோர் எதிர் வரும் 15 ஆம் திக திக்கு முன்னர் தேசிய இளைஞர் சேவை கள் மன்றம், யாழ்ப் பாணம் எனும் முக வரிக்கு விண்ணப் பிக்க முடியும்.

தேசிய இளைஞர் சேவை மன்றத்தில் அங்கத்துவ மற்ற வர்கள் மன் றத்தில் அங்கத்துவமாக இணைந்து போட்டி களில் பங்கு பற்ற லாம். அத்துடன் வெளிநாடுகள் செல்வதற்கான சந்தர்ப்பம், சிறுகைத் தொழில், கடன் வசதி மற்றும் விளை யாட்டு உபகர ணங்கள் என்பவற் றினையும் பெற்றுக் கொள்ளமுடியும் என தேசிய இளைஞர் கள் சேவை மன்றத் தில் உதவிப் பணிப் பாளர் எஸ். ஈஸ்வர ராஜா தெரிவித்துள் ளார். (3-ரி)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
1936★05★18

இறைவன் காலடியில்
2013★02★04

## அமரர் குட்டிப்பிள்ளை சுப்பிரமணியம்

கடந்த (04.02.2013) திங்கட்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த எங்கள் குடும்பத் தந்தை சுப்பிரமணியம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தோருக்கும், பிரசுரங்கள் வெளியிட்டு கடைசிவரை உதவிய பிரசாந்தின் நண்பர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (06.03.2013) புதன்கிழமை யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் ஆத்ம சாந்திக்காக திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

விண்ணுலக வாழ்வதனை உம் விழிகள் நோக்கிடவே
எம்விழி மறைந்து போனீரே தந்தையே
பேரப்பிள்ளைகள் பாரினிலே ஈரம் சிந்தினவே உம்
இருவிழி மூடிய சேதி கேட்டு கள்ளமில்லா உம் கனிமொழி
கேட்டு சிறகடித்துச் சிரித்தோமையா சிறகொடிந்து
போனீரே சிறிது நேரத்தில் நிலையற்ற இந்த உலக
வாழ்வுதனில் நிலையாக உம் அன்பை விட்டுச் சென்றீரே
நிழலாக எம் அன்பு நீங்காது என்றும் உங்களை விட்டு
தந்தையே கடலாக எம் கண்ணீர் உறையாது என்றும்
உங்கள் பிரிவால்

22,
சென்.பற்றிக்ஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துடிக்கும்: ராணி - மகள், பிரசாந், பிரதாப், கரன் (பேரன்), சங்கீதா, கிசாளினி (பேர்த்தி), ஜெராட் (மருமகன்), நியூட்டன்.

(34165) (10.7.25)

# பகிரங்க ஏல விற்பனை

## வடபிராந்திய பார ஊர்திகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து), கிளிநொச்சி

*பதிவு இல:- K/177 (21.07.1995)*


வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச்சங் கங்கத்திற்குச் சொந்தமான பழைய வாகனங்களை திருமுறிகண்டியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து 13.03.2013 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

விற்பனை செய்யப்படவுள்ள வாகனங்களைக் கடமை நாள்களில் 9 மணி தொடக்கம் 4.00 மணிவரை பார்வை இடலாம். இது தொடர்பான விபரங்களையும் நிபந்தனைகளையும் "தலைமைச் செயலகம்" உலக உணவுத் திட்டம் அருகில் 155 ஆம் கட்டை, கிளிநொச்சியில் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து 12.03.2013 மாலை 4.00 மணிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள் ளப்படுகின்றீர்கள்.

தொலைபேசி இல:- 021 3208346

**தலைவர்,**
வடபிராந்திய பார ஊர்திகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டி

தென்மராட்சி, மார்ச் 6

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவினரால் கட்டுரைப் போட்டி நடை பெறவுள்ளது.

கிராமமட்ட 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் போட்டியில் பங்குபற்றலாம். குடும்பத்தை பாதுகாப்பவளை மேம்படுத்துவோம், வன்முறைகளைக் குறைப்பதில் சமூகத்தின் பங்கு, பெண்களை வலுப்படுத்துவதில் குடும்பத்தினதும் சமூகத்தினதும் பொறுப்பு என்னும் தலைப்புகளில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து 450 தொடக்கம் 500 வரையான சொற்கள் உள்ளதாக கட்டுரை அமைய வேண்டும்.

ஆக்கங்கள் அந்தந்தப் பகுதி கிராம அலுவலரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலக பெண்கள் சிறுவர் பிரிவில் ஒப் படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3-9)

### வீதி, வடிகால் சீரில்லாததால்

## திருநெல்வேலி சந்தைக்குள் பாய்ந்தது மழை வெள்ளம்

திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் வெள்ளம் அதிகளவில் தேங்கியதால் சந்தைக்கு வருகை தந்த நுகர்வோர் மற்றும் சந்தை வியாபாரிகள் பெரும் சிரமப்பட்டனர்.

நேற்று முன்தினம் திடீரென கொட்டிய கனத்த மழையினால் பலாலி வீதி மற்றும் ஆடியபாதம் வீதியில் தேங்கிய வெள்ளம் சந்தைக்குள் நுழைந்தது.

சந்தையின் கீழ் மாடிப் பகுதியில் வெள்ளம் உட் சென்றதால் அந்தப்பகுதி பெரும் சேறும் சகதியுமாகக் காட்சியளித்தது.

குறிப்பாகச் சந்தைக்கு முன்பாகவுள்ள ஆடிய பாதம் வீதியோரத்தில் வடிகால்கள் உரிய முறையில் புனரமைப்பு செய்யப்படவில்லை. இதனால் வெள்ளம் வழிந்தோட முடியாதுள்ளது.

இது குறித்து பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமாருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:-

தற்போது பலாலி வீதி அகலிக்கப்பட்டு உயரமாக புனரமைக்கப்பட்டுள்ளது. அதனால் வெள்ளம் ஆடியபாதம் வீதிக்குச் செல்கிறது. ஆடியபாதம் வீதியை உடனடியாக புனரமைத்து, வடிகால்களையும் சீரமைத்துத் தருமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்டுள்ளோம்- என்றார். (3-17)

## பாடுகள் இல்லாமல் வெற்றி இல்லை

*ஒலிம்பிக் போட்டிகளிலும் மற்றும் எந்த விளையாட்டு போட்டிகளிலும் கல்வித்துறை, கலைத்துறை போன்ற எந்த துறைகளிலும் வெற்றி பெறுபவர்கள் பல்வேறு தியாகங்களையும், பயிற்சிகளையும், கஷ்டங்களையும் அனுபவித்தே வெற்றி வாகை சூடுகிறார்கள். தியாகப்பலி இல்லாமல் வெற்றிப்படி இல்லை.*

*பாடுகள் இல்லாமல் வெற்றி இல்லை. சிலுவை இல்லாமல் மீட்பு இல்லை, பெரிய வெள்ளி இல்லாமல் உயிர்ப்பு, ஞாயிறு இல்லை என்ற உண்மையை இயேசுவின் வாழ்வும் வார்த்தைகளும், தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. இயேசு தனது போதனைகள் மத்தியிலும், புதுமைகள் மத்தியிலும் தனது சீடர்களுக்கு இந்தப் பேருண்மையை எடுத்துரைத்ததோடு அவர்களைத் தனது பணிக்குத் தயாரிக்கும்போது பாடுகளை ஏற்கவும் தயாரிக்கின்றார். கிறிஸ்துவின் பள்ளியில் பாடுகள் மிகவும் இன்றி யமையாதவை.*

*இயேசு தமது பணியின் ஆரம்ப மைய, இறுதிக் காலங்களில் அதாவது மூன்று முறைதனது கொடிய பாடுகள், சிலுவை மரணம், உயிர்ப்பு பற்றி தனது சீடர்களுக்கு வெளிப்படுத்துகிறார். படிப்படியாகவும் தேவையானபோது கடிந்து கொண்டும்பாடுகளின் முக்கியத்துவத்தை எடுத் துரைக்கிறார்.*




*முதன் முறை இயேசு தனது பாடுகளை வெளியிட்டபோது, சீடர்களுள் முதல்வராக இருந்த பேதுரு இயேசுவைத் தனியே அழைத்து கடிந்து கொண்டார். அப்போது இயேசு அவரைப் பார்த்து, "என் கண் முன்னே நில்லாதே சாத்தானே" என்று கூறினார். பின்பு சீடர்களையும், மக்களையும் பார்த்து, "என்னைப் பின் பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தம் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்தொடரட்டும்" என்றார். [மாற்க்.8:31-34]*

*இயேசு பாடுகளின் வழியாகச் சென்று தம்மைத் தொடரும் அனைவரையும் அதே வழியில் அழைக்கிறார். நமது நாளாந்த வாழ்வில் பாடுகள் நம்மைப் பதம்பார்க்கின்றன. துன்பங்கள் நம்மைத் துரத்துகின்றன. தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும், சமூக வாழ்விலும், நோயின் வடிவிலும், நமது கடமைகள், அர்ப்பணிப்புகள், பிறருக்கு செய்யும் உதவிகள், வடிவிலும் துன்பங்கள் நமக்கு வந்துகொண்டே இருக்கின்றன. இயேசுவின் வழியில் அனைத்தையும் பொறுமையாக ஏற்று நல்லவைகளுக்காக பயன்படுத்துவோம். நமது பாவங்கள், குற்றங்களுக்காக அந்தத் துன்பங்களை இறைவனுக்கு காணிக்கையாக ஒப்புக் கொடுப்போம். இயேசுவின் பின்னால் நானும் செல்வேன் திரும்பிப் பார்க்கமாட்டேன் என்று இயேசுவின் கரத்தை இறுகப் பற்றிக் கொள்வோம். அப்போது வாழ்வில் வசந்தம் வரும்.*

**அருட்பணி அ.ம.ஸ்ரீபன், செ.நா**

## மனனப்போட்டி

சுழிபுரம், மார்ச் 6

சுழிபுரம் பறாளை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனையை முன்னிட்டு கந்தரனுபூதி மனனப்போட்டி நடை பெறவுள்ளது.

பஜனை சபையால் நடத்தப்படும் இந்தப் போட்டியில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் சமய தீட்சை வைத்தல், உருத்திராட்சம் அணிவித்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (3-28)



வலி.வடக்கு, மார்ச் 6

சிவராத்திரியை முன்னிட்டு சிவமானிட விடியற் கழகத்தினால் மேற்கொள்ளப்படும் சமயப் பணிகளில் ஒன்றாக கீரிமலை சிவபூமி அறக்கட்டளை மண்டபத்தில் யோகா-சனப் பயிற்சிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

யோகாசனப் பயிற்சி முகாமில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டார்கள். அறநெறிப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், இளைஞர், யுவதிகள் எனப் பலரும் இந்த வகுப்பில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (3-86)

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 6

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின்மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் மாசார் பிரதேசம், உடுப்பிட்டி, தொண்டமானாறு, வல்வெட்டி, வல்வெட்டித்துறை, பொலிகண்டி ஆகிய இடங்களிலும்-

நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரையும் மாசார் பிரதேசம், இணுவில் கந்தசுவாமி கோயில் முதல் கே.கே.எஸ் வீதி வரையான பிரதேசங்கள், இடைக்காடு, தம்பாலைப் பிரதேசங்கள் ஆகிய இடங்களிலும்-மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 6

புத்தூர் மடிஹே பஞ்ச சீஹ வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த இல்ல மெய்வன்மைப் போட்டி மழை காரணமாகப் பிற்போடப்பட்டுள்ளது என பாடசாலை அதிபர் கு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (3-253)

## அரச நடன விருது விழா

யாழ்ப்பாணம், மார்ச் 6

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுக்கமைய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நடன மற்றும் நாட்டிய நாடகக் குழு ஏற்பாட்டில் அரச நடன விருது வழங்கல் விழா நாளை வியாழக்கிழமை மாலை 5மணிக்கு ஜோண் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ரீ.பி.ஏக்கநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது. (த-14)

## மகளிர் தினவிழா

தென்மராட்சி, மார்ச் 6

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரின் மகளிர் தினவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் முன்பள்ளி வளாகத்தில் பிற்பகல் 2 மணிக்கு சங்கத் தலைவி திருமதி ம. கீர்த்திநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி.ர.நவரத்தினம் கலந்துகொள்வார். மகளிர் தினத்தையொட்டி சங்க அங்கத்தவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதாக சங்கச் செயலாளர் செல்வி.ஐ.கயந்தா தெரிவித்தார். (3-9)

நீரோடும் கண்களோடு நெஞ்சுருகும் நினைவலைகள்

இதயமதினில் சுமந்தவர் பிரிந்தே ஓராண்டு

கருவறைதனில் சுமந்தவர் பிரிந்தே ஏழிரண்டு ஆண்டு



திதி: 06.03.2013



20.03.1934
16.02.2012
சிற்றம்பலம் வேலாயுதம்

மண்மகிழ
கண்நெகிழ

21.06.1938
15.07.1999
வேலாயுதம் வள்ளிப்பிள்ளை

*நெஞ்சினிலும் தோளினிலும் சுமந்தீர்கள்*
*உங்களுக்காக வாழாது பிள்ளைகளுக்காக வாழ்ந்த தெய்வங்களே*
*கண்மூடி விழிப்பதற்குள் மாயமாய் மறைந்தீர்கள்*
*ஆத்மா சாந்தி பெறவேண்டி கண்ணீர்ப் பூக்களால்*
*இறையருள் வேண்டுகின்றோம்.*

பெரிய தோட்டம்,
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

*உங்கள் நினைவுடன் வாழும்*
மகள், மகன், மருமக்கள்,
பேர்த்தி [illegible]

(34030) (10.7)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி லக்ஷ்சாந்தி கோபாலராசா
இ.அ.சே 2 II

அதிபர்(கிளிநொச்சி மாயவனூர் வித்தியாலயம்) தமது அதிபர் சேவையில் 10 வருடங்களைப் பூர்த்தி செய்து, 08.08.2012 இல் இருந்து இலங்கை அதிபர் சேவை 2 II பதவி உயர்வு பெற்றுச் செல்லும் எமது வித்தியாலய அதிபரின் சேவை மேன்மேலும் உயர்வு அடைய பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாராட்டுவோர்:
பாடசாலைச் சமூகம்
கிளி/ மாயவனூர் வித்தியாலயம்.

(24281)(5.25.7)

4 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் இராமசாமி இராஜேஸ்வரி

மலர்வு
11.01.1949

திதி- 06.03.2013

உதிர்வு
20.03.2009

பருதியாய் ஒளி வீசிய அம்மாவே
பனியாய் உருகுகிறோம் நாங்கள்
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்ததுவோ
உள்ளமெல்லாம் உறையுதம்மா
வாடுகிறோம் நாங்கள் அம்மா
வந்திடுவாய் எங்களில் ஒருவரிடம் ஆவது
விரைவில் வருவாய் என்று கடவுளை வேண்டுகின்றோம்.



உங்கள் நினைவில் வாழும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்,

இத்தாவில், பளை.
TP:0779946006

(34004)(7.25.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.

**இடபம்:** புதியவர்கள் அறிமுகமாவார்கள். தாய்வழியில் ஆதரவுப் அதிகரிக்கும். வியாபாரத்தில் லாபம் வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். அலைச்சலுடன் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** வேலையாள்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும்.

**கடகம்:** குழப்பத்திலிருந்த நீங்கள் இன்று திட்டவட்டமான முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். சகோதரவகையில் இருந்து வந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மனநிறைவு கிடைக்கும்.

**கன்னி:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பயணங்கள் திருப்திகரமாக அமையும். பால்ய நண்பர்களைச் சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

## நாளை

மாசி- 23 வியாழக்கிழமை 07.03.2013
திதி: தசமி மு.ப. 09.48 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப 04.28 வரை
சுபநேரம்: 07.54- 09.24 வரை
இராகுகாலம்: 01.54- 09.24 வரை

**துலாம்:** மனநிறைவுடன் சில காரியங்களைச் செய்து முடிப்பீர்கள். உறவுகளின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கிட்டும். முன்கோபம் விலகும். அரசுப்பணிகள் சுமுகமாக முடியும். வேற்றுமதத்தினரால் ஆதரவு கிட்டும்.

**விருச்சிகம்:** முன்கோபத்தைக் குறையுங்கள். இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் பணிகளை போராடி முடிப்பீர்கள். திட்டமிட்டுச் செயற்படுவதன் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

**தனுசு:** உறவினர்கள், நண்பர்களால் பிரச்சினைகள் வரக்கூடும். வெளி உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுங்கள்.

**மகரம்:** வியாபாரத்தில் அதிரடி முடிவுகளை எடுத்து போட்டியாளர்களை அதிரச் செய்வீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வெளியூரிலிருந்து நற்செய்திகள் வந்துசேரும். உத்தியோகத்தில் உங்களின் திறமையை மேலதிகாரி புரிந்து கொள்வார்.

**கும்பம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். சகோதர, சகோதரிகளால் உதவி கிடைக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மீனம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | | | | 6 | 2 | |
| | 6 | 2 | 4 | | | | 1 | |
| | 1 | 9 | | | 5 | | 8 | 7 |
| 6 | | | | | 2 | 7 | | |
| 5 | 2 | 4 | | | | 9 | 6 | 1 |
| | | 7 | 5 | | | | | 2 |
| 9 | 4 | | 3 | | | 2 | 7 | |
| | 3 | | | | 1 | 8 | 9 | |
| | 7 | 5 | | | | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 8 | 9 | 3 | 2 | 6 | 4 | 7 |
| 3 | 2 | 7 | 4 | 1 | 6 | 5 | 9 | 8 |
| 6 | 9 | 4 | 5 | 7 | 8 | 2 | 3 | 1 |
| 7 | 5 | 9 | 2 | 8 | 4 | 3 | 1 | 6 |
| 1 | 6 | 2 | 3 | 5 | 7 | 9 | 8 | 4 |
| 8 | 4 | 3 | 6 | 9 | 1 | 7 | 2 | 5 |
| 2 | 7 | 5 | 1 | 4 | 9 | 8 | 6 | 3 |
| 9 | 3 | 1 | 8 | 6 | 5 | 4 | 7 | 2 |
| 4 | 8 | 6 | 7 | 2 | 3 | 1 | 5 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் போட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இடம்பெறுமாறு வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# பாராட்டி மகிழ்கின்றோம்

2012 க.பொ.த(உ.த) பரீட்சையில் தமது அதியுயர் சித்திகளால் எமது வித்தியாலயத்துக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்த






செல்வன் **பரமேஸ்வரன் கிரிதாஸ்**
2011
கணிதம் - A,2B மாவ.நிலை - 23

செல்வன் **நடராசா சாருசன்**
2012
கணிதம் - 3A மாவ.நிலை - 22

Best Wishes

**இவர்களோடு**

செல்வன் **சிவஞானம் அனுதீபன்** - கணிதம் - 2C,S மாவ.நிலை 276
செல்வன் **மகேந்திரம் பொன்வேல்** - உயிரியல் - 2B,C மாவ.நிலை 133
செல்வி **சிந்துஜா தங்கராசா** - உயிரியல் - B,C,S மாவ.நிலை 241
செல்வன் **தில்லைநாதன் தினேஸ்குமார்** - உயிரியல் - 3C மாவ.நிலை 261
செல்வி **கலைச்செல்வி தங்கவேல்** - கலை - A,2B மாவ.நிலை 29
செல்வி **நிறைஞ்சனா வரதராசா** - கலை - A,B,S மாவ.நிலை 34

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, இவர்களின் உயர்வுக்காகத் தமது அர்ப்பணமான சேவைதனை நல்கிய அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டி மகிழ்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**யா/இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி**

## வாடகைக்கு

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள Communication கடையொன்று வாடகைக்கு உண்டு. Communication இக்குத் தேவையான பொருள்களுடன் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 674, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
077 853 1032, 077 631 0432
(34188)(5-85-7)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

## தவறிவிட்டது

புதுக்குடியிருப்பு என்னும் முகவரியுடைய **ராசேந்திரம் ராஜ்காந்** என்பவருடைய தேசிய அடையாள அட்டை, **(இல.852335521V)** வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வவுனியாவில் இருந்து யாழ் வரும் பஸ்ஸில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (34156)(5.25.7) 077 4166843

# MA,M.Com,M.Sc.,MBA,PG Dip

## காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டுக்கான (மார்கழி மாத பரீட்சைக்கான) பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

MA.இல் பொருளியல், அரசியல், வரலாறு, தமிழ், ஆங்கிலம், பொது நிர்வாகம், சமூகவியல், சமயமும் தத்துவமும், Tourism Management, Journalism & Mass Communication ஆகிய பாடங்களில் ஒன்றினை தெரிவு செய்ய முடியும்.

M.Com இல் Commerce,Banking, Co-Operative Management ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்யமுடியும்.

P.G Dip ஒரு வருட கற்கை நெறிகளாக Journalism&Mass Communication Managemant,Marketing Management, Public Relections Management Entrepreneurship Development, Hospital Management, Computer Application, Labour Laws and Administrative Law, Information&Communication Law ஆகிய பாடங்களில் ஒன்றினைத் தெரிவு செய்ய முடியும்.

குறிப்பு:
1. இப் பட்ட நெறிகள் யாவும் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
2. பரீட்சைகள் யாவும் காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
3. B.Sc,BA,B.Com ஆகியவற்றிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

முக்கிய குறிப்பு: May மாத பதிவுகளை மேற்கொண்டவர்களுக்கான பரீட்சை விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன. பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் பரீட்சை விண்ணப் பங்களை 15.03.2013 இற்கு முன்னர் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

யாழ்.இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் மதுரை,
தொ.பே.இல.: 021 222 8148 (C/6792)(5.6.7)

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய நாடாளுமன்றம் முன்பாக தி.மு.க. எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

## இலங்கை மீதான பிரேரணையை ஆதரிக்கக் கோரி

புதுடில்லி, மார்ச் 06

இலங்கை மீதான ஜெனிவா பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும், இனப்படுகொலை செய்த இலங்கையைத் தண்டிக்க உதவ வேண்டும், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரனின் கொடூர மரணத்துக்குக் காரணமான ஜனாதிபதி ராஜபக் ஷவைத் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகம் முன்னால் நேற்று தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையைக் கண்டித்தும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் கொலைக்குக் காரணமான இலங்கை ஜனாதிபதி ராஜபக் ஷவுக்கு எதிராகவும் தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள் போராட்டம் நடத்தி வருகின்றன. நேற்றுச் சென்னையில் டெசோ அமைப்பு சார்பில் மு.க. ஸ்ராலின் தலைமையில் இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டம் நடந்தது. இதில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

இந்நிலையில் ஜெனிவா தீர்மானத்தில் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை இந்தியா எடுக்க வேண்டும் என்று கோரி தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று நாடாளுமன்ற வளாகம் முன்னால் உள்ள காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் டி.ஆர்.பாலு, திருச்சி சிவா, கனிமொழி, டி.கே.எஸ். இளங்கோவன், செல்வ கணபதி, ஜெபத்துரை, வசந்தி ஸ்ரான்லி உள்ளிட்ட தி.மு.க.நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர். இதுகுறித்து நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கூறுகையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்பதை வற்புறுத்தியும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்கு இதை கொண்டு வருவதற்காகவும் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினோம்-என்றார்.

(த)

# குடும்பஸ்தரை காணவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 6

கல்வியங்காட்டைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் கடந்த 3 ஆம் திகதி முதல் காணாமற்போயுள்ளதாக அவரது மனைவியால் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்தியக் கிளையில் நேற்று செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக, பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

கல்வியங்காட்டைச் சேர்ந்த ப.ராஜேந்திரன் (வயது - 39) என்பவரே இவ்வாறு காணாமற் போயுள்ளவராவார்.

கடந்த 3 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு அருகில் இடம்பெற்ற அந்தியேட்டிக் கிரியை ஒன்றுக்கச்சென்று விட்டு வீடு திரும்பியுள்ளார். பின்னர் சைக்கிளில் வெளியில் செல்வதாகக் கூறிச் சென்றுள்ளார். அதன் பின்னர் இவர் வீடு திரும்பவில்லை என்று மனைவியால் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணமற் போனவர் 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இனந்தெரியாதோரினால் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு ஆபத்தான நிலையில் சிறிது காலத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் மீண்டும் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ண்(த-5)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை யோகம்மா



கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை யோகம்மா நேற்று(05.03.2013) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், வேலுப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், கனகம்மா, நல்லம்மா, ஞானம்மா செல்வராசா, முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அற்புதராசா (அமெரிக்கா), இராஜேந்திரா(கனடா), யோகராசா(கனடா) ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.03.2013) புதன்கிழமை மு.ப.10.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஏழலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மருமகன் த.குணசேகரம்.

மல்லாகம்.

## செபஸ்ரியாம்பிள்ளை நோபேட் (கோமகன்)



யாழ்ப்பாணம் பாஷையூரைப் பிறப்பிடமாகவும், நோர்வே பேகனை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை நோபேட் (கோமகன்) கடந்த (02.03.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை மற்றும்-எலி சம்மா டெய்சி தம்பதியரின் அன்பு மகனும், சோபனாவின் பாசமிகு கணவரும், சுபர்னா, ஸ்ரீபனா, செப்பனியா ஆகியோரின் அன்பு தந்தையும், கியூபேட், றூபி, குளோரி, காலஞ்சென்ற கியூரி மற் றும் கௌரி, மௌரி, கில்பேட் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2013) வியாழக்கிழமை மு.ப.11மணியளவில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு , பூதவுடல் பேகன் சேமக்காலையில் பி.ப. 12.30 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பசிந்தா பே விற் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## வட்டர் வடிவேல்



யாழ். கைதடியைப் பிறப்பிடமாகவும் கள்ளியடியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாயில் வசித்தவருமாகிய வட்டர் வடிவேல் கடந்த (01.03.2013) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லம்மா (வடிவேல் ரீச்சர், ஓய்வுபெற்ற அதிபர், யாழ். கைதடி சேது காவலர் வித்தியாலயம், முன்னாள் ஆசிரியர், யாழ். கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வட்டர் - சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்றவர்களான முருகன், இலட்சுமி, கயிராத்தை மற்றும் கந்தர், பொன்னி, தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுஜிதா (சுவிஸ்), ரஜிதா (சுவிஸ்), நந்தா, பிரிந்தா (சுவிஸ்), கஜமுகன் ( அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பேரின்பராசா (கனடா), நாகராசா (கனடா), வசந்தா தேவி (மன்னார்), பராசக்தி (மனோகரராசா (மூதூர்), யோகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் அருணாச்சலம் (சுவிஸ்), கிருஷ்ணன் (சுவிஸ்), கிஷோக்குமார் (சுவிஸ்), சுதர்சன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் காலஞ்சென்ற வைத்தி மற்றும் கந்தையா, சின்னம்மா காலஞ்சென்ற நாகமுத்து மற்றும் கந்தர், சின்னத்தங்கச்சி ஆகியோரின் மைத்துனரும் தேவிவிமலா (கனடா), நாதலட்சுமி (கனடா), காலஞ்சென்ற தங்கராசா மற்றும் பத்மராசன் (ஆசிரியர், யாழ். கோப்பாய் தெற்கு றோ.க. பாடசாலை), சசிலேகா (கனடா) ஆகியோரின் அன்புச் சகலனும் அருணுஜன் (சுவிஸ்), அஜிகா (சுவிஸ்), அர்சன் (சுவிஸ்), துசாந்தன், வியாபினி (யாழ். கோப்பாய் நாவலர் த. வித்தியாலயம்), அதிஸ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் கதிரவேலு (கைதடி), சின்னாச்சி (கைதடி), காலஞ்சென்ற கந்தசாமி (கைதடி) மற்றும் சீதேவி (கைதடி), ராஜேஸ்வரன் (மட்டக்களப்பு), லோகினிதேவி (மட்டக்களப்பு), காலஞ்சென்ற வரதராசா (கொழும்பு), யோகாம்பாள் (கொழும்பு) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.03.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன் காடு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்
வ.செல்லம்மா (மனைவி)
பிள்ளைகள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அதிகாரி வீதி, கோப்பாய் தெற்கு.
தொடர்பு:- 0777066989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்கு**

இல.31, மடம் வீதி, யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-0772601176

(34172) (2.25.7)

**வேலைவாய்ப்பு**

யாழ்.நகரில் உள்ள தனியார் கிளினிக்கிற்கு யாழ். நகரில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்துக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட G.C.E O/L சித்தியடைந்த பெண் வேலையாள் தேவை. தகைமையுடையோர் சுயவிவரக்கோவையுடன் இந்த மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (10.03.2013) மாலை 3.00 மணிக்கு 514/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்குச் சமுகமளிக்கவும். (34170) (2.25.7)


**நன்றி நவிலலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்**

எமது இல்லத்தலைவர்

அமரர் **கந்தையா தம்பிராசா**

(பொன்னுத்துரை)



மண்ணில் 10 * 03 * 1926

விண்ணில் 03 * 02 * 2013

வாழியுன் நாமம்

தந்தையாய் நின்று தகைமைகள் தந்த தெய்வம்
வந்தனை செய்யத்தக்க வானுயர் புகழ்க்காண
வஞ்சனை நெஞ்சாலுந்தன் வாழ் வழித்திட்ட போதும்
நெஞ்சிலும் நிறைந்தொளிரும் நேர்மையின் வடிவமாய்
வந்தனை செய்து வாழ் நாளுள்ளளவும் வாழ்த்துவோம்
வாழியுன் நாமம்

நேற்று (05.03.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்ற ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் ஆகியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு,
இணுவில்.

குடும்பத்தினர்.
பொ.நடராசா (உரிமையாளர்)
அண்ணா தொழிலகம்.

(c/5909) (10.7.25)

# மகளிர் தினத்தைமுன்னிட்டு கோப்பாய் பிரதேச செயலகத்தால் கட்டுரைப்போட்டி

மன்னார், மார்ச் 6

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கோப் பாய் பிரதேச செயலகத்தால் கட்டுரைப் போட்டி மற்றும் விவாதப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

விவாதப் போட்டிக ளுக்கு, ஜி.சீ.ஈ. உயர் தரத்தில் கல்வி கற்கின்ற மாணவர்கள் மூவர் ஒரு குழுவில் கலந்து கொள்ளலாம். பாட சாலை அதிபர் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

பெண்களின் பாதுகாப்பு, பெண்களை வலுவூட்டல் மற்றும் பெண்களுக்குரிய சம காலப் பிரச்சினைகளைக் குறைத்தல் தொடர்பானதாக இப்போட்டி அமையும். விண்ணப்பங்கள் யாவும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமைக்கு முன்பதாக 'பிரதேச செய லர், பிரதேச செயலகம் , கோப்பாய்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கட்டுரைப் போட்டிக்கு, 18 வயதுக்கு மேற்பட்ட கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் ஆண், பெண் இருபாலாரும் பங்கு பற்றலாம்.

குடும்பத்தின் பயனை மேன்மைப்படுத்துவோம், பெண்கள் மீது ஏற்படும் வன்முறைகளில் எமது சமூகத்தின் பங்கு, பெண் களை வலுப்படுத்தலில் குடும்பம் மற்றும் சமூகத்தின் பங்கு என ஏதாவது ஒரு தலைப்பில் 450-500 சொற்களுக்கு உட்பட்டதாக கட்டுரை எழுதப்பட வேண்டும்.

போட்டியாளர்கள் தமது வதிவிடத்தை கிராம சேவையாளர் மூலம் உறுதிப் படுத்தி கட்டுரைகளை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-5)

# பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 6

கைதடி கலைவாணி வித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற இருந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் அறிவித்துள்ளார். (ஐ-400)


**தொலைந்து விட்டது**

NPWU 0545 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் பின்பக்க இலக்கத் தகடு கொக்குவில் பகுதியில் தொலைந்துவிட்டது. கண்டு எடுத்தவர்கள் பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(34173) 0777044924, 0778952106 (2.25.7)

**Phone Repairing Course**

Soft View Computer Center
இல் சகல விதமான Phone களையும் திருத்தும் பாடநெறி ஆரம்பமாகிறது.
கொலின் 0779053545
102, பிரதான வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-9 வீதி)


**விழிநீர் சொரிகின்றோம்**

**சின்னத்துரை சத்தியதாசன்**



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சித்தன்கேணியை வசிப்பிடமாகக் கொண்டவரும், கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலயத்தின் அதி சிறந்த தொண்டர்களில் ஒருவரும் சிறந்த சமூக சேவையாளருமாகிய **சின்னத்துரை சத்தியதாசனின்** இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய அவர் அல்லும் பகலும் தொழுத விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆனைக்கோட்டை.

அவரின் பிரிவால் துயரடையும்
ஆனைநர் நண்பர்கள்.

**ஐந்தாம் ஆண்டு நினைவுகள்**



தோற்றம் 21 * 01 * 1957

மறைவு 06 * 03 * 2008

அமரர்

**கிட்டினன் சிவநேசன்**

[வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க சமாசம் மற்றும் பேரிணையத்தின் முன்னாள் பொது முகாமையாளரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும்]

கொஞ்சிக் குலாவி எமை மடிமீது வைத்தணைத்த கைகளை இன்று காணவில்லை
மறக்கத் தான் முடியவில்லையப்பா உம் நினைவுகளை
மீண்டும் எமை அணைக்காதோ –உம் கைகள் என ஏங்குகிறது எம் மனங்கள்
ஐந்தாண்டு சென்றதையா ஆனால் இன்றும் உம் நினைவுகளோ
எம் மனங்களில் நிழலாடுகிறது ஒரு முறையேனும் எம் அருகில் வந்திடீரோ என.......

யார்க்கரு. கரவெட்டி கிழக்கு. (சி/6910)(5.7.25)

குடும்பத்தினர்.

**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



அன்னை மடியில்
22.04.1942
ஆண்டவன் அடியில்
16.02.2012
கொக்குவில் மேற்கு – கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் குருநாதன் சுப்புலட்சுமி**

அன்பின் எழில் உருவாய்
பண்பின் திருவுருவாய்
பாசத்தின் பொக்கிஷமாய்த் திகழ்ந்த தெய்வமே அம்மா
ஊர்போற்ற வாழ்ந்திருந்த உத்தமியே
ஊரார்கள் காத்திருக்க உறவுகள் பார்த்திருக்க
போதுமென்று போனீரோ உங்கள் பிரிவால்
எம் மனம் துடிக்குதம்மா!

இன்று (06.03.2013) புதன்கிழமை அன்னாரின் மூத்த சகோதரனின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில். (34169)(2.25.7)

குடும்பத்தினர்.

advt@uthayan.com 0215671111

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**






எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி ஜெயதீஸ்வரி ஜெயமுருகன்**
அவர்கள் (B.A.Dip.in.Edu)
யாழ்.பல்கலைக்கழக 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் முதுகலைமாணி (தமிழ்) பட்டம் பெற்றமையையிட்டு வாழ்த்துவதோடு, மேலும் இவர் பல பட்டங்கள் பெற்று கல்வி பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலை ஆசிரியர்
**திருநாவுக்கரசு அபராஜிதன்**
அவர்கள் சமாதான நீதிவானாகச் சாவகச்சேரி மாவட்ட நீதிபதி உயர்திரு லெனின்குமார் முன்னிலையில் 01.03.2013 அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு பேருவகை அடைவதோடு அவரது கல்வி, சமூகப்பணி மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

(27873)(2.25.7)

ஆசிரியர் ஒன்றியம்
யா/ கச்சாய் அ.த.க.பாடசாலை கொடிகாமம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்கள்

## சிவபாதம் நாகி



கரவெட்டி மேற்கு ஞானவைரவர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதம் நாகி (05.03.2013) காலமானார்.

அன்னார் சிவபாதத்தின் மனைவியும் சிவ னேஸ்வரன்(கடவுள்), சிவசங்கர் (தெய்வம்), சிவசக்தி (கோமதி), சியாம்சைமன் (தாசன்) ஆகியோரின் தாயும் யோகேஸ்வரி, விஜயலதா, யோகராஜன் ஆகியோரின் மாமியும் கௌசன், கீர்த்தனா, சிந்துஜா, இலக்ஷனா, வேணுஜன், சானுஜா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.03.2013) புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு வேரூண்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் கோயிலடி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## புலவர் மகாலிங்கசிவம் பார்வதிநாதசிவம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மயிலங்கூடல் இளவாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் நந்தாவில் லேன், கொக்குவிலைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட புலவர் ம.பார்வதிநாதசிவம் நேற்று (05.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருகவி ம.வே.மகாலிங்கசிவம் - அருமைமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான உமாமகேஸ்வரி, கமலாதேவி, பிரபாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரி (ஆசிரியை)யின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பிள்ளையினார் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் மருமகனும் பாரதி (கனடா- முன்னாள் ஆசிரியர், கீரிமலை நகுலேஸ்வர ம.வி.), மகாலிங்கசிவம் (பகுதித்தலைவர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி), இளங்கோ (ஆசிரியர், அச்சுவேலி மத்திய கல்லூரி), பாலமுரளி (ஆசிரியர், யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சேந்தனார் (கனடா), கலைவாணி (ஆசிரியை, இணுவில் மத்திய கல்லூரி), சந்திரா (ஆசிரியர், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனும் சேக்கிழார், இறைவி, நிவேதா, தமிழ்மாறன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2013) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன், அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:-
புலவர் குடும்பத்தினர்.
021 320 6590

## நல்லதம்பி இராசதுரை

(ஓய்வுபெற்றஅதிபர் , யா/புங்/கமலாம்பிகை வித்தியாலயம்)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசதுரை நேற்று (05.03. 2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நல்லதம்பி-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்-நல்லதங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மலோஜினியின் அன்புக் கணவரும், யசோதினி(உப தபாலதிபர் -ஊரதீவு), கிந்துஜா, வசிதரன்(பிரான்ஸ்), கோபினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமார்(உரிமையாளர். N.S றேடர்ஸ் மாவத்தகம), சிவகாந்தன்(உரிமையாளர் விசுவல்அன்ட் றைமன்ஸ், கொழும்பு), சுபேசன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயலட்சுமி(ரெத்தினம் கிளிநொச்சி), காலஞ்சென்ற யோகலட்சுமி, மற்றும் ஏரம்பமூர்த்தி(மூர்த்தி-சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காராளபிள்ளை(கொழும்பு), மகாலிங்கம்(சுவிஸ்), ரதி(யாழ்ப்பாணம்), பத்மாவதி(லண்டன்), சந்திரா(கனடா) ஆகியோரின் மைத்துனரும், கஸ்வினி, தஷானிக்கா, திலக்ஷன், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம், வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

# 'கௌரவத்துடனான வாழ்வு' என்னும் தொனிப்பொருளில் மகளிர் தினம்

மட்டக்களப்பு,மார்ச்6

பெண் தொழிலாளர்களுக்கு 'கௌரவத்துடனான வாழ்வு' என்ற தொனிப் பொருளில் சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன என்று மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் வி.கமலதாஸ் தெரிவித்தார்.

சர்வதேச மகளிர் தினம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில், அதுகுறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று அவர் கூறினார்.

வருமானக் குறைவே குடும்பத் தலைவிகள் வெளிநாட்டுக்கு தொழில்வாய்ப்பைப் தேடிச் செல்வதற்கான காரணமாகிறது. எனவே அதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுவ துடன், பெண்களுக்கு உரிய கௌரவமும் வழங்கப்பட வேண்டும் என்றவகையில் மட்டக்களப்பு உள்ளூர் அரசசார் பற்ற நிறுவனங் களின் இணையம் சர்வதேச மகளிர் தினத்தை அனுஷ்டிக்கவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கருத்தரங்கு

மட்டக்களப்பு,மார்ச் 6

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் முஸ்லிம் முன்பள்ளி ஆசிரியைகளுக்கான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சம்மேளன அஷ் ஷஹீத் அஹமட் லெப்பை ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இஸ்லாமிய வரையறை பேணி கலை, கலாசார நிகழ்வுகளை எவ்வாறு நடத்தலாம் என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடை பெற்றது.

அந்தக் கருத்தரங்கில் பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் எம்.எஸ். எம்.அனஸ் பஸ்மி கலந்துகொண்டு விளக்கமளித்தார்.

## கஞ்சா விற்றவர் சிக்கினார்

தலவாக்கலை பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுப்பட்ட ஒருவரை தலவாக்கலை விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

தலவாக்கலை பகுதியில் மிக நீண்ட காலமாக ரயில் பயணிகளிடம் அவர் கஞ்சா விற்பனையில் ஈடுப்பட்டு வந்துள்ளார் என்று விசேட பொலிஸ் அதிரடிப் படையினர் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு-
advt@uthayan.com
0215671111

**கணினி திருத்தம்**
உங்கள் இடத்தில் வந்து கணினிகள் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு:- 0757278676

**தேவை**
★சமையலாளர் ★சமையல் உதவியாளர்
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:-077 1751495

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
Diploma In Bridal Dressing (அனைத்து விதமான மணப்பெண் அலங்காரங்கள்)
Hair Care treatments & Cuttings Course, All types of Latest & Herbal Facials (06 week course)
* Diploma Certificates வழங்கப்படும்.
* அழகுக்கலை குறித்த அனைத்தும் முழுமையான செய்முறைகளுடனும், இலவசப்பொருட்களுடனும் பயிற்றுவிக்கப்படும்.
Handworks வகுப்புகள்
Bombay. Costume Jewellery Making, Paper tole, paper quilling, Ribbion work,
Saree work, Kasuthi work, pot painting, Prick point cards making
* Certificates வழங்கப்படும்
* முழுமையான செய்முறைகளுடன் பொருட்கள் இலவசம்
09/03/2013 முதல் வகுப்புகள் ஆரம்பம
Batch I : 09.00 A.M - 1.00 P.M
Batch II : 2.00 P.M - 6.00 P.M
Jaffna Branch :
No.15, Sirambiyady Lane,
Off Stanley Road,
Jaffna. Tel : 021 222 4550
0775377313 / 0715540156

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/நாவாந்துறை றோ. க. வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி

(05.03.2013 அன்று இறைபதமெய்திய
புலவர். ம.பார்வதிநாதசிவம்
(மகாஜனன்) அவர்களுக்கு எமது இதய அஞ்சலி)



கவிதைக்கிலக்கணமாய் புலமைக்கோர் புராதனமாய்
எளிமைக்கு இருப்பிடமாய்
இன்முகத்தோடு ஏற்றம் பெற்று
வாழ்ந்து காட்டிய எமது தமிழ்மைந்தன்
புலவர் எனும் விருதுக்கு வடிவாய் அமைந்த
பொன்மனச் செம்மலின் பிரிவுக்கோர்
அஞ்சலியாய் எமது இதய அஞ்சலிகளை
அன்னாரின் பாதக்கமலங்களுக்கு சூட்டி
அன்பின் திருவடிவின் ஆத்ம சாந்திக்காய்பப்
பிரார்த்திக்கின்றோம். அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

கல்லூரிச்சமூகம்
யா/மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை.

C/6915)(8.14.16)

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா வேல்தாசன்



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா வேல்தாசன் (பாலன்) நேற்று முன்தினம் (04.03.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பகவதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - குஞ்சரம் தம்பதியரின் அன்பு மருமகனும் தெய்வராணியின் ஆருயிர்க் கணவரும் தேனுசன் (யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்), தஷ்சா (யாழ். ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருஸ்ணபிள்ளை, விஜயமலர், சத்தியதாஸ்,ஈஸ்வரதாஸ், குகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் திருச்செல்வம், இராசதுரை, சந்திரன், ரோசா, ஆனந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.03.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சுன்னாகம், கிழக்கு, சுன்னாகம்.

தகவல்
குடும்பத்தினர்.

## நகுலேஸ்வரன் தையல்நாயகி



நல்லூரைப் பிறப்பிடமாகவும், இல.133A, அரசடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நகுலேஸ்வரன் தையல்நாயகி (கனகாம்பிகை) நேற்று(05.03.2013) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-தங்கரத்தனம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-பவளம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நகுலேஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நகுலேந்திரன் (ரவி), காலஞ்சென்ற விக்கிநேந்திரன்(ஜிந்தா), தர்சிகா, நகுலேந்திரன்(குழி) ஆகியோரின் அன்புத் தாயும், மேரி, பரமலிங்கம்(வவா), தவமலர்(தவம்) ஆகியோரின் அன்பு மாமியும், நிமால், லக்ஷாயினி(இந்தியா), லக்மாலினி, நிரோஜன், நிலக்ஷன், நிலக்ஷனா, சுவஸ்திகா, சோபினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆன்றீந்தியா, லக்ஷிகா ஆகியோரின் அன்பு பூட்டியும், அருமைநாயகம், மகாலக்சுமி(பவளம்), பரமேஸ்வரி(ராணி), மகேந்திரன், காலஞ்சென்ற விஜியபாஸ்கரன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சுசீலா மற்றும் கனகரட்ணம், சிவசுந்தரம், ஞானாம்பிகை, சாந்தாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(06.03.2013) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

133A, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
077 2257930

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லேயில் சாதித்த வீராங்கனைகள்



நல்லூர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 2013 ஆம் ஆண்டுக்கான மகளிர் பிரிவு எல்லேப் போட்டியில் அரியாலை ஐக்கியம் கழக வீராங்கனைகள் சம்பியனாகினர். (ங-23)

# தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டி இன்று வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியில்



யாழ்ப்பாணம்,மார்ச் 6

பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணியளவில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை அணிகளுக்கு இடையேயான இந்தப் போட்டிகள், யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேசியமட்டத்திலான இந்தப் போட்டிகளில் நாடளாவிய ரீதியில் இருந்து ஆண், பெண் பிரிவுகளைச் சேர்ந்த 42 பாடசாலை அணிகள் கலந்துகொள்ளவுள்ளன.

தேசிய மட்டக் ஹொக்கிச் சுற்றுப் போட்டிகளில் முதல் தடவையாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆண், பெண் பிரிவுகளைச் சேர்ந்த தலா நான்கு அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

அவற்றின் விவரம் வருமாறு-

ஆண்கள் பிரிவு

★வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,
★தெல்லிப்பழை யூனியன் கல்லூரி,
★மானிப்பாய் இந்துக் கல்லூரி,
★சென். ஜோன்ஸ் கல்லூரி

பெண்கள்பிரிவு

★உடுவில் மகளிர் கல்லூரி,
★வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி,
★பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை,
★அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்

இதுவரை தேசிய மட்ட ரீதியிலான விளையாட்டு நிகழ்வுகள் எதுவும் யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றதில்லை. இந்த நிலையில் முதல் முறையாக தேசியமட்ட விளையாட்டு நிகழ்வொன்று யாழ். மாவட்டத்தில் நடைபெற குறித்த ஹொக்கிச் சுற்றுப் போட்டி வழிசமைத்துள்ளது.

இதேவேளை இன்று ஆரம்பமாகவுள்ள தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டி ஆட்டங்களைக் காண்பதற்கு ஏராளமானோர் திரள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ங-86-23)

# கே.ஸி.ஸி.ஸி. வெற்றி

வலி.வடக்கு, மார்ச் 6

கொக்குவில் கிழக்கு வளர்மதி விளையாட்டுக் கழகம் விக்ரம்-ராஜன்-கங்கு ஞாபகார்த்தமாக வருடாந்தம் அழைக்கப்பட்ட கிரிக்கெட் கழகங்களுக்கு இடையே நடத்தும் 30 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் ஆட்டமொன்றில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகம் இரண்டு இலக்குகளால் வெற்றியீட்டியது.

கடந்த சனிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழகமும் , ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாரும் எதிர்பாராத வண்ணம் 21.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 100 ஓட்டங்களையே பெற்றது.

இதில்பிரியதர்சன்20ஓட்டங்களையும், நிருஜன் 18 ஓட்டங்களையும், லக்சுமிகாந் 15 ஓட்டங்களையும், மதுசன் 12 ஓட்டங்களையும், இராஜாதித்தன் 11 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 22 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் கொக்குவில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழகத்தைச் சோந்த சிலோஜன் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றம் அடங்கலாக 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பங்குஜன் 2.1 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 7 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், இராகுலன் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், பார்த்தீபன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் பவிதரன் 15 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் கைப்பற்றினார்கள்.

101 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழகம் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே வெற்றி பெற்றது. அந்த அணி 24.4 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் வல்லவக்குமரன் 48 ஓட்டங்களையும், பங்குஜன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாக கே.ஸி.ஸி.ஸி அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர். உதிரிகளாக 13 ஓட்டங்களும் கிடைத்தன.

பந்து வீச்சில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த மதுசன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 19 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், பகீரதன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் நிருஜன், லக்சுமிகாந் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கினையும் கைப்பற்றினர். (ங-86)

# பிற்போடப்பட்டது வடக்கின் போர்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும், யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் சனிக்கிழமை வரை நடைபெறவிருந்த ''வடக்கின் பெரும் மோதல்'' கிரிக்கெட் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளதாக இரு கல்லூரிகளினதும் அதிபர்கள் அறிவித்துள்ளனர். இந்தத் தொடரில் மூன்று நாள் கொண்ட போட்டி 14ஆம் 15ஆம் 16ஆம் திகதிகளிலும், ஒரு நாள் போட்டி 23ஆம் திகதியும் இடம் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ங-23)

# ஹொக்கிச் சம்பியன்கள்




யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே ஆனந்தரெட்ணம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி நடத்திய 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான ஹெக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த வெள்ளிக்கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியானது.

மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை அணியை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி மோதிக்கொண்டது. இதில் பண்டத்தரிப்பு பெண்கள் பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது. (ங-23-86)

# இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சன சமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் தென்மராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று புதன்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி

நாவற்குழி சரஸ்வதி வி.க. எதிர் மின்னொளி வி.க

* * *

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ள இன்றைய ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3 மணி

வதிரி டைமன்ஸ் வி.க. எதிர் சமரபாகு நியூட்டன்

பி.ப 4 மணி

அண்ணா சிலையடி இளைஞர் வி.க எதிர் சென்.பீற்றர்ஸ் வி.க.

* * *

மருதங்கேணிக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை செம்பியன்பற்று அரசனர் தமிழ்க்கலவன் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டி 7 ஆம் திகதி வியாழக்கிழமையும், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் இடம்பெறும் என தெரிவிக்கப்படுகிறது. (ங-8- 23 -400-422)

# மடுப் பிரதேச செயலக கரப்பந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 6

மடுப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்,பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் பெண்கள் பிரிவில் பாலம்பிட்டி உதயா விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்று சம்பியனாயின.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் கட்டையடம்பன் சென்.மரியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் குஞ்சுக்குளம் சென்.மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பாலம்பிட்டி உதயா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சின்னபண்டிவிரிச்சான் சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் பாலம்பிட்டி உதயா விளையாட்டுக் கழக அணி 2:1என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது. (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இரண்டாவது டெஸ்டிலும் இந்தியா வென்று சாதிப்பு


இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 2 ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 135 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

ஹைதராபாத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடியிருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி சார்பாக மைக்கல் கிளார்க் 92 ஓட்டங்களையும், மத்தியூ வேட் 62 ஓட்டங்களையும் பெற்று அந்த அணி 9 இலக்குகளை இழந்து 237 ஓட்டங்களுடன் தனது முதல் இன்னிங்ஸை இடைநிறுத்தியது.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவீந்திர ஜடேஜா, புவனேஷ்வர் குமார் ஆகியோர் தலா 3 இலக்குகளையும், ஹர்பஜன் சிங் 2 இலக்குகளையும், ரவிச்சந்திரன் அஷ்வின் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.





தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி புஜாராவின் 204 ஓட்டங்கள், முரளி விஜயின் 167 ஓட்டங்கள், மகேந்திரசிங் டோனியின் 44 ஓட்டங்கள் என்பவற்றின் துணையோடு 503 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் ஆஸ்திரேலிய அணி சார்பாக கிளென் மக்ஸ்வெல் 4 இலக்குகளையும், ஷேவியர் டொகேர்ட்டி 3 இலக்குகளையும், ஜேம்ஸ்பற்றின்சன் 2 இலக்குகளையும், பீற்றர் சிடில் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

266 ஓட்டங்கள் பின்னிலையில் காணப்பட்ட நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது ஆஸ்திரேலிய அணி.

3 ஆம் நாள் ஆட்ட நிறைவில் அந்த அணி 2 இலக்குகளை இழந்து 74 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடங்கியதிலிருந்து ஆஸி. அணியின் இலக்குகள் இந்தியப் பந்து வீச்சாளர்களால் அடுத்தடுத்து சரிக்கப்பட்டன. இதனால் அந்த அணி 131 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 135 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஆஸ்திரேலிய அணி சார்பாக எட் கொவான் 44 ஓட்டங்களையும், டேவிட் வோர்ணர் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ரவிச்சந்திரன் அஷ்வின் 5 இலக்குகளையும், ரவீந்திர ஜடேஜா 3 இலக்குகளையும், இஷாந்த் சர்மா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் நாயகனாக இரட்டைச் சதம் அடித்த புஜாரா தெரிவானார். 4 போட்டிகள் கொண்ட இந்தத்தொடரில் 2 போட்டிகள் நிறைவடைந்த நிலையில் இந்திய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ந)

## அக்ரமுக்குப் பதில் லீ



கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ.பி.எல்., தொடரில் இடம் பெற்றுள்ள கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் பந்துவீச்சு ஆலோசகராக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் வாசிம் அக்ரம் செயற்பட்டு வந்தார்.

சமீபத்தில் இவர், சொந்த காரணங்களுக்காக இந்தப்பதவியில் இருந்து விலகினார். எனவே அவருக்குப் பதிலாக ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் பிரட் லீயை, கொல்கத்தா அணி நியமித்துள்ளது.

இதன்மூலம் பிரட் லீ அடுத்து நடைபெறவுள்ள 6 ஆவது ஐ.பி.எல்., தொடரில் அந்த அணியின் பந்துவீச்சாளராகவும், பந்துவீச்சு ஆலோசகராகவும் செயற்படவுள்ளார்.

இதுகுறித்து கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணியின் அதிகாரி வெங்கி மைசூர் கூறுகையில், "கொல்கத்தா அணியின் பந்துவீச்சு ஆலோசகராக, பிரட் லீயை நியமிப்பதில் அணி நிர்வாகம் பெருமை அடைகிறது. இவரது அனுபவம், கொல்கத்தா அணியின் பந்துவீச்சாளர்களுக்கு கை கொடுக்கும் என்று நம்புகிறோம்" என்றார். [ந]

## வட்மோர் மீது தவறில்லை



"பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் மீதான விமர்சனங்கள் தவறானவை" என்று பாகிஸ்தான் அணியின் '20/20' போட்டிகளுக்கான தலைவர் மொஹமட் ஹபீஸ் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரில் 0:3 என்ற கணக்கில் தோல்வியைத் தழுவியிருந்தது. இதனையடுத்து அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர் மீதான விமர்சனங்கள் அதிகரித்திருந்தன.

முன்னாள் வீரர்களான மொய்ன் கான் உட்படப் பலர் டேவ் வட்மோர் பதவி விலக வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்ததோடு, பாகிஸ்தான் ஊடகங்களும் வட்மோர் மீது விமர்சனங்களை முன்வைத்திருந்தன.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள மொஹமட் ஹபீஸ்-"டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்விகளை வைத்து அணி மீதும், பயிற்றுவிப்பாளர் மீதும் தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அத்தகைய விமர்சனங்கள் தவறானவை. டெஸ்ட் தொடரில் தோல்வியைத் தழுவியதையடுத்து அணி சிறப்பாக உழைக்கவில்லையென்றோ அல்லது பயிற்றுவிப்பாளர் சிறப்பாகச் செயற்படவில்லை என்றோ அர்த்தப்படாது. பயிற்றுநர் மீதான விமர்சனங்கள் எழுந்தமானவையே." - என்று தெரிவித்தார். (ந)

## இலங்கை அணி தயார்

இலங்கை அணி வீரர்களின் சம்பள ஒப்பந்த பிரச்சினை முடிவுக்கு வந்துள்ளதால் பங்களாதேஷ் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் அனுபவம் வாய்ந்த இலங்கை வீரர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.,) நடத்தும் கிரிக்கெட் போட்டிகளின் மூலம் பெறப்படும் வருமானத்தில் இருந்து தங்களுக்கு 25 சதவிகிதம் அளிக்க வேண்டும் என்று இலங்கை வீரர்கள் வலியுறுத்தினர்.

இதனை இலங்கை கிரிக்கெட் சபை ஏற்க மறுத்தது. எனினும் வீரர்கள் தங்கள் முடிவில் உறுதியாக இருந்ததால் பங்களாதேஷுக்கு எதிராக தொடரில் புதிய வீரர்களை தெரிவு செய்யும் நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில், தெரிவுக்குழுத் தலைவரும் இலங்கையின் முன்னாள் வீரருமான சனத் ஜெயசூர்யா திடீரென வீரர்களின் ஒப்பந்தப் பிரச்சினையில் தலையிட்டார். வீரர்களுடன் சமரச முயற்சியிலும் ஈடுபட்டார். இதையடுத்து இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், இலங்கை அணி வீரர்களுக்குமிடையே சுமுக உடன்பாடு ஏற்பட்டது.

Sri Lanka Cricket

பிரச்சினை முடிவுக்கு வந்ததை அடுத்து இலங்கை அணி விவரம் அறிவிக்கப்பட்டது. எனினும் சிரேஷ்ட வீரர் சமரவீர அணியில் இடம்பெறவில்லை. மார்ச் 8 ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணி வருமாறு -

அஞ்சலோ மத்தியூஸ் (அணித்தலைவர்)

சந்திமால் (துணை அணித்தலைவரும் இலக்குக் காப்பாளரும்). டில்ஷன், சங்ககாரா, திரிமன்னே, கருணாரத்ன, ஷமிந்தா எரங்கா, குஷால் ஜெனித், ஜீவன் மெண்டிஸ், அஜந்த மெண்டிஸ், விதாங்கே, குலசேகரா, வெலகெதர, சுரங்கா லக்மல், ஹேரத், கவுஷல். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்தரங்கு**

16ஆம் திகதி நடைபெறவுள்ள

**அரசமுகாமைத்துவ உதவியாளர் தரம் II தடைதாண்டல்**

பரீட்சைக்குரியது
சனி(9/3), ஞாயிறு(10/3) தினங்களில் காலை 9.00 தொடக்கம் 2.00 மணிவரை
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.ஆஸ்பத்திரி வீதி (கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)
தொ.பே-0754164564

# பாடசாலை கட்டட பணிகள் இறுதி நிலையில்

போரால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கில் மூன்று பாடசாலைகளுக்கு சேவா லங்கா நிறுவனத்தின் நிதி உதவியுடன் கட்டப்படும் கட்டடங்கள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

செம்பியன் பற்று வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை, நாகர் கோவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலேயே புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இம் மூன்று பாடசாலைக் கட்டடங்களுக்கும் தலா 60 லட்சம் ரூபாவை சேவா லங்கா நிறுவனம் வழங்கியுள்ளது.

**advt@uthayan.com**
**0215671111**

**IIS** புதிய பிரிவு ஆரம்பம்
09.03.2013 காலை 10.00

**Courses**

- Certificate in Office Solution Development
- Certificate in Multimedia
- Certificate in Web Designing
- Certificate in DeskTop Publishing
- Certificate in Hardware Technology
- Certificate in Java Programming
- Certificate in Visual Programming
- Certificate in Management
- Certificate in Marketing Management
- Certificate in Human Resource Management
- Certificate in Computerized Accounting
- Certificate in Eng. Drawing & AutoCAD



மேலதிக விபரங்களுக்கு
021 4 922 741

ஒரு கற்கை நெறிக்கான கட்டணத்துடன் இரு கற்கை நெறிகளை பயின்று கொள்ளும் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளுங்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100 CLOCK TOWER ROAD, JAFFNA
T.P : 021 222 2831/021 492 2741 FAX : 021 222 6933
WEB : iis.edu.lk E-Mail : iis@iis.edu.lk

**CANADA**

**Work Permits**

* Male / Female Age 20- 35 Years
* Basic English Knowledge
* 2 Years Work Contract

3rd Batch Closing Date 15-03-2013

தொடர்புகளுக்கு

iCS Integrated Corporate Solutions Pvt Ltd.
No 77, Clock Tower Road, JAFFNA.
021 - 7306000

புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கைநெறிகள்

**CBF&DBF**

Batch 1:- Saturday & Sunday 7.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 7.00 -1.00 medium Tamil
Batch 111:- Saturday & Sunday 12.00 -5.00 medium Tamil
Batch 1v:- Weekdays 3.00 -6.00 medium Tamil

**Chartered**
**CAB 1 & CAB 11**

Batch 1:- Saturday & Sunday 8.00 -1.00 medium English
Batch 11:- Saturday & Sunday 8.00 -1.00 medium Tamil
Batch 111:- Weekdays 3.00 -6.00 medium Tamil

**aat (SriLanka)**
FOUNDATION, INTERMEDIATE, FINAL
Medium:- Tamil , English
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன மாலை 3.00-6.00

**External degree**
GAQ, BA1, BA (Final)
1st in com, BCOM(part 1), BCOM(part 11), BCOM(final)

Further Details:

**JAFFNA COLLEGE**
**UNDERGRADUATE Dept,**
464, Hospital Road, Jaffna.
0212223382

**வெளிவந்து விட்டது**

**A/L-Past Paper-2013**

A/L பாஸ்பேப்பர்-2013ஆம் ஆண்டு உட்பட சகல பாடங்களும் வெளிவந்துவிட்டது.
(அன்ரன் பப்பிளிகேசன்)
யாழ்.நகரில் அன்னை புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 9881

(c/6912)(8.7)

**மணல் மண் வேண்டுமா?**

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?
★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?
★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- ராம்
072 63 78 546

(23-34166)

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

வடமராட்சிப் பிராந்தியக் கிளையின் விரிவாக்கத்திற்கு பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான தகுதி உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

01. நிலைய முகாமையாளர்
02. நிலையச் செய்தியாளர்கள்
03. இணையத்தள வடிவமைப்பாளர்
04. பொது லிகிதர்
05. கணக்கீட்டு உதவியாளர்கள்
06. வரைகலை (கிராபிக்ஸ்) நிபுணர்கள்
07. பக்கவடிவமைப்பாளர்கள்
08. தட்டெழுத்தாளர்கள்
09. பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
10. அலுவலக உதவியாளர்



அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தகுதி, அனுபவத்தின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
எதிர்வரும் 12.03.2013 இற்கு முன்னர்

விண்ணப்பங்களை பெற்றுக் கையளிப்பதற்கு: 55, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

078 284 5000 / 078 284 5030

யாழ்.நகர மத்தியில்

**"உதயன் விருந்தினர் விடுதி"**



- குடும்ப அறை வசதி உண்டு.
- குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் குளிரூட்டப்படாத அறைகள்.
- யாழ்ப்பாண உணவு வகைகள் தயாரித்து தரப்படும்.
- பரந்த வாகன நிறுத்துமிட வசதி.
- காலை உணவுடன் கூடிய அறை வசதி.

குழுமப் பதிவுகளுக்கு விசேட கழிவு உண்டு.

இன்றே ஒருமுறை வருகை தந்து பாருங்கள்

12, சிவகுருநாதர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(c/6914)(8.14.16)
021 222 2330
021 567 7603

**ஆடைகளில் அச்சுக்கலை பயிற்சி**
**FABRIC PRINTING TRAINING**

Archanah ACADEMY Since1989
TEXTILE PRINTING INSTITUTION
Branches in India:- CHENNAI, TIRUVANANTHAPURAM, MUMBAI, HYDERABAD, BANGALORE, COCHIN & CALICUT, COIMBATORE, TRICHY.

இந்தியாவில் புகழ்பெற்ற ஆடைகளில் அச்சுக்கலை நிபுணர், விஜய் டிவி மற்றும் பொதிகை டிவி புகழ் Dr. R.பரதராஜா அவர்களின் நேரடி பயிற்சி யாழ்பாணத்தில் முதல்முறையாக...
பயிற்சியில் பங்கு பெறுங்கள், பயனடையுங்கள்.



| நாள்: | நேரம்: | இடம்: |
| --- | --- | --- |
| மார்ச் 9, 10<br>சனி மற்றும் ஞாயிறு | காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை | PARK VIEW HOTEL<br>107, Kandy Road<br>Opp. Old Park<br>JAFFNA. |

பயிற்சி கட்டணம் : ரூ.3,500/-

இலங்கையில் ரூபவாஹினி - நேத்ரா டிவியில் செவ்வாய் காலை 10:30 மணிக்கும் வசந்தம் டிவி யில் ஞாயிறு காலை 11.00 மணிக்கும் காணத்தவறாதீர்கள்.

E-mail : artsnframes@gmail.com Web : www.archanahacademy.com

பதிவுகளுக்கு: 077 77 22 818, 075 43 98 548, 077 89 04 131, 075 61 52 434

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிதே உண்;
சிறிதே உறங்கு
பொறுமையும்
கருணையும் பூண்டு
கொள்.
-குருநானக்-

# புதன் பொய்கை A

உதயன் | மார்ச் 06 2013 புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு

# அதிர்ஷ்டத்தின் திறவுகோல்கள்



● தே.சௌந்தரராஜன்

அதிர்ஷ்டத்துக்கான காரணம்? ஜாதகமா? வாஸ்துவா? அதிர்ஷ்ட எண்களா? அதிர்ஷ்டக் கற்களா? அதிர்ஷ்டத்தின் மூலம் என்ன? அதை அடையும் வழி என்ன? ஒவ்வொரு மனிதனும் தேடித் தேடி அலைகிறான். ஆனால் ஏதோ சிலர் வாழ்வில் மட்டுமே அது முகம் காட்டுகிறது.

**1. பொறுத்திருக்க வேண்டும்:**

அதிர்ஷ்டம் என்றால் என்ன என்று நாம் புரிந்து கொண்டிருக்கிறோம்? நாம் தொட்டதெல்லாம் துலங்க வேண்டும், தோல்வி என்ற வார்த்தையே வாழ்வில் தொல்லை தரக் கூடாது. ஓடுதளத்தில் ஓடி வானத்தில் ஏறிய விமானம் சுமாராக பத்து நிமிடங்களுக்குள் தான் அடைய வேண்டிய உயரத்தை அடைந்துவிடுவது போல வாழ்வில் தான் விரும்பும் உச்சத்தை சில மாதங்களில் அடைந்துவிட வேண்டும் என விரும்புகிறோம். அதையே அதிர்ஷ்டம் எனப் போற்றுகிறோம்.

அதிர்ஷ்டம் யாருக்கும் வரலாம். அதற்கான வரத்தை இறைவன் நமக்குத் தரலாம். ஆனால் அதற்கான தகுதிகள் நம்மிடம் உள்ளனவா, என்று நாம் கவனிக்க வேண்டும். சிலர் ஒரே நாளில் வாழ்வின் உச்சத்தை அடைந்துவிட்டார்கள் என்று நாம் வியக்கிறோம். ஆனால் அவர்கள் அந்த நிலையை அடையப் பல வருடங்களாக நீங்கள் தூங்கிக் கொண்டிருந்த ஒவ்வொரு இரவிலும் அவர்கள் கொட்டக் கொட்டக் கண் விழித்திருந்து தங்களைத் தாங்களே தயார் செய்து கொண்டிருந்தார்கள் என்ற உண்மையை நீங்கள் அறிவீர்களா?

மனிதனின் எண்ணங்களின் உயர்வுக்கு ஏற்ப அவனது வாழ்வின் உச்சமும் அமைகிறது. ஒவ்வொரு மனிதனும் தன்னைப் பற்றிய சில அளவீட்டைப் பெற்றிருக்கிறான்.

அவனது ஆழ் மனத்தில் அவனைப் பற்றிய சில வரையறைகள் சில அகல உயர நீளங்களை அளவீடாக உருவாக்கி இருக்கின்றான். அதுவே அவன் தன்மதிப்பு. அதுவே அவன் தன்நிலை. அந்த அவனது சிகரத்தைத் தாண்டி அவன் அதற்கு மேலே செல்வதில்லை.

வெறும் செல்வவளம் மட்டுமல்ல, சமுதாயத்தில் மனிதனது அங்கீகாரம், பொலிவான தோற்றம், உடல்நலம் யாவும் அந்தத் தன்மதிப்பைப் பொறுத்து அமைகிறது. போர்க்களத்தில் போரிடும்போது மாவீரன் நெப்போலியனது நெஞ்சில் சில குண்டுகள் பாய்ந்து விட்டன. அவனது நெஞ்சைக் கீறி அதிலுள்ள குண்டுகளை மருத்துவர் அகற்றிக் கொண்டிருந்தார். அப்போது நெப்போலியன் கூறுகிறான். "டாக்டர் இன்னும் கொஞ்சம் ஆழமா

> **சிலர் ஒரே நாளில் வாழ்வின் உச்சத்தை அடைந்துவிட்டார்கள் என்று நாம் வியக்கிறோம்.அதிர்ஷ்டம் யாருக்கும் வரலாம் அதற்கான வரத்தை இறைவன் நமக்குத் தரலாம். ஆனால் அதற்கான தகுதிகள் நம்மிடம் உள்ளனவா, என்று நாம் கவனிக்க வேண்டும்.**

கப் போய் என் இதயத்தைத் திறந்து பாருங்கள். அங்கே நான் காணும் சாம்ராஜ்யத்தை நீங்களும் காணலாம்

றான்.

அவனது உள்ளத்தின் ஆழத்தில், அவனது ஆழ்மனதில், அவரது இலட்சியக் கனவுகள் பதிக்கப்பட்டுள்ளன. அதுவே அவனது சிகரம். அந்தக் கனவால் ஏற்பட்ட உக்கிரமான ஆசை அவனை ஆட்டிப் படைத்தது. ஜூலியஸ் சீசர் என்ற ஆங்கிலப் படத்தில் புகழ் பெற்ற ஹொலிவுட் நடிகையான எலிசபெத் டெய்லர் கிளியோபாட்ராவாக நடித்தார். அப்போது அவருக்குப் பல இலட்சம் மதிப்புள்ள அணிகலன்கள் அணிவிக்கப்பட்டன. அப்போது சிலர் படத்தின் இயக்குநரிடம் ஏன் இத்தனை நகைகள், படத்தில் அவைகளின் மதிப்பு பார்க்கும் ரசிகர்களுக்கு புரியவா போகிறது என்றார்களாம். அப்போது இயக்குநர் "பார்க்கும் ரசிகர்களுக்கு அதன் மதிப்புத் தெரியாவிட்டால் பரவாயில்லை. ஆனால் கிளியோபாட்ராவாக நடிக்கும் எலிசபெத் டெய்லருக்கு அதன் மதிப்பு தெரியுமல்லவா? அதன் மூலம் அந்தப் பாத்திரத்தின் மிகப் பெரிய மதிப்பு அவருக்கு புரியுமல்லவா? அப்படி கிளி

யோபாட்ராவின் அளவில்லாப் பெருமையை மனப்பூர்வமாக உணர்ந்துகொண்டால், அதற்கு ஏற்பத் தன் நடிப்பைக் கம்பீரமாக வெளிப்படுத்துவார் அல்லவா?'' என்றாராம்.

நமது உடலின் செல்களில் உள்ள டி. என். ஏயில் நமது உடல் அமைப்பைப் பற்றிய வரைபடம் உள்ளது. அதுபோல நமதுஉள்ளத்தின் ஆழத்தில் ஒரு வரைபடம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்தப் பதிவுகளில் மாற்றம் செய்யும்போது அதற்கு ஏற்ப அவரவர் வாழ்வில் அதிர்ஷ்டத்தின் கதவுகள் திறந்து கொள்கின்றன.

**2. வெற்றி மனப்பான்மை:**

''பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்'' என்பது பழமொழி. இதை நேர் மறையாக மாற்றினால் பணம் கொட்டும் இடத்தில் மேலும் மேலும் கொட்டும்; வெற்றி மேலும் மேலும் வெற்றியையும், தோல்வி மேலும் மேலும் தோல்வியையும் இழுத்துக் கொண்டு வரும்; நாம் பெறும் மிகச் சிறிய வெற்றிகூட நமக்கு வெற்றி மனப்பான்மையை உருவாக்குகிறது. அந்த வெற்றி மனப்பான்மை மேலும் பல வெற்றிகளை உருவாக்குகின்றன. அதுபோலவே தோல்வி, தோல்வி மனப்பான்மையை உருவாக்கி தோல்வியை இழுத்து வருகிறது. பல வெற்றி களைக் குவித்த வெற்றி வீரர்களின்

முகத்தில் அந்த வெற்றியின் ரேகைகள் படர்ந்திருக்கின்றன'' என்கிறார் எமர்சன்.

அந்த வெற்றி ரேகைகள், அந்த வெற்றி நோக்கு, மேலும் மேலும் வெற்றிகளை ஈர்க்கின்றன. ஆக, நாம் மிகுந்த முயற்சி எடுத்து வாழ்வில் சில வெற்றிகளை உருவாக்கிவிட்டால், அந்த வெற்றித் தேவதை மேலும் பல வெற்றிகளை நம்மிடம் கொண்டு வருவாள். எதிர்பாராமல் சில தோல்வி நேர்ந்துவிட்டால், சற்று ஓய்வு எடுத்து நன்றாக சிந்தனை செய்து சில சிறிய காரியங்களை கையில் எடுத்து சிரத்தையோடு செயலாற்றி சில வெற்றிகளை பற்றிக்கொண்டுவிட்டால் அப்போது மீண்டும் வெற்றி முகம் காட்டும். அந்த வெற்றிகள் மூலம் அதிர்ஷ்டத்தின் கதவு திறந்து கொள்கிறது.

**4. மகிழ்ச்சியான மனநிலை:**

''வாழ்வு வருங்கால் வராது கண் தூக்கம்'' என்பது பழமொழி. மழைக்கு முன் குளிர்ந்த காற்று வீசுவது போல, முன்னேற்றம் வருவதற்கு முன் ஓர் உற்சாகமான மனநிலை வந்துவிடும். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. இது செயல் விளைவுத் தத்துவம் என அழைக்கப்படுகிறது. வெற்றியின் விளைவு மகிழ்ச்சி. காற்று வீசினால் காற்றாடி சுற்றுகிறது. காற்றாடி சுற்றினாலும் காற்று வீசுகிறது.

அதுபோல வெற்றி மகிழ்ச்சியைத் தருகிறது என்பது உலக விதி. மகிழ்ச்சியான மனநிலை வெற்றியை ஈர்க்கிறது என்பது ஆன்மிக விதி.


ஒரு வெற்றிக்காக இறைவனை வேண்டும்போது அது கிடைத்தது போன்று பாவனை செய்யுங்கள். அந்த வெற்றி கிடைத்த உடன் எத்தனை மகிழ்ச்சியோடு இருப்பீர்களோ அத்தனை மகிழ்ச்சியோடு இப்போதே இருங்கள். அந்த மனநிலை வெற்றியை இழுத்துக் கொண்டு வரும் என்பது ஆன்மிக் ஞானிகளின் அறிவுரையாகும். மகிழ்ச்சியான மனநிலை வரும்போது அதிர்ஷ்டத்தின் கதவு திறந்து கொள்கிறது.

**5. செயல் இன்றி பலன் இல்லை:**

செல்வம் வேண்டும், வாழ்வு செழிக்க வேண்டும், வான் புகழ் பெற வேண்டும், அது வேண்டும் இது வேண் டும்.என்று வாயால் பேசிக் கொண்டிருந்தால் போதுமா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பக்கவாத நோய்க்கு புதிய மருந்து



பக்கவாத நோய் உள்ளவர்களின் மூளையில் ஏற்படும் பாதிப்பைக் குறைக்க புதிய மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மூளையில் ஏற்படும் பாதிப்புகள், பக்கவாதம், நினைவாற்றல் குறைவு உள்ளிட்ட நோய்களுக்கு மீன் எண்ணெயில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய மருந்து, குறித்த நோய்களைத் தீர்க்க உதவும் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்தப் புதிய மருந்தை அமெரிக்காவின், கொலம்பியா பல்கலைக்கழகம் மற்றும் லூசியானா பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சாலமன் மற்றும் கானாங்கெளுத்தி வகை மீன்களில் அதிக அளவில் காணப்படும் ''ஒமேகா-3'' எண்ணெயைக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த மருந்தை ஊசி மூலம் மூளை தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களின் உடலில் செலுத்தினால் அவர்களின் உடல் மற்றும் மன நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

தற்பொழுது பக்கவாத நோயாளிகளுக்கு ஒரே ஒரு மருந்து தான் தரப்படுகிறது. பக்கவாத பாதிப்பு ஏற்பட்ட மூன்று அல்லது நான்கு மணி நேரத்துக்குள் அந்த மருந்தை உட்கொண்டால் மட்டுமே, நோயின் பாதிப்புக் குறையும். அந்த மருந்து மூளைக்கு ரத்தம் பாயாமல் தடுக்கும் மூளை கட்டிகளை கரைக்கும் தன்மை கொண்டது.


எனினும் இரத்தம் இழப்பதால் மூளை செல்கள் இறந்து போவதை இந்த மருந்தால் தடுக்க முடியாது. ஆனால், மீன் எண்ணெயில் தயாரிக்கப்பட்டுள்ள புதிய மருந்து, மூளை செல்கள் இறந்து போவதைத் தடுக்கும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

பாதிப்பு ஏற்பட்டு பல நாள்கள் கழித்து இந்த மருந்து கொடுக்கப்பட்டாலும் நோயாளிகளின் உடல் மற்றும் மனநிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். முதற்கட்டமாக எலிகளின் உடலில் இந்த மருந்து செலுத்தப்பட்டு வெற்றிகரமாக சோதிக்கப்பட்டுள்ளது. விரைவில் மனிதர்களின் உடலில் செலுத்தி இந்த மருந்து பரிசோதிக்கப்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டனர்.

# ஆற்றின் நடுவே வீடு

சேர்பிய நாட்டின் டிரினா ஆற்றுக்கு நடுவே அமைக்கப்பட்டிருக்கும் வீடொன்று பலரையும் கவர்ந்து வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற புகைப்படப் போட்டியில் உலகெங்குமிருந்து வந்த புகைப்படங்களில் இதுவும் ஒன்றாகும். அதன் பின்னரே அதிகம் பேசப்படும் ஒரு இடமாக இந்தப் பிரதேசம் மாறியுள்ளது. சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக இந்த வீடு ஆற்றுக்கு நடுவே காணப்படுகிறது.



# நினைத்தாலே இனிக்கும்...!



நெஞ்சங்களில் உறுதிப்
பிணைப்பில்
மலர்ந்த.....
'' எங்கள் நட்பு''
கண்கள் திறந்தால்
கலைந்துவிடும் கனவுகளாய்
அல்ல...
வந்தவுடன் வேகமாய்,
கடந்து விடும் மேகமாய்
அல்ல.....
தென்றலின் மொழி
அறிந்த பூக்களாய்...
அலையின் ஜதி அறிந்த
கரைகளாய்......
இதயத்தின் சந்தமாய்
இணைந்த.....
'' எங்கள் நட்பு''
எண்ணங்கள் ஒன்றிணைந்து
பிரதிபலிக்க...
வண்ணங்கள் பல கலந்து
அழகு சேர்க்க.....
காலம் கடந்தாலும்.
வானமாய் நிலைத்து நிற்கும்....
'' எங்கள் நட்பு''
காற்றலைகள் கலந்துறவாடி
காததூரம் சென்றாலும்...
நினைவலைகள் அழைப்பு,
விடுக்க...
நினைக்க நினைக்க
இனிக்கும்...
'' எங்கள் நட்பு''

திவ்யா.தர்மா
நல்லூர்



# மரபணுக்களைப் பாதிக்கும் முறையற்ற தூக்கம்

முறையான தூக்கமின்மையானது, மனித உடலின் செயற்பாட்டைக் கடுமையாகப் பாதிக்கவல்லது என்று ஐக்கிய ராஜ்ஜியத்தின் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.


தொடர்ந்து ஒரு வார காலத்துக்கு ஒரு நாளைக்கு ஆறுமணி நேரத்துக்கும் குறைவாக தூங்கும்படி செய்யப்பட்டபோது சம்பந்தப்பட்டவர்களின் நூற்றுக் கணக்கான மரபணுக்களில் கடுமையான மாற்றங்கள் ஏற்பட்டதாக ஆய்வில் ஈடுபட்ட விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த ஆய்வுக்காக 26 பேரை, ஒரு வார காலம், ஒரு நாளைக்கு பத்து மணி நேரம் தூங்க வைத்து அவர்களின் இரத்தத்தை எடுத்து பரிசோதனை செய்தனர். அடுத்து அவர்களை ஒரு வாரகாலத்துக்கு ஆறுமணிக்கும் குறைவாக தூங்கவைத்து அதன்பின்பு அவர்களின் இரத்த மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்தனர்.

அதில் எழுநூற்றுக்கும் அதிகமான மரபணுக்கள் மாற்றமடைந்திருப்பதை அவர்கள் கண்டறிந்தனர். குறிப்பாக மனிதர்களின் அன்றாட செயற்பாட்டுக்கு பெரிதும் தேவைப்படும் மரபணுக்களில் இந்த மாற்றங்கள் கூடுதலாக இருப்பதை இந்த ஆய்வின் முடிவுகள் காட்டுவதாக விஞ்ஞானிகள் சுட்டிக் காட்டினர்.

எனவே போதுமான தூக்கமின்மையானது, மனிதர்களின் ஆரோக்கியத்தை கடுமையாகப் பாதிக்கிறது என்பதை ஆய்வின் முடிவுகள் காட்டுவதாக விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

குறிப்பாக தூக்கமின்மை காரணமாக இதயநோய்கள், சர்க்கரை நோய், கூடுதல் உடல் பருமன், குறைவான மூளைச் செயற்பாடு ஆகியவை உருவாகலாம். எனவே ஆரோக் கியமான வாழ்வை விரும்புபவர்கள் அவசியம் ஒரு நாளைக்கு எட்டுமணி நேரம் தூங்கவேண்டும் என்பது ஆய்வாளர்களின் அறிவுரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்த வாய்ப்பைத் தவற விடுவது நட்டத்திலும் நட்டம்!

படம் பார்த்தால் பிள்ளைகளுக்குத் தானாகப் படிப்பு வரும் என்று தான் எல்லோரும் நம்புகிறார்கள். அதன்படியே பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறார்கள். அதனால் தான் படம் பார் பாடம் படி, என்று சொல்லும் பழக்கம் எமது சமூகத்தில் வேரூன்றி இருக்கிறது. இதன் மூலமே பிள்ளைகளுக்கு இலகுவாகப் பாடத்தை கற்பிக்கின்றனர். பிள்ளைகளுக்கு இலகுவாக பாடத்தைப் படிப்பிப்பதற்காக ஆசிரியர்கள் இந்த இலகுவான முறையைக் கையாளுகிறார்கள்.

ஆரம்பப் பிரிவுப் பிள்ளைகள் இலகுவான முறையில் எழுத்துக்களையோ, பொருள்களையோ அறிந்து கொள்வதற்காக பிள்ளைகளின் பெற்றோர்களும் தமது வீட்டுச்சுவரில் படங்களை ஒட்டுகிறார்கள். இதன் மூலம் பிள்ளைகள் இலகுவான முறையில் தெரியாததைத் தெரிந்து கொள்கிறார்கள். இன்றைய உலகில் இப்படியாக இலகுவான முறையை மேற்கொள்வதற்காக எல்லாத்துறைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஆனால் எமது பிரதேசத்தில் சிலர் எந்தவிதமான இலகுவான முயற்சியும் இன்றிக் கடுமையான நடவடிக்கைகளில் இன்றும் ஈடுபடுகிறார்கள். ஒரு நடவடிக்கையில் ஈடுபடும் போது இலகுவான முறை பற்றி சிறிதளவு கூடச் சிந்திக்காமல் செயற்படுவதுதான் வேதனை தரும் விடயமாகவும் மாறி விடுகிறது. இதனால் எமது மக்கள் பெரும் இடர்களுக்கு ஆளாகின்றார்கள். எதனையும் மேற்கொள்ள முடியாமல் மக்கள் தவிக்கின்றனர்.

எந்த நடவடிக்கையையும் இலகுவான முறையில் மக்கள் மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது மூளையைப் பயன்படுத்தி அதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.

இல்லாது போயின் பல வாய்ப்புகள் எமக்குக் கிடைக்காமல் போய்விடும்.

வாய்ப்புக்கள் கைதவறும்போது, தனி மனிதன் மட்டும் பாதிக்கப்படுவது கிடையாது. அந்தச் சமூகமே பாதிப்பினை எதிர்கொள்ளும். வாய்ப்புகள் இல்லாமல் போவதற்கு சில மேலதிகாரிகளும் காரணமாக அமைகின்றனர். வாய்ப்புக்கள் ஏன் தவறவிடப்படுகின்றன என்று கூடப் பார்க்காமல் இருப்பதால் பெரும் விளைவுகளை இந்தச் சமூகம் எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே இதனைக் கருத்தில் கொண்டு வரும் வாய்ப்பை தவற விடாமல் பார்க்க வேண்டும்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி இருக்கும். யாழ். கொட்டடி மீன் சந்தைக்கு மீன் வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். அங்கே எனது நண்பன் ஒருவன் மீன் விற்றுக்கொண்டிருந்த ஒரு வியாபாரியுடன் மீனின் விலையைக் குறைக்குமாறு கேட்டுச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். மீன் வியாபாரியும் மீனின் விலையைக் குறைக்க முடியாது என்று சொல்லி விடாப்பிடியாக இருந்தார்.

அவன் பக்கம் சென்று "என்ன சத்தம்" என்று அவன் முதுகைத் தட்டிக் கேட்டேன். அவனோ "இந்த மீனுக்கு இவ்வளவு விலை சொல்கிறான்." என்றான். நானோ "கூட விலையா சொல்கிறார். தனக்கு சிறிய இலாபம் வைத்துத் தான் சொல்லுவார்." என்று சொல்லிவிட்டு "எனக்கும் ஒரு பங்கு மீனைப் போடு" என்று அந்த மீன் வியாபாரியிடம் கேட்டேன். அவரும் எனக்கொரு பங்கைத் தந்தான். உடனே நான் "சரி இரண்டு பங்குக்கும் சேர்த்து ஒரு விலையைச் சொல்லு" என்றேன். மீன் வியாபாரி விலையைச் சொல்ல காசினைக் கொடுத்து விட்டு மீன் சந்தையை விட்டு வெளியே வந்தோம்.

எனது நண்பனோ "மீனின் பங்கைச் சேர்த்துப் பார்த்தால் விலை குறைவாக இருக்கிறது" என்றான். நானோ "அப்படித்தான்... அதை விடு" நீ ஒரு ஆசிரியராக இருந்து கொண்டு இப்படி மீன் வியாபாரியுடன் சண்டை போட்டுக் கொண்டு இருக்கலாமா?" என்று கேட்டேன். அவனோ "நான் ஒரு ஆசிரியர் தான். ஆனால் எங்க பேயும் கதைக்க முடியாமல் இருக்கிறது" என்றான். "ஏன்? என்ன பிரச்சினை" என்று அவனைக் கேட்டேன். அவன் சொல்லத் தொடங்கினான்.

ஊடகத்துறை வளர்ச்சியை நோக்காகக் கொண்டு இந்திய அரசினால் வழங்கப்பட்ட புலமைப் பரிசில் வாய்ப்பு வடமாகாண மேல்மட்ட பெண் அதிகாரியின் அக்கறை அற்ற செயல்பாட்டினால் கைநழுவிப் போனது. வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகளில் ஊடகப் பாடத்தை கற்பிக்கின்ற ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டது.

வடமாகாண கல்வி அமைச்சினால் நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டது. இறுதியில் நான் தெரிவு செய்யப்பட்டேன். இந்தியாவில் ஊடகப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்கு விண்ணப்பதாரிகளான ஆசிரியர்களைத் தெரிவு செய்து கடந்த வருடம் செப்ரெம்பர் இறுதிப் பகுதிக்குள் அனுப்பி வைக்குமாறு கல்வி அமைச்சுக்கு இந்திய தூதுவராலயம் ஒன்றால் அனுப்பி வைக்கப்பட்டிருந்த சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால் சம்பந்தப்பட்ட மேல் மட்ட அதிகாரியால் நவம்பர் நடுப்பகுதியில் குறிப்பாக 40 நாள்களுக்குப் பின்னர் மேற்படி பயிற்சி நெறிக்கான இறுதித் தெரிவுப் பட்டியல் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

காலதாமதமாக அனுப்பப்பட்ட கடிதத்தில் காணப்பட்ட தவறின் காரணமாகவும் உரிய பிரிவுக்கு போய்ச் சேர முடியாத சூழ்நிலை காணப்பட்டது. உடனே நான் கல்வி அமைச்சுக்குச் சென்று உரிய ஆவணத்தைத் தேடிப் பெற்று வெளிநாட்டுப் பிரிவில் ஒப்படைத்து அந்தப் பிரிவின்

## கோப்பாய் சண்முகம்

## கதையோடு செய்தி

பணிப்பாளரின் அனுமதியைப் பெற்று நேரடியாக நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சிடம் கையளித்தேன்.

சம்பந்தப்பட்ட மேல்மட்ட அதிகாரியால் அனுப்பப்பட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பப் படிவத்தின் இறுதிப் பகுதியில் கையெழுத்து எதுவும் இன்றி அனுப்பப்பட்டதால் கடிதம் நிராகரிக்கப்பட்டது. புலமைப்பரிசில் விண்ணப்பம் உரிய வகையில் உரிய காலப்பகுதியில் இந்திய தூதுவராலயத்துக்கு ஒப்படைக்கப்படாமையால் காலதாமதமாகி விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின. இதன் காரணமாக வடமாகாணத்துக்கு கிடைக்கப்பெற இருந்த புலமைப் பரிசில் வாய்ப்பு இறுதியில் கைநழுவிப் போனது என்றான் நண்பன். நானோ "இதை யாரிடம் சென்று முறையிட முடியும். எமது பிரதேசத்தைப் பற்றி, அபிவிருத்தியைப் பற்றி சிந்திப்பவர்கள் இருந்தால் அவர்களிடம் சென்று முறையிட முடியும்" என்றேன். "மீன் நாறப் போகுது மனிசியிடம் பேச்சு வாங்க வேண்டி வரும்" என்று வாத்தியார் சொல்ல இருவரும் அங்கிருந்து விலகி எம்பாட்டில் சென்றோம்.

# மற்றவர்களைச் செய்ய விடுங்கோ

யாழ்ப்பாணத்தின் மிகப் பெரிய தலையிடியாக மீள்குடியமர்வு இருக்கின்றது. இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள் இன்னமும் தங்களின் சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் அரச அதிகாரிகளும், ஆளுந்தரப்பு அரசியல்வாதிகளும் இதனைப் பற்றி அக்கறை கொள்ளாமல் கூட்டம் போடுவதிலேயே குறியாக இருக்கின்றனர். கூட்டங்கள் நடந்தாலும் கூட்டத்தில் பங்குபற்றுகின்ற சில புல்லருவிகளால் ஒழுங்கான முடிவுகள் எட்டப்பட வாய்ப்பில்லாமல் போகிறது.

அண்மையில் மக்கள் மீள்குடியமர்வு தொடர்பில் தியேட்டர்காரர் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. கூட்டத்தில் மாவட்டத்தின் உயர் அதிகாரியும் கலந்து கொண்டிருந்தார். அவர் கூட்டத்தில் மீள்குடியமர்வு தொடர்பான விவரம் இல்லையென்று நான் சொல்லவில்லை. அதைப் பத்திரிகைகள் திரித்துப் போட்டு விட்டன என்று, இலங்கை அரசைப் போல் 'நா'க் கூசாமல் பொய் சொல்ல பக்கத்திலிருந்த தியேட்டர்காரரும் அதை வழி மொழிந்தார்.

ஏன்... எதற்கு... எப்படி?

உயர் அதிகாரி அங்கை மீள்குடியமர்வு செய்தனான், இங்கை மீள்குடியமர்வு செய்தனான் என்று சொல்லி தன்னைப்பற்றி தம்பட்டம் அடிச்சது மட்டுமில்லாமல், இங்கை இருக்கிற பிரதேச செயலர்மார் எனக்குப் படிப்பிக்கத் தேவையில்லை என்று சொல்லாமல் சொல்லி முடித்தார்.

அந்தக் கூட்டத்தில் சம்பந்தமில்லாமல் கலந்துகொண்ட மாவட்ட செயலக அதிகாரி ஒருவர் தேவையில்லாமல் மூக்கை நுழைத்துக் கொண்டார். குரக்கன் சால்வைக்காரரின் தம்பியாரின் அமைச்சின் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் இந்த மாவட்டச் செயலக அதிகாரி, தன்னுடைய அதி உயர் அரச விசுவாசத்தைக் காட்ட முற்பட்டு, முறையாக வாங்கிக் கட்டிக் கொண்டார்.

ஒன்றில் தாங்கள் செய்ய வேண்டும், இல்லாவிட்டால் மற்றவர்களைச் செய்ய விட வேண்டும். எல்லாவற்றையும் கெடுக்கும் இவர்களைப் போன்ற தமிழ் அதிகாரிகளால்தான் யாழ். மாவட்டத்தின் பிரச்சினைகள் இன்னமும் தீர்வை எட்டாமல் இழுபடுகின்றன பாருங்கோ...

நக்கல் நரசிம்மன்

# உண்மையான நல்ல வாழ்க்கை




ஜென் துறவி தன் சீடர்களிடம் பேசிக் கொண்டிருக்கையில், அவர்களிடம் "ஒருவருடைய நல்ல வாழ்க்கையின் ஆயுள்காலம் என்ன?" என்று கேட்டார். அதற்கு சீடர்களுள் ஒருவன் "நூறு வயது தான்" என்று கூறினான். குருவோ, "இல்லை" என்றார்.

"அப்படியெனில், 90 வயது" என்று மற்றவன் கூறினான். அதற்கும் "இல்லை" என்று குரு கூறினார். அப்படியே சீடர்கள், 80 வயது 70 வயது என்று சொல்ல, அதற்கும் மறுத்தார். பின் அவர்கள் பொறுமையிழந்து "வேறு என்னவென்று நீங்களே சொல்லுங்கள்" என்று கூறினர்.

அதற்கு குரு "ஒரு வினாடி தான்" என்று கூறினார். "அது எப்படி ஒரு வினாடியில் நல்ல வாழ்க்கையை வாழ்ந்ததாக சொல்ல முடியும்?" என்று அனைவரும் கேட்டனர். பின் குரு "நல்ல வாழ்க்கை என்பது ஒரு வினாடியில் தான் தெரியும். எப்படியெனில், ஒவ்வொரு வினாடியையும், வாழ்க்கையின் தொடக்கமாக நினைக்க வேண்டும். மேலும், அதையே முடிவு என்றும் நினைக்க வேண்டும். அதிலும் அந்த வினாடியில் எந்த ஒரு பழையதையோ அல்லது வருங்காலத்தையோ நினைத்து வாழக்கூடாது. ஒரு வினாடி பிறக்கிறதென்றால், அதை முழுமையாக அனுபவிக்க வேண்டும். அது தான் உண்மையான நல்ல வாழ்க்கை" என்று சீடர்களுக்கு சொல்லி, உண்மையான வாழ்க்கையின் தத்துவத்தைப் புரிய வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூமி உருண்டை என்பதை ஜீரணிக்க முடியாத ஆதிவாசிகள்

■ அருணா தருமலிங்கம்

விஞ்ஞானம், தொழில்நுட்பம், இலத்திரனியல் போன்றவை இவ்வுலகெங்கும் கொடிகட்டிப் பறக்கின்ற இன்றைய காலகட்டத்திலும் கூட, சிலர் கல்வியறிவு குன்றிய நிலையிலேயே உள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை. அவர்கள் நாம் வசிக்கின்ற பூமியானது சமதளமான தட்டையானது என்றுதான் இப்போதும் எண்ணுகின்றனர்.

இந்தத் தட்டின் மேற்பகுதியில் ஒரு விசாலமான கூரை போன்று வானம் தென்படுகின்றது. இது பகலில் நீல நிறமாகவும், இரவில் கறுப்பாகவும் காட்சியளிக்கின்றது. மேலும் இரவு வேளையில் தொலைதூரத்தில் நிலை கொண்டுள்ள நட்சத்திரங்கள் நாற்பது, அறுபது, நூறு, ஐநூறு, ஆயிரம் வாட்ஸ் சக்தியுள்ள மின்குமிழ்களைப் போன்று ஒளிருகின்றன. ஆனால் புவியைச் சூழவுள்ள வளிமண்டலம் விண்மீனிலிருந்து வெளியேறும் ஒளிக்கதிர்களை அவ்வப்போது சிதறடித்துக் கொண்டேயுள்ளது வெள்ளிடைமலை.

எம்மைப் பொறுத்தவரை எல்லாக் கிரகங்களுக்குள்ளும் மிகவும் பிரதானமான கோள் பூமியேயாகும். புவியின் அசைவுகளையும் அதன் தன்மையையும் நன்கு அறிந்து கொண்டால் ஏனைய கிரகங்களைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது மிகவும் இலகுவான ஒன்றாகும்.

துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் ஒரு கப்பலை நாம் உற்று நோக்கினால் அது முற்றாக எமது பார்வையிலிருந்து மறைந்து விடுமுன் ஆரம்பத்தில் அதன் கீழ்ப்பகுதியும் பின்னர் சிறிது சிறிதாக அதன் மேற்பகுதிகளும் மறைவதைக் கொண்டு பூமி உருண்டை வடிவமானது என்பதை நிரூபிக்கலாம்.

மேலும் சந்திர கிரகணத்தின் போது, பூமியின் நிழல் சந்திரனில் விழுவதால் நிலா மறைக்கப்படுகிறதென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இப்படி சந்திரனில் விழும் புவியின் நிழல் வட்ட வடிவமானதாகையினால் பூமி உருண்டை என்பதை உறுதிப்படுத்துவதற்கு இது இன்னுமொரு சான்றாகவும் கொள்ளலாம்.

எனவே பூமியின் தோற்றம், சுற்றளவு, பருமன், திணிவு, புவியின் உபகிரகம், அது பூமியை நீள் வட்டப் பாதையில் சுற்ற எடுக்கும் காலப்பகுதி, புவியைச் சுற்றியுள்ள வளிமண்டலம், பூமியின் உபகிரகத்தின் வெப்பநிலை, அது உருவாகிய விதம், சைபீரியாக் காட்டில் எதேச்சையாக விழுந்த விண்கல் ஏற்படுத்திய தாக்கம், பூமியில் உண்டாகின்ற கடல்கோள் பூகம்பம் என்பவை பற்றி விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.



சாதாரணமாக பூமி உருண்டை வடிவமெனக் கொள்ளலாமெனினும் அது சரியான ஒரு கோளமல்ல என்பது விஞ்ஞானிகளின் கூற்றாகும். ஒரு தோடம்பழம் போல துருவங்களிலே சிறிது தட்டையாகவும் பூமத்திய ரேகை பகுதியில் சிறிது பெருத்தும் பரிணமித்துள்ளது. துருவங்களை இணைக்கும் கோட்டின் அடிப்படையிலேயே பூமி தன்னைத்தானே சுற்றி இப்படியான உருவத்தைப் பெற்றிருக்கின்றது. பூமியைப் பற்றி விஞ்ஞானிகள் வெளியிட்ட தரவுகளின் படி இரு துருவங்களையும் இணைக்கும் கோடு பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று நாற்பது கிலோமீற்றர் நீளமுடையதாகவும் உள்ளதாம். இருபத்து மூன்று மணித்தியாலம் ஐம்பத்தாறு நிமிடத்துக்கு ஒருமுறை பூமி தன்னைத் தானே சுற்றுவதுடன் முந்நூற்று அறுபத்தைந்தே கால் நாள்களில் சூரியனையும் ஒரு முறை சுற்றிவருகின்றது.

பூமி சூரியனைச் சுற்றிவரும் பாதை சரியான வட்டமல்ல. ஒரு நீள்வட்ட வடிவானது. எல்லாக் கிரகங்களின் பாதைகளும் நீள்வட்ட வடிவிலானது. நியூட்டனின் ஈர்ப்பு சக்தி விதியைக் கொண்டு பூமியின் திணிவையும் விஞ்ஞானிகள் கணிப்பீடு செய்துள்ளனர்.

பூமி உட்பாகத்தில் ஒரு கிலோமீற்றர் தூரத்துக்குக் கீழ் எப்படி இருக்கும்? என்பது பற்றி நேரடியாக இதுவரை எவரும் அறியவில்லை. பூகம்பம், பூமி அதிர்ச்சி, எரிமலைகள் என்பன பற்றிய ஆராய்ச்சிகளிலிருந்தே அநேகமாக பூமிக்கடியில் இருக்கும் பொருள்களை ஊகித்து அறிகின்றனர்.

பூமியின் நடுப்பகுதி மிக வெப்பமாக இருக்குமென்றும் நிலமட்டத்திலிருந்து இரண்டாயிரம் கிலோமீற்றர் ஆழத்தில் இரும்பு உருகிய நிலையில் பரிணமித்துள்ளதென்றும் விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

பூமி உருவான காலத்தில் அதுவும் சூரியனைப் போலவே ஒரு நெருப்புக் கோளாக இருந்திருக்க வேண்டுமென்றும், காலப்போக்கில் சிறிதுசிறிதாக வெப்பம் குறைந்து கொண்டிருக்கின்றது. அதன் மேற்பரப்பு நன்றாகக் குளிர்ந்து உயிரினங்கள் வசிக்கும் நிலைக்கு வந்துவிட்ட போதிலும் அதன் உட்பகுதி இன்னமும் வெப்பமாகவே இருக்கிறதென்றும் அதுவும் படிப்படியாக தணிகிறதென்றும் கண்டறியப்பட்டுள்ளது.

பூமி தன்னைத்தானே ஒரு முறை சுற்றி வரும் நேரத்தை ஒருநாளென்றும், சூரியனை ஒரு முறை சுற்றிவரும் காலத்தை ஒரு வருடம் என்றும் கொள்ளப்படுகின்றமையை நாம் அறிவோம்.

மேலும் பூமி தன்னைத்தானே சுற்றுவதால் இரவு பகல் உண்டாவதும் இயற்கையின் நியதி ஆகும். பூமி சுழலுகின்ற கற்பனை அச்சானது பூமி சூரியனைச் சுற்றுகின்ற பாதையில் தளத்துக்கு செங்குத்தாக இருந்தால் பருவகாலங்கள் இருக்க மாட்டாது. அவ்வச்சு அத்தளத்துடன் அறுபத்தாறரைப் பாகை சரிந்திருப்பதால் தான் பருவகாலங்கள் உண்டாகின்றன.

பூமியின் வயதை அறிவதற்குப் பல வழிகளைக் கையாண்டிருக்கின்றனர். ஆனால் அவற்றைக் கொண்டு பூமி இத்தனை வருடங்களுக்கு முன்தான் தோன்றியது என்று திட்டவட்டமாகக் கூறிவிட முடியாது என்றும், ஏறக்குறைய முந்நூறு கோடி வருடங்களுக்கு முன் தோன்றியிருக்க வேண்டுமென்று புவி புள்ளியியல் வல்லுனர்கள் கணித்துள்ளனர். இதற்குப் படிப்படியாக அமைந்துள்ளதற்றையை ஆதாரம்காட்டுகின்றனர்.

முன்னர் பூமியின் மேற்பரப்பில் ஒரு திசையை நோக்கி நடந்து சென்றால் ஆகாயம் புவியைத் தொடும் இடத்தைச் சென்றடையலாம் என்று நம்பினார்கள். ஆனால் அவர்கள் எவ்வளவுதான் நடந்து சென்றாலும் பூமியின்முடிவை ஒரு போதும் கண்டுபிடிக்க முடியவில்லை.

உலகில் அவ்வப்போது துரதிர்ஷ்டவசமான சுனாமி, பூகம்பம் என்பன தோன்றி சமுத்திரம் கரையோர வாழ் மக்களின் வாழ்வாதாரத்தையும் வீடுகளையும் உடைமைகளையும் அழிவுக்குள்ளாக்குகின்றன. இவற்றை வரலாறு காணாத நிகழ்வென்றும் கொள்ளலாம்.

இதனால் ஏற்பட்ட சேதங்களைக் கண்ணுற்ற ஆதிவாசிகள் அல்லோல கல்லோலப்பட்டதுடன், பூமியானது பெரிய திமிங்கிலத்தின் மீது பரிணமித்துள்ளதினால் இவ்வாறு நடைபெறுகின்றன என்று வாதிட்டனர். இவ்வாறான விளக்கங்கள் எமக்கு வேடிக்கையாக இருப்பினும் அந்தக் காலகட்டத்து மக்கள் இதனை முழுமையாக நம்பினார்கள்.

பூமி, சூரியன், சந்திரன் மற்றும் கோடான கோடி நட்சத்திரங்களும் நித்தமும் ஒரே மாதிரித்தான் நகருகின்றன. வலமிருந்து இடமாக ஒரு போதும் செல்வதில்லை. இதன் அடிப்படையிலேதான் லண்டனில் உள்ள பிக்பென் மணிக்கூட்டு முட்களும் நகர்ந்த வண்ணம் உள்ளன எனலாம்.

சூரியனும், சந்திரனும், விண்மீன்களும் வானத்தில் ஒழுங்கு முறையாகவும் மெதுவாகவும் அசைந்து கொண்டிருக்கின்றன. நாம் வாழுகின்ற பூமியில் எந்தவகையான இடர் நிகழ்ந்தாலும் அவை எதனையும் கவனிக்காததைப் போன்று அவற்றின் நகரும் பணியைச் செவ்வனே தொடருகின்றன.

பலநூற்றாண்டு காலங்களுக்கு முன்னர் திசைகாட்டியோ, தேசப்படங்களோ, கலங்கரை விளக்குகளோ இருக்கவில்லை என்பது நிதர்சனமாகும். ஓடங்கள் மூலம் அல்லது பாய்மரக் கப்பலின் உறுதுணையோடு தொலை தூரப் பயணம் மேற்கொள்வோர் சூரிய, சந்திரன், விடிவெள்ளி, துருவநட்சத்திரம் என்பவற்றை நம்பியே அச்சமின்றி பூலோகமெங்கும் காணப்படுகின்ற பாலைவனம், சமுத்திரம் என்பவற்றில் உலாவினார்கள்.

பூமி உருண்டை என்பதால் சமுத்திரங்கள் எப்படி வழிந்தோடாமல் பற்றிப் பிடித்துள்ளன? என்ற கேள்விக்கு விடை காணமுடியாத ஆதிவாசிகள் பூமி உருண்டை என்பதை ஜீரணிக்க முடியாமல் திரிசங்கு நிலையிலே வாழ்ந்து வந்தனர்.


அதேவேளை இந்த நூற்றாண்டு மக்கள் பூமியை மட்டுமல்ல வேற்றுக் கிரகங்களின் அமைப்பு, சீதோஷ்ண நிலை போன்ற தரவுகள் அனைத்தையும் தெரிந்து வைத்துள்ளனர். இதற்கு நவீன விஞ்ஞான தொழில்நுட்பம் பக்கபலமாக உள்ளமை கண்கூடு.

மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தேசிய விண்வெளி ஆய்வு நிகழ்ச்சித் திட்டத்துக்கு பொறுப்பாகவுள்ள நிறுவனமாகிய நாசா அவ்வப்போது பூமியிலிருந்து விண்வெளிக்கு செயற்கைக் கோள்களை ஏவுகின்றது. இதனால் வேற்றுக் கிரகங்கள் அனைத்தினதும் தரவுகளை மிகவும் துல்லியமாக அறிந்து கொள்ள வாய்ப்புக்கள் உண்டாகின்றன. எதற்கும் நாம் வாழுகின்ற பூமியின் உருண்டை வடிவத்தை ஜீரணிக்க முடியாத நபர்களும் இன்று கூட எம்மிடையே உலாவுகின்றனர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானியங்கு கதவுகள்

இணையவன்



## இயங்குவது எப்படி?

கதவுக்கு அருகில் மனிதர் இருப்பதை உணரும் உணரிகளால் [sensors] தூண்டப்பெற்று தானியங்கு கதவுகள் திறந்து கொள்கின்றன. அடிப்படையில் இரு வகை உணரிகள் உண்டு: அவற்றில் ஒன்று அழுத்தத்தை [எடையை] உணர்ந்து கொள்வன. அவற்றில் ஒன்று காணக்கூடிய அல்லது அகச்சிவப்பு ஒளிக்கற்றைக்கான [visible or infrared beam of light] தடையை/இடையூறை [interruption] உணர்ந்து கொள்வன.

ஒளிக்கற்றை உணரி வகையில் ஒளிக்கற்றையை உருவாக்கும் பொறியும், கண்டறியும் கருவியும் நடக்கும் வழியில் எதிரெதிராக அமைக்கப்பட்டிருக்கும்;

கதவை நோக்கி நடக்கும் மனிதரால் ஒளிக்கற்றையானது இடையூறுக்கு/தடைக்கு உட்படும் போது, கதவைத் திறக்கும் தொழில் நுட்பம் செயற்பட்டு, கதவு தானே திறந்து கொள்ளும்.

அழுத்த வகையைச் [pressure type] சார்ந்த உணரியாக இருந்தால், அது கதவுக்கு முன்பு இயங்கும் நடைமேடையின் [platform] அடியில் வைக்கப்பட்டிருக்கும். மனிதர் அதன் மீது காலடி வைக்கும்போது அவரது எடையால் அழுத்த உணரியும் கதவைத் திறக்கும் தொழிநுட்பமும் செயற்பட்டு கதவு தானே திறந்து கொள்ளும்.

# கலைகள்

இராமஜெயபாலன்



**ஒரே** தன்மையுடைய பொருள் மூலத் தன்மையில் மாற்றமடையாது வடிவத்தில் மட்டும் மாறுதல்களை அடைகிறது. இதனால் மீளுருவாக்கம் சாத்தியமாகிறது. ஆனால் இயற்கை படைப்புக்கள் அனைத்தையுமே பரிணாமத்தினூடாகவே செய்திருக்கிறது. மேலும் ஒரு பொருள் இன்னொன்றாகி, பின் அதிலிருந்து வெவ்வேறு தன்மையுடைய மூலப்பொருள்களாக மாறி புதுப்புதுப் பொருள்களையும், வடிவங்களையும் கொண்ட இயற்கையும் உயிரினங்களும் உருவாகியிருக்கின்றன. அதாவது அணுவிலிருந்து அனைத்துச் சடப்பொருள்களும், கலத்திலிருந்து அனைத்து உயிரினமும் தோன்றிப் பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கின்றன. மேலும் இவற்றின் உருவங்களிலும், வடிவங்களிலும் மட்டுமே மாற்றங்கள் ஏற்படாது.

ஒன்றிலிருந்து பல்வேறு மூலப்பொருள்களே புதுப்புது வடிவில் உருவாகியிருக்கிறது. உதாரணமாக ஒரு சிறு கருவிலிருந்து உருவாகும் உயிரினத்துக்கு கண், காது, மூக்கு, வாய், குளி எனப் புலன்கள் மற்றும் எலும்பு, பல், தலைமயிர், நகம், வேறு வடிவான பொருள்களும் பரிணாம மாற்றத்தினூடாக உருவாகிறது.

ஆனால் இவை மீளுருவாக்கம் அடைவதில்லை. பிரிகை அடைந்தும் மீண்டும் பஞ்ச பூதங்களாக மாற்றம் அடைகின்றன. இதை உணர்த்தும் நகைச்சுவையொன்றை அதாவது வெளிநாட்டவர் ஒருவர் எமது நாட்டைச் சேர்ந்த ஒருவருக்குச் சொன்னார். தமது நாட்டில் இயந்திரம் ஒன்று இருக்கிறது. அதற்குள் ஆடு ஒன்றை உட்செலுத்தினால் இரத்தம், சதை, எலும்பு, தோல் என்பன வெவ்வேறாக வெளிவரும் என்று. அதற்கு எமது நாட்டவர், "எமது நாட்டிலும் ஒரு இயந்திரம் இருக்கிறது. அதற்குள் இரத்தம், சதை, எலும்பு, தோல் ஆகியவற்றைப் போட்டால் ஆட்டுகுட்டியொன்று வெளிவரும்" என்று சொன்னாராம்.

எனவே இயற்கையின் படைப்புக்கள், மனிதர்களின் படைப்புக்கள் போல் அல்லாது ஒரே மூலப் பொருளாகிய கலத்திலிருந்து பரிணாம விதியினூடாக படைக்கப்பட்டு பரம்பரை அலகு (மரபணு) ஊடாகப் பிரதி பண்ணப்படுகிறது. மேலும், அனைத்துப் படைப்புக்களையும் மதிநுட்பமாக ஆராய்ந்தால் முன்னமே தீர்மானிக்கப்பட்ட கலைத்துவ அறிவின் ஆற்றல், இயற்கைக்கு (இறைவன்) உண்டென்பது புரிய வரும். மேலும் சுவை உணர்ச்சியைத் தாண்டி, உணவையுண்டு உயிர்வாழத்தூண்டுவது போல் காம உணர்ச்சியைத் தூண்டி புணர்வில் ஈடுபட வைத்து உயிரின பரம்பலைத் தூண்டுவது மட்டுமல்ல. (வளரும்)

# புவியின் தோற்றமும் பாதுகாப்பு முறையும்

அருணா தர்மலிங்கம்



"இற்றைக்கு ஐயாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் சூரியனில் திடீரென உண்டான அதிர்வின் பயனாக அதி வெப்பத்துடன் கூடிய வாயுத்திணிவு ஒன்று உருவாகியது.

**இன்**றைய காலகட்டத்தில் சர்வதேச விண்ணியலாளர் (Astronomers) ஒன்றுகூடி சூரிய மண்டலத்திலே எட்டுக்கோள்கள் மட்டுமே நிலைகொண்டுள்ளன என்று அறிவித்துள்ளனர். ஆகவே நவக்கிரகங்களுள் ஒன்றாகத் திகழ்ந்து வந்த புளூட்டோவை (Pluto) கோள்கள் பட்டியலில் இருந்து நீக்கி விட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

ஆகவே எட்டுக் கிரகங்களாகிய சூரியன் (Sun), சந்திரன்(Moon), அங்காரகன்(Mars), புதன்(Mercury), குரு(Jupiter), சுக்கிரன் (Venus), சனி(Saturn), நெப்ரியூன் (Neptune) மற்றும் பூமி(Globe) என்பவற்றில் மானிடர் நிம்மதியாக வாழக்கூடிய கோளாகக் கருதப்படுவது நாம் வாழுகின்ற புவி என்பது நிதர்சனம் ஆகும்.

பூமியின் வடக்கு மற்றும் தென் துருவங்கள்(North & South Poles) நீங்கலாக ஏனைய கண்டங்களில் மக்கள் களிப்புடன் வாழக்கூடிய தட்ப வெப்ப நிலை நிலவுகின்றது.

எனவே பூமியின் தோற்றம், தட்ப வெப்ப நிலை, சமுத்திரம், கனிமங்கள், ஓசோன் படை, பூமியின் பாதுகாப்பு போன்றவற்றை விரிவாக ஆராய்வது இங்கு உசிதமாகும்.

இற்றைக்கு ஐயாயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் சூரியனில் திடீரென உண்டான அதிர்வின் பயனாக அதி வெப்பத்துடன் கூடிய வாயுத்திணிவு ஒன்று உருவாகியது. அதனால் ஏற்பட்ட வெடிப்பின் நிமித்தம் அத்திணிவு புறந்தள்ளப்பட்டு சூரியனை நீள்வட்டப் பாதையில் வலம் வரத் தொடங்கியது.

காலப்போக்கில் அது குளிர்ந்து ஒடுங்கி திண்ம நிலைக்கு வந்தது. அதுதான் பூமி என்பது விஞ்ஞானிகளது கருத்தாகும். அதே வேளை அங்கு பரிணமித்திருந்த பிராண வாயு (Oxygen), ஜதரசன்(Hydrogen) ஆகியன தாக்கம் பெற்று நீர் உண்டாகியதாம்.

புவியில் நீர் தோன்றியதுடன் உயிரினங்களும் தோன்றலாயின என்பது யதார்த்தம். விஞ்ஞானம், தொழில்நுட்பம், இலத்திரனியல் என்பன அபரிமித வளர்ச்சி கண்டுள்ளதினால் இன்றைய மனிதன் சுகபோக வாழ்க்கையையே அனுபவித்துக் கொண்டிருக்கின்றான். அவனது பேராசை காரணமாக பூமிக்கு உகந்த பாதுகாப்பைக் கொடுப்பதற்குப் பதிலாக, புவிக்கு பெரும் அச்சுறுத்தலை நல்கிய வண்ணம் உள்ளான்.



இனி, பூமியின் பரிணாமம் பற்றிச் சற்று நோக்குவோம். புவியின் குறுக்கு வெட்டு முகம் ஒன்றை அவதானித்தால் அதில் நான்கு படைகளைக் காணலாம். அவை முறையே புறணி, அப்பமெண்டில், லோவர் மெண்டில், இன்னலார்ப் என்பனவாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் தனிமையை உணர்கிறீர்களா?



மனிதர்கள் இயற்கையான வாழ்க்கை அமைப்பின் காரணமாகவோ, பார்க்கின்ற வேலையின் காரணமாகவோ அல்லது சூழ்நிலையின் காரணமாகவோ பெரும்பகுதி நேரத்தை தனிமையில் கழிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதற்காக அவர்கள் தனிமையில் இருப்பதாகச் சொல்ல முடியாது. தனித்து இருப்பதே தனிமையாகிவிடாது. தனிமை உணர்வைப் பெற்றிருப்பவர்கள் கூட்டத்தில் இருக்கும் போது கூட, தனிமையை உணர்வதுண்டு.

'ஒரு கூட்டத்திலும் என்னால் தனிமையாக இருக்க முடியும்' என்று பாடல் வரி ஒன்று சொல்கிறது. தனிமை உணர்வு என்பது மன நோய் தொடர்புடைய ஒரு நிலையாகும். அது பல்வேறு நிலைகளுக்கும் சென்று சஞ்சலம், அடிக்கடி உணர்ச்சி வசப்படல், மனச்சோர்வு ஆகிய கட்டங்களை அடைந்து இறுதியில் 'தனிமைப் பயம்' என்கின்ற நோயாக முற்றிவிடுவதும் உண்டு. அது எந்த நிலையில் இருந்தாலும், தனிமை என்பது விரும்பத்தக்கது அல்ல. மற்றவர்களுடன் சேராமல் தனிமையில் இருக்கும் எண்ணம் உங்களுக்குத் தோன்றுமானால், அந்த உணர்விலிருந்து விடுபடுவது எளிமையானது, நிலையானது. அவ்வாறு விடுபடுகின்றபோது, மகிழ்ச்சியின்மை குறைந்து, மகிழ்ச்சி அதிகரிக்கிறது.


மனவியல் நிபுணர்கள், 'தனிமை உணர்வு என்பது உங்களை நீங்களே விரும்பாத நிலை'' என்று சொல்கிறார்கள். தனிமையில் இருக்கும்போது, உங்களோடு நீங்கள் வாழ முடியாது போய், நீங்கள் உங்களை எதுவாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறீர்களோ, அதன் மீது கவனம் செலுத்துகின்ற நிலைஉருவாகும். தனிமை என்பது அமைதிச் சூழ்நிலையினையும் விரும்பாத ஒரு நிலை. உங்களை நீங்கள் என்ன செய்து கொள்வது என்பதில் மட்டுமே ஆழ்ந்து போகின்ற நிலை. கூட்டத்தில் இருக்கும்போதும் உங்களை நீங்கள் விரும்புவதில்லை.

பெரும்பாலான நேரத்தை யாருடன் நீங்கள் செலவிடுகிறீர்கள்? அவர்கள் எவ்வளவு நெருக்கமானவர்களாக இருந்தாலும், நட்பினராக இருந்தாலும் அவர்களில் எவரும் எப்போதும் உங்களுடன் இருக்க முடியாது. உங்களோடு அவர்கள் இருக்க முடியாத நேரங்களும் உண்டு. பெரும்பகுதி நேரத்தை நீங்கள் உங்களோடுதான் செலவழிக்க வேண்டும் என்பதால் உங்களை நீங்களே விரும்புவது அவசியமாகிறது.

உங்களுடைய ஆழ்மனம், உங்களிடம் புதைந்துள்ள விரும்பத்தகாத நினைவுகளை வரிசையாக மனதின் முன்கொண்டு வந்து நிறுத்துகிறது. அது உங்களுக்குப் பிடிப்பதில்லை. மிருதியான உணர்ச்சியுடையவர்கள், பிறருக்கு தொந்தரவு கொடுத்து விமர்சிக்கின்றவர்கள், விரும்பத்தகாத இந்த நினைவுகளின் பாதிப்பால், மற்றவர்களைப் புண்படுத்துவதாக மனவியல் நிபுணர்கள் கண்டுபிடிக்கிறார்கள்.

மற்றவர்களோடு நீங்கள் இணக்கமாகப் பழக முடியுமானால், உங்களுடனும் நீங்கள் இணக்கமாகப் பழக முடியும். தனிமை உணர்வின் அடிப்படைக் காரணத்தை நீக்கிக் கொண்டவராக நீங்கள் ஆகிவிடுவீர்கள். ஆனால், தனிமையில் இருக்கும் போது நீங்கள் என்ன செய்ய வேண்டும்? ஒன்றும் செய்யாமலிருப்பது எவ்வளவோ பயனுடையதாக இருக்கும். இதன் உண்மையான பொருள் என்னவென்றால், உடல் இயக்கமே இல்லாத ஒரு நிலையாகும். தனிமை உணர்வை போக்கிக்கொள்ள சுறுசுறுப்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியம். உங்கள் முழுக் கவனத்தை ஈர்க்கின்ற எதிலும் நீங்கள் ஈடுபடலாம். இதனால் சுகமான அனுபவத்தைப் பெறுவீர்கள்.

**உங்களை நீங்களே நேசிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்!**



மருத்துவர் நி.தர்ஷனோதயன்,
வைத்திய அதிகாரி,
மன்னார் ஆயுர்வேத
வைத்தியசாலை, மன்னார்.

# புத்தகசாலை

## நூல்: 'சிந்திக்க செயற்பட'




சிந்திக்கவும் பொது அறிவினை வளர்த்துக் கொள்ளவும் ''சிந்திக்க செயற்பட'' எனும் நூலை வே.இறைபிள்ளை, இ.அருணாசலம் என்போர் சேர்ந்து வெளியிட்டுள்ளனர். உலகளாவிய நிலையிலே வினாக்கள் பல அமைந்தாலும், தமிழ் மொழி, தமிழர் வரலாறு, தமிழ்ப் பண்பாடு, தமிழ் இலக்கியம் என்பன பற்றியே பெரும்பாலான வினாக்கள் இந்த நூலில் வெளிவந்துள்ளன.

தமிழ் மேம்பாடு, சமுதாய மேம்பாடு பற்றி முறையாகச் சிந்திக்கவும், நெடும் நோக்கில் வழிவகைகளை உருவாக்கி உறுதியோடு முன்னோக்கிச் செல்லவும் இந்த நூல் பயன்படும்.

எதிர்கால இளம் சந்ததி தமிழ் மொழியில் சிறப்பாக துலங்க வேண்டும் என்பதற்காக தமிழ் சார்ந்த பல்துறை வினாக்களைத் தேடி எடுத்து அவற்றுக்கு முறையாக விடைகளையும் தந்திருக்கும் இவர்களுடைய முயற்சி பாராட்டத்தக்கது.

தமிழைச் சரியாக உச்சரிக்கவும், தமிழைச் சரியாக எழுதவும், தமிழைச் சரியாகப் பேசவும் பழக்கப்பட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு இந்த நூல் மைல் கல்லாக அமையும்.

பிறைவாணன்

## நூல்: நங்கூரம்





இந்த ஆண்டுக்கான முதலாவது நங்கூரம் இதழ் வெளிவந்துள்ளது. ''விரல் நுனியில் விபரீதம். மருந்துக்கு அடிமையாகும் மாத்திரை மனிதர்கள்'', 'இனி விடிந்தது எழுந்திருங்கள்', ''நாளைய உலகை ஆளப் போகும் நனோ தொழில்நுட்பம்', 'காய்ந்து போன செவ்வாயின் ஆறுகள்' போன்ற கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது.

மேலும் ''நான் ஒரு வழிகாட்டிப் பறவை' என்ற அசோகனுடனான நேர்காணலுடன் கண்டுபிடிப்புகள், 'குடிநீரில் பிளாஸ்ரிக் விஷம்', 'தெரியுமா'?, 'கெடு விளைவினை', 'தகவல் களஞ்சியம்', 'பலதும் பத்தும்', போன்ற அம்சங்கள் உள்ளடங்கியுள்ளன. பூமி மட்டும் சூடாகுவதில்லை என்ற சிறுகதையையும் கொண்டுள்ளதுடன் பேறு என்ற கவிதையும் கடைசிப் பக்கத்தை அலங்கரிக்கிறது.

செல்வா

## நூல்: 'தெணியானின் ஜீவநதிச் சிறுகதைகள்'




'ஜீவநதி' சஞ்சிகையில் வெளிவந்த தெணியானின் சிறுகதைகளைத் தொகுத்து ஜீவநதி பதிப்பு ''தெணியானின் ஜீவநதிச் சிறுகதை கள்'' எனும் தலைப்பில் சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சமூகக் கொடுமைகளைக் கண்டு கொதித்து, அவற்றைத் தமது படைப்புகளாகத் தந்த எழுத்தாளர் தெணியான், குறிப்பாக சாதி அமைப்பின் அவலங்கள் குறித்து சிறுகதைகளைப் படைத்த எழுத்தாளர் என்ற சிறப்பையும் படைத்தவர். எழுத்துத்துறையில் கால்பதித்து ஐம்பது ஆண்டுகளை அவர் நிறைவு செய்து கொள்வதைக் கௌரவிக்கும் வகையில் ஜீவநதி பதிப்பகம் இந்த நூலை வெளியிட்டுள்ளது.

சமகால இலக்கியப் படைப்பான இந்த நூல் சமூகத்தின் கொடுமைகளை கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. கற்பனைப் பாத்திரங்களாக இல்லாமல் நிஜ வாழ்க்கையை வெளிப்படுத்தி இருக்கும் இந்த நூல் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தி இருக்கிறது.

உதயன்

## நூல்: 'தாமோதரன்'




மாணவர்களிடம் எழுத்தாற்றலைத் தூண்டும் வகையில் யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியினால் ஆண்டு தோறும் ''தாமோதரன்'' இதழ் வெளியிடப்படுகிறது.

அந்த வகையில் இந்த ஆண்டும் 109 ஆவது இதழாக ஆசிரியர், மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி தாமோதரன் இதழ் வெளிவந் துள்ளது.

மாணவர்களின் கவிதை, கட்டுரை என விரியும் பக்கங்களில் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வுகளும் நிழல் படங்களாகப் பிரசுரமாகியுள்ளன.

262 பக்கங்களை உள்ளடக்கி வெளிவரும் இந்த இதழ் மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் என்பது நிச்சயம். கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கும். ''தாமோதரன்'' இதழ் கல்லூரியை முழுமையாக வெளிப்படுத்துகிறது. ஆண்டு தோறும் தாமோதரன் இதழை வெளியிடும் கல்லூரிச் சமூகத்தின் பணி பாராட்டுக்கு உரியதொன்று.

கேதுஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதற்றத்தை வெல்ல சில வழிகள்

இ.இணையவன்

பதற்றம், பல்வேறு நிலைகளில் பல்வேறு விதங்களில் மனிதர்களைப் பாதிக்கிறது. பதற்றம் என்பது ஒரு மனநோயன்று.

ஆனால், அதைத் தொடக்கத்திலேயே நாம் கிள்ளியெறிய மறந்தால் அது மனநோய்க்கு வித்தாகி விடக்கூடும். எனவே பதற்றம் எதனால் உண்டாகிறது, அதனை எப்படித் தவிர்க்கலாம் என்று அறிய வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?**

1. எமது எண்ணங்களே வாழ்வின் அடிப்படை. எமது நேர்மறை எண்ணங்கள் எமக்கு நற்பலனையும், எதிர்மறை எண்ணங்கள் தோல்வியையும் உண்டாக்குகின்றன. தவறு செய்து விடுவோமோ என்ற அச்சத்துடன் செய்யும் வேலைகள் தவறாகவே தான் முடியும்.

2. எனவே எதிர்மறையான சிந்தனைகள் தோன்றும் பொழுது கவனமாக உங்கள் மனத்தை வேறு நேர்மறை எண்ணங்களுக்குத் திருப்புங்கள். ஆரம்பத்தில் கொஞ்சம் கடினமாக இருக்குமானாலும் கொஞ்ச நாளில் உங்கள் மனம் தானாகவே நேர்மறைக்கு மாறிவிடக் காண்பீர்கள்.

3. ஒரு தாளைக் கையில் எடுத்துக் கொள்ளுங்கள். உங்களிடம் உள்ள குறைபாடுகள் என்னென்ன? எந்தெந்த விடயங்கள் உங்களுக்குப் பதற்றத்தைத் தூண்டுகின்றன எனப் பட்டியலிடுங்கள். பின் நிதானமாக அந்தக் காகிதத்தைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் எறியுங்கள். இந்தக் குறைபாடுகள் என்னைவிட்டு வெகு விரைவில் நீங்கிவிடும் என்றும், இனி இந்தச் சூழல் என்னை அச்சுறுத்தாது என்றும் எண்ணுங்கள்.

4. இத்தகைய சூழலை எதிர்கொள்ளும் தெம்பு எனக்கிருக்கிறது என்றும் திடமான குரலில் உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள். சுய அறிவுரை என்ற இந்த முறை ஆழ்மனத்தில் உங்களைப் பற்றி நீங்களே பதித்து வைத்திருக்கும் தவறான விம்பத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அழித்துவிடும்.

5. உங்களிடம் உள்ள திறமைகள் மற்றும் உங்கள் நிறைகள் என்னென்ன என்பதைப் பட்டியலிடுங்கள் (குறைந்த பட்சம் பத்து). எனக்கு எந்தத் திறமையுமே இல்லை என்று பதில் சொல்லாதீர்கள்.

6. ''எறும்பும் தன் கையால் எட்டுச் சாண்'' என்பார் ஔவைப் பாட்டி. இனிமையான குரலா, உயரமா, நினைவு வைத்துக்கொள்ளும் திறமா, கணக்கில் புலியா, வேகமாக ஓட வல்லவரா, சமையலில் திறமைசாலியா, பிறருக்கு உதவும் குணமும் மனமும் உள்ளவரா? என்னென்னவெல்லாம் உங்களுடைய நல்ல குணங்கள் அல்லது திறமைகள் என்று கருதுகிறீர்களோ, அவை எல்லாவற்றையும் பட்டியலிட்டுப் பாருங்கள். உங்கள் மனம் சோர்வடைகையில் அந்தப் பட்டியலை எடுத்துப் படித்துப் பாருங்கள்.

7. நீங்கள் என்னென்ன செய்ய விரும்புகிறீர்கள் அல்லது வாழ்வில் உங்கள் இலக்கு என்ன? இதைச் சற்று ஆழ யோசியுங்கள். இந்தப் பதற்றம் அதற்கு எந்த வகையில் தடையாக இருக்கும் என்பதைச் சிந்தித்து, இதிலிருந்து வெளியில் வந்தே தீருவேன். என் இலக்கை அடைந்தே தீருவேன் என்று இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் உரக்கச் சொல்லிக்கொள்ளுங்கள்.

8. காலை எழுந்தவுடன் கண்ணில் படுகின்ற மாதிரியான இடத்தில், நல்ல



ஆரோக்கியமான பொன்மொழிகள், உற்சாகமூட்டும் சுவரொட்டிகள் இவை இருக்குமாறு ஏற்பாடு செய்துகொள்ளுங்கள். இரவு படுக்கைக்குச் செல்லுமுன், சிறியதோ பெரியதோ, உங்களுக்கு நடந்த நன்மை ஒன்றை நினைவு படுத்திக் கொள்ளுங்கள்.

9. எப்பொழுதும் ஏதாவது பரபரப்பாகச் செய்துகொண்டு இருங்கள். ''Idle man's brain is devil's workshop' என்பது ஆங்கிலப்பழமொழி. தனியாக இருக்கும் போதும், வேலையில்லாமல் இருக்கும் போதும், எமது மனக்குரங்கு பல கிளைகளில் தாவித்தாவிச் செல்லும். அவ்வாறு அக் குரங்குதாவும் பல நினைவுக்கிளைகள் எதிர்மறையானதாக இருக்கும். எனவே மனத்தை அலைபாயவிடாமல் ஒரு நிலைப் படுத்த வேண்டுமானால், உடலுக்கும் மனதுக்கும் வேலை கொடுத்துக்கொண்டே இருப்பது அவசியம்.

10. தியானம் பதட்டத்துக்கு அருமருந்து. தியானமும், மூச்சுப்பயிற்சியும் பதட்டத்தைப் பெருமளவு கட்டுப்படுத்தக் கூடியவை. முடிந்தால் முறையாக ஒரு குருவை நாடி தியானம், யோகா, முதலியவற்றைக் கற்றுக்கொள்ளுங்கள்.

11. முடியாத பட்சத்தில், மெல்லிய இசையை ஒலிக்க விட்டு (ஓம் என்ற ஒலி மனதை ஒருநிலைப்படுத்துவதற்குப் பெரிதும் உதவுகிறது. இல்லையென்றால் தியானத்துக்கென்றே சீராக ஒலிக்கும் இசைத்தட்டுகள் கிடைக்கின்றன, அவற்றையும் பயன்படுத்தலாம்.) கண்களை மூடி இசையினையும் உங்கள் சுவாசத்தையும் மட்டும் கவனித்தவாறு பத்து நிமிடங்கள் அமர்ந்திருங்கள்.

12. உங்கள் மனம் உங்கள் கட்டுப்பாட்டை விட்டு நழுவி வேறு எண்ணங்களுக்குச் செல்லத்தான் செல்லும். ஒவ்வொரு முறையும் அதைப் பிடித்து இழுத்து வருவது உங்கள் பொறுப்பு. நாள்பட நாள்பட தியானம் செய்வது பழகிவிடும். உங்கள் ஒருமுகப்படுத்தும் திறனும் கூடிவிடும்.

13. உங்களை உணர்ச்சிவசமாக்கும் செய்திகளை, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இரவில் படுக்கைக்குச் செல்லுமுன் தவிர்த்துவிடுங்கள். உங்கள் நண்பர்களில் கூட எப்பொழுதும் யாரை யாவது எதிர்மறையாக விமர்சிக்கும், கேலி செய்யும் நபர்கள் இருந்தால் அவர்களை விட்டு விலகியே இருங்கள். நேர்மறைச்சிந்தனை, உற்சாகம் இவற்றுடன் இருப்பவர்களுடன் உங்கள் நட்பை உருவாக்கிக்கொள்ளுங்கள்.

14. உங்கள் நண்பர்கள் அல்லது உறவினர்களில் யார் உங்கள் நம்பிக்கைக்குரியவரோ அவரிடம் உங்கள் மனத்தில் உள்ள சுமைகளை, சந்தேகங்களை, பயங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள். புதியவர்களுடன் பழக நேர்ந்தால் எப்படிப் பழகுவது, ஒரு குழுவில் பேசுவது எப்படி என்றெல்லாம் அவருடன் சேர்ந்து பயிற்சி செய்து பாருங்கள்.

15. நீங்கள் புதிய இடத்தில் பலருடன் கலகலப்பாகப் பழகுவது, பொது இடத்தில் தைரியமாக உரையாடுவது, ஆய்வரங்கில் கலந்து கொள்வது இவை போல நேர்மறையாகக் கற்பனை செய்து பாருங்கள்.

16. அழகாக, கம்பீரமாக உடை அணியுங்கள். நிமிர்ந்து நில்லுங்கள்; நடவுங்கள். உங்களைக் கண்ணாடியில் பார்க்கையில் உங்களுக்கு தன்னம்பிக்கை ஊற்றெடுக்க வேண்டும். கண்ணாடி முன் நின்று பேசிப் பழகுங்கள்.

17. நிறைய நகைச்சுவைப் புத்தகங்கள், தன்னம்பிக்கை அளிக்கும் நூல்கள், பொது அறிவை மேம்படுத்தும் புத்தகங்கள் அல்லது இவை தொடர்பான வலைத்தளங்களைப் படியுங்கள்.

18. தண்ணீரில் இறங்காமல் கரையில் நிற்கும்வரை நீச்சல் பழகுவது என்பது முடியாத காரியம்.

19. நீங்களாகவே பேருந்தில் பக்கத்தில் அமர்ந்திருக்கும் உங்கள் சக பயணியிடம் மெல்லப் பொது விஷயங்களைப் பற்றிப் பேச்சுக் கொடுப்பது, உங்கள் நண்பர்கள் மத்தியில் ஒரு புதிய கதை அல்லது நகைச்சுவைத் துணுக்கைப் பகிர்ந்துகொள்வது என்று மெல்ல மெல்லப் பயிற்சி செய்யுங்கள்.

20. உங்கள் அலுவலகக் கூட்டங்களில் குறைந்த பட்சம் ஒரு கேள்வி கேட்பது அல்லது ஒரு யோசனை சொல்வது என்று முடிவு செய்து அதைச் செயல்படுத்திப் பாருங்கள்.

கொஞ்ச நாளில் ''பதற்றமா! அது என்னை விட்டுப் போயே போச்சே'' என்பீர்கள். ★

# சீரிய நடத்தையே மாமனிதனுக்கான அடையாளம்!



சரியான நடத்தை நெறிமுறைகளை கடைப்பிடிப்பவர், பிறரிடத்தில் சிறந்ததாக்கத்தை ஏற்படுத்துவதோடு, நன்மதிப்பையும் பெறமுடியும். உற்சாகம், நாகரிகம், அன்புடைமை, தூய்மை மற்றும் அழகியல் நயம் முதலிய பண்புகள் சிறப்பான ஆளுமையைக் கட்டமைப்பதில் முக்கியப் பங்கு வகிப்பவை. எனவே இத்தகையப் பண்புகளை நாம் உதாசீனப்படுத்த இயலாது. சிலர், இத்தகைய பண்புகளைத் தமது பள்ளிப் பருவத்திலேயே பெற்றுக்கொள்கிறார்கள். ஆனால், பலருக்கு இந்தப் பண்புகள் வாழ்வின் பெரும் பகுதி வரைக்கூட கிடைப்பதில்லை. நல்ல ஆளுமையை மேம்படுத்திக் கொள்வதற்கான சிறந்த நடத்தை நெறி முறைகளை ஒருவர் ஒரு குறிப்பிட்ட வயதிற்குள் தான் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. நல்ல பண்புகளை வளர்த்துக்கொள்ள வயது ஒரு தடையே இல்லை. ஆளுமைப் பண்புகள், பொதுவாக, பெற்றோர் மற்றும் ஆசிரியர்களால் அறிமுகப்படுத்தப்படுகின்றன. அதே சமயம், எமது ஆளுமைக் கட்டமைப்பு வரவேற்பைப் பெறுவதும், எதிர்ப்பைப் பெறுவதும், நாம் வாழும் சமூக சூழ்நிலையைப் பொறுத்தே. ஏனெனில், நமது சொந்த சமூகத்தில் எமது பெரியவர்கள் பின்பற்றும் முறைகளை சரியென்று நினைத்து அதையே பின்பற்றுவோம். அது எமது சமூகத்துக்கு ஒத்துப்போய்விடும். ஆனால், அதேப் பழக்கவழக்கத்தை வேறொரு சமூகத்தில் கடைப்பிடிக்கையில் சிக்கல் உண்டாகும்.

மாணவர்கள் மற்றும் இளைஞர்களிடையே சில பொதுவான விரும்பத்தகாத பழக்கவழக்கங்கள் இருக்கின்றன அவையாவன:

★ பொது இடங்களில் அல்லது வகுப்பறையிலோ நகத்தைக் கடிக்கும் பழக்கம்.
★பலரின் முன்னிலையில் பல் குத்துதல்.
★சாப்பிடும்போதோ அல்லது தண்ணீர் அருந்தும் போதோ, அருவருப்பான சத்தத்தை ஏற்படுத்தல்.
★பொது இடத்தில் மூக்கு நோண்டுதல்.
★பொது இடத்தில் சிறுநீர் கழித்தல்.
★பொது இடத்தில் எச்சில் துப்புதல்.
★மொபைல் அல்லது தொலைபேசியில் பேசும் போது, பிறருக்குத் தொந்தரவு ஏற்படும் வகையில் மிகவும் சத்தமாகப் பேசுவது.
★சாலையை நினைத்த இடத்தில் கடப்பது.
★ஒருவர் அமர்ந்திருக்கையில், அவருக்கு முதுகு காட்டி அமர்தல்.
★அலுவலக மேசையில் அமர்வது.
★பெண்கள் முன்பாக ஆபாசமான விஷயங்கள் மற்றும் நகைச்சுவைத் துணுக்குகளைப் பகிர்வது.
★ஒருவரின் உடல் ஊனம் அல்லது அறியாமையைப் பார்த்துக் கிண்டலடிப்பது.
★பூங்கா போன்ற இடங்களில் புல் மீது நடப்பது.
★ஒரு தெருவில் அல்லது பலர் வரும் வழியில் நண்பர்களுடன் நடந்து செல்கையில், பிறரைப் பற்றி கவலைப்படாமல், பாதையை ஆக்கிரமித்துக் கொண்டு செல்வது.
★வரிசை இருக்கும் இடத்தில் அதை மதிக்காமல் நடந்து கொள்வது.
★ஒரு கலந்துரையாடலில், பிறரை பேசவிடாமல், தானே முந்தி முந்திப் பேசுவது.
★ஒரு பேருந்திலோ அல்லது ரயிலிலோ பயணம் செய்கையில், வயதானவர்கள் அல்லது மாற்றுத்திறனாளிகள் வந்தால் அவர்களுக்கு எழுந்து இடம் கொடாமல் அமர்ந்திருப்பது.
★ தடை செய்யப்பட்ட இடத்தில் மற்றும் பிறருக்குத் தொந்தரவான பொது இடத்தில் புகைப் பிடிப்பது.
★பிறரின் அறை அல்லது இல்லத்தினுள் அனுமதியின்றி நுழைவது.
★ வதந்தியைப் பரப்புதல்.

போன்ற பல விஷயங்களைச் சொல்லலாம். இவற்றை ஒவ்வொரு மனிதனும் கட்டாயம் விட்டொழிக்க வேண்டும்.

(தொடரும்)

இ.வலையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலியைக் கொன்ற அதிசய பசுக்கள்!



சென்ற வாரத் தொடர்ச்சி............

இவ்வாறு ஏகப்பட்ட மாடுகளைத் திருடி விற்றுவிட்ட கஜராஜனுக்கு சில மாதங்களாகத் திருடுவதற்கு மாடுகளே கிடைக்கவில்லை. ஒருநாள் நான்கு கொழுத்த மாடுகளை அங்கே கண்டதும் அவனுக்குப் பயங்கர மகிழ்ச்சி உண்டாகியது. கூடவே, மாடுகளை மேய்க்க வந்த முத்துவையும் பார்த்தான். விடயம் தெரியாத புதிய ஆள் ஒருவன் மாடுகளை மேய்க்க வந்திருக்கிறான் என்று கஜராஜன் புரிந்து கொண்டான். அந்த மாடுகள் நான்கையும் கடத்தி செல்லத் தீர்மானித்து, ஒரு புதரினுள் பதுங்கிக் கொண்டான். முத்து தன் மாடுகளை கவனிக்காமல் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து குழல் ஊதத் தொடங்கியமை கஜராஜனுக்கு வசதியாகப் போயிற்று.

புதரில் பதுங்கிய கஜராஜன் புலியைப் போல் உறுமினான். அவன் எதிர் பார்த்ததுபோல் மாடுகள் பயந்து ஓடவில்லை. அவன் பதுங்கியிருந்த புதரைச் சூழ்ந்து கொண்டு, புலி வெளியே வந்தால் தாக்கத் தயாராயின. புலியின் உறுமலைக் கேட்ட முத்து, தன் மாடுகள் புதரைச் சூழ்ந்து கொண்டு தாக்கத் தயாராயிருப்பதைக் கண்டு வேடிக்கை பார்க்க எழுந்து நின்றான்.

தனது முதல் சூழ்ச்சி பலிக்கவில்லை என்று அறிந்த கஜராஜன் உடனே சிங்கத்தைப் போல் கர்ஜித்தான். என்ன ஆச்சரியம்? அந்த மாடுகள் அப்போதும் பயப்படாமல் புதரைச் சுற்றி நின்றன. தங்கள் கொம்புகளை ஆக்ரோஷத்துடன் ஆட்டிக் கொண்டே சீறின. கஜராஜன் நடுநடுங்கிப் போனான். அவன் இதைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

மாடுகளைக் கடத்தித் திருடும் எண்ணத்தை விட்டு, தான் உயிர் பிழைத்தால் போதும் என்று நினைத்தான். எப்படியாவது முயற்சி செய்து மாடுகளைப் பயமுறுத்த எண்ணி, புலியின் குரலிலும், சிங்கத்தின் குரலிலும் மாறி மாறி ஒலியெழுப்பினான். ஆனால் அந்த மாடுகள் சிறிதும் பயப்படவில்லை. ஆனால் கஜராஜனின் உரத்த கர்ஜனையைக் கேட்டு கிராமத்திலிருந்த ஆடு, மாடுகள் பயத்தில் சிதறி ஓடலாயின.

அதற்குள், முத்து கிராமத்துக்குச் சென்று அங்கிருந்த மக்களிடம் ''என் மாடுகள் புலியையும், சிங்கத்தையும் புதருக்குள் முற்றுகையிட்டு விட்டன. இன்னும் சற்று நேரத்தில் அவை புதரில் புகுந்து அவற்றைக் கொம்புகளினால் குத்திக் கிளறும் காட்சியைப் பார்க்க வாருங்கள்'' என்று கூவி அழைத்தான். ஆனால் பலர் அவன் சொல்வதை நம்பவில்லை. தைரியமுள்ள சிலர் மட்டுமே அந்த அதிசயக் காட்சியைக் காண வந்தனர்.

அங்கு அவர்கள் ஒரு புதரைச் சுற்றி முத்துவின் மாடுகள் முற்றுகையிட்டுச் சூழ்ந்திருப்பதைக் கண்டனர். ''முத்து, புலியும் சிங்கமும் எங்கே?'' என்று அவர்கள் கேட்டனர். ''என் மாடுகளுக்குப் பயந்து அவை புதருக்குள் பதுங்கியுள்ளன. அவற்றை வெளியே வரச் செய்தால் போதும்! அப்புறம் பாருங்கள் நடப்பதை!'' என்றான் முத்து.

உடனே அங்கு இருந்தவர்கள் கற்களைப் பொறுக்கிப் புதருக்குள் வீசினர். கல்லடி தாங்க முடியாத கஜராஜன் வெளியே வர, அவன் மீது மாடுகள் பாய்ந்து கொம்புகளால் குத்திப் புரட்டிப் போட்டு விட்டன. குற்றுயிரும், குலையுயிருமாய் வெளியே வந்த கஜராஜனைக் கண்டு மக்கள் திகைத்துப் போயினர்.

அனைவர் முன்னிலையிலும் கஜராஜன் தன் குற்றத்தை ஒப்புக் கொண்டான். கிராமத்தினரின் கோபம் எல்லைமீற, அவர்கள் கஜராஜனை அடித்துத் துவைத்தனர்.

அன்றுமுதல், முத்து அந்த கிராமத்துக்குத் தலைவன் ஆகிவிட்டான். கிராமத்தினரும் பயமின்றி தங்கள் கால்நடைகளை அங்கு மேய்க்க அனுப்பினர்.

(முற்றும்)

## நாடுகளின் பண்டைய பெயர்கள்

| தற்போதுள்ள பெயர் | பண்டைய பெயர் |
|---|---|
| மியன்மார் | - பர்மா |
| சிம்பாப்வே | - றொடீசியா |
| ஈரான் | - பாரசீகம் |
| ஸைரே | - கொங்கோ |
| எத்தியோப்பியா | -அபிசீனியா |
| ஈராக் | - மெசப்பெத்தோமியா |
| நெதர்லாந்து | - ஒல்லாந்து, ஹொலண்ட் |

சி.சிந்து, சதாபலை தெற்கு.

## இலங்கையின் பிரதான ஆறுகள் கடலுடன் கலக்கும் இடங்கள்

மகாவலி கங்கை- திருகோணமலை
களுகங்கை - களுத்துறை
களனி கங்கை - கொழும்பு
வளவ கங்கை - அம்பாந்தோட்டை
நில்வள கங்கை - மாத்தறை


த. அபிதா, தரம் 5,
யா/இராமநாதன் கல்லூரி.

## பொது அறிவு

* இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர்– ஆனந்த சமரக்கோன்
* எயிட்ஸ் ஏற்படுத்தும் கிருமி – எச்.ஐ.வி
* இலங்கையில் உள்ள விஞ்ஞானக் கற்பனை எழுத்தாளர் – ஆதர் சி.கிளார்க்
* உளவியலின் தந்தை என வர்ணிக்கப்படுபவர் – சிக்மன் புறொய்ட்
* கணினியின் தந்தை யார் – சாள்ஸ் பபேஜ்
* இந்தியாவின் முதலாவது பிரதமர் – ஜவஹர்லால் நேரு
* 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நாடு எது– சீனாவின் பீஜிங்
* சுனாமி அனர்த்தம் இலங்கையில் ஏற்பட்ட நாள்– 26.12.2004
* விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துக்கு முதன்முதல் அனுப்பப்பட்ட மிருகம் – நாய்
* இலங்கையின் தேசிய விளையாட்டு – எல்லே
* ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு – 1945
* தற்போது பாப்பரசராக இருந்து விலகியவர் – ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த ஜோசப் ரட்சிசிங்கர்

நா.ஸ்ரீகிருஷ்ணா, தரம் 4ஏ
யாழ்ப்பாணக் கல்லூரி.

## மக்கள் மனமும் மகிழாதோ!





காலையில் உதிக்கும் உதயனே
கதிரவன் என்ற பெயரோனே
மழையினைத் தந்திடும் உதயனே
நீ மாலையில் மட்டும் மறைவதேன்?
கோள்களுக்கெல்லாம் தலைவனாம்
கோள்களில் பெரிய உதயனே
பாரினைச் சுற்றி வருவதால்
பானு என்று பெயர் பெற்றாய் நீ,
விண்ணில் உலாவரும் விண்மணியே
ஒருமுறை மண்ணில் வாராயோ?
மண்ணில் மட்டும் நீ வந்தால்
மக்கள் மனமும் மகிழாதோ?

சி.ஹரிஹரன், தரம்-4E,
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை.

## இன்றைய காலத்தில் சிறுவர்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

''கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே''

என்று பாடினார் வெற்றி வேற்கை தந்த புலவர் அதி வீரராம பாண்டியர். இவரது பாடல் கல்வியின் அவசியத்தை எடுத்து இயம்புகின்றது. இலங்கையில் ஏற்பட்ட போர் இடர் காரணமாக பல ஆயிரக் கணக்கானோர் தமது கல்வியை இழந்து இன்று பரிதவிக்கின்றனர் இதில் சிறுவர்கள் முதலிடத்தைப் பெறுகின்றனர். போர் இடர் காரணமாக பல சிறுவர்கள் இன்று தமது பெற்றோரை இழந்து அனாதரவாக சிறுவர் இல்லங்களில் இருந்து கொண்டு தமது கல்வியைத் தொடர்கின்றனர்.

ஆனால் பல சிறுவர்கள் தமது குடும்ப வறுமை காரணமாக வேலைக்குச் செல்ல வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சில சிறுவர்கள் நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக தமது பிள்ளைகளுக்குப் பெற்றோர் சிறு வயதிலேயே திருமணம் செய்து கொடுத்தனர். வயதில் குறைந்த வர்களில் சிலர் இன்று குடும்பப் பொறுப்புக்களைக் கூட ஏற்றுள்ளனர்.

அத்தோடு மட்டும் நில்லாது பெற்றோர்கள் சிலர் தமது பிள்ளைகள் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவதைக் கண்டும் காணாமலும் நடந்து கொள்கின்றனர். இதனால் சிறுவர் எதிர்காலக் கல்வியை இழந்து தமது கல்வியில் அக்கறை காட்டாது தவறான பாதைக்கு செல்கின்றனர்.

இன்று சிறுவர் பலர் கல்வியை இழந்து 'சிறகிழந்த பறவை போல' சமூகத்தில் காணப்படுகின்றனர். சில பெற்றோர்கள் வறுமை, அறியாமை, அலட்சியம், காரணமாக தம் பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தாது விடுகின்றனர். இதனால் வருங்கால பிரசைகளான சிறுவர்கள் பலர் கல்வி பெறும் வாய்ப்பை இழக்கின்றனர்.

அத்தோடு மட்டும் அல்லாது வீட்டு வேலைகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் கூலித் தொழில்களுக்கும் செல்லும் மாணவர்கள் பிற்காலத்தில் கல்வியின் அருமையை அறியாது இரங்க வேண்டிய நிலை உருவாகும். 'இருளில் ஆழ்ந்தும்', கல்விக் கண்ணை இழந்தும் தவித்திட நேரிடும். எனவே பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதில் பெற்றோர்களும் தவறிழைக்கின்றனர் என்பது ஓர் கவலைக்குரிய விடயமாகும். எனவே சிறுவர்களைச் சிறந்த கல்விமான்களாகத் திகழச் செய்வது எமது அத்தியாவசிய கடமையாகும். நாட்டின் அபிவிருத்திக் கல்வி அறிவு என்பது முக்கியமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு வேலி அமைப்போம் என்று பலர் கூறினர். தமது பதவிகளுக்காகவே இப்படி கூறுகின்றனர். பலர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் சிறுவர்களின் உண்மையான பிரச்சினைகளை அலசி ஆராய்வதில்லை. இது தான் உண்மை. அப்படி ஆராய்ந்தால் உறுதியான தீர்வு கிடைக்கும். 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்இரண்டும் கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்று கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர்.

எனவே எமது நாட்டில் அறிவு மிகு சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும். சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுவதற்கு காரணமாக உள்ளவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறுவர்களைத் துன்புறுத்தல், பாலியல் பலத்காரம் செய்தல், கொலை செய்தல், அச்சுறுத்தல் என்பவை எல்லாம் முற்றாக துடைத்தெறியப்பட வேண்டும். இவையெல்லாம் எமது நாட்டில் சரியாகக் கடைக்கொள்ளப்படும் பட்சத்தில் நாடு முன்னேற்றப் பாதையில் செல்லும். சிறுவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

கா.மோகனதாஸ்
காந்தி நிலையம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org